
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஜனவரி 9 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN

வரு. 92 இல. 08 | Tuesday 09, January, 2024 | 16பக்கங்கள் | 50/-




# கொடுப்பனவுகளை அதிகரிக்கும் யோசனைகளுக்கு அனுமதி

## ஜனாதிபதியின் கோரிக்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம்

### இம்மாதமே வழங்க துரித நடவடிக்கைகள்

### மருத்துவர்களுக்கான 35,000 ரூபா கொடுப்பனவு 70,000 ரூபாவாக அதிகரிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனையை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. அரசாங்க ஊழியர்களுக்கான வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு, மருத்துவர்களுக்கான கொடுப்பனவு மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பேராசிரியர்களுக்கான கொடுப்பனவுகளை அதிகரித்து, இம் மாதத்திலேயே வழங்குவதற்கு நிதியமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையிடம் அனுமதி கோரியிருந்தார். இந்த யோசனைக்கே அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

2024 ஆம் ஆண்டு அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கவுள்ள 10,000 ரூபா வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவில் 5,000 ரூபாவை இம்மாதம் வழங்குவது, மருத்துவர்களுக்கான கொடுப்பனவான 35,000 ரூபாவை 70,000 ரூபாவாக அதிகரித்து வழங்குவது மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பேராசிரியர்களுக்கான கொடுப்பனவை 25% அதிகரிப்பது உள்ளிட்ட யோசனைகளை முன்வைத்து ஜனாதிபதி இந்த யோசனையை சமர்ப்பித்திருந்தார். இந்நிலையிலே இந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அந்தவகையில், அரசாங்க ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவில் 5,000 ரூபாவை இம்மாத சம்பளத்துடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பது உள்ளிட்ட இம்மூன்று யோசனைகளையும் விரைவாக நடைமுறைப்படுத்தவுள்ளதாக ஜனாதிபதியின் பொருளாதார ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க தெரிவித்துள்ளார்.


இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், கடந்த வருடத்தைவிட அரச வருமானம் திறைசேரிக்கு கிடைப்பது அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய உற்பத்தியில் 8.3% மாக இருந்த அரசாங்க வருமானம் தற்போது 10% மற்றும் 11% மாக அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ள அவர், இவ்வாறு அரசாங்கத்திற்கான வருமானம் அதிகரித்து வரும் நிலையில், அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கும் 06

# செங்கடலூடாக வரும் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்காவிடின் ஆபத்து

## சரக்கு கப்பல்களை பாதுகாக்கும் பணியில் மாத்திரமே இலங்கை செயற்படும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



செங்கடல் ஊடாக நாட்டுக்கு வருகைதரும் சரக்கு கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்காவிட்டால், கொழும்பு உள்ளிட்ட நாட்டின் துறைமுகங்கள் கடும் அச்சுறுத்தல்களுக்கு இலக்காகுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.


நேற்றைய தினம் ஜனாதிபதிக்கும் அமைச்சர்கள் சிலருக்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பிலே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இச்சந்திப்பில் அமைச்சர்களான மனுஷ நாணயக்கார, ஹரீன் பெர்னாண்டோ உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

மகா பராக்கிரம மன்னனின் ஆட்சிக்காலத்தின் பின்னர், சர்வதேச கடல் பாதுகாப்புக்காக கப்பல்களை இலங்கை அனுப்பியுள்ளமை இது முதல்தடவையாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள ஜனாதிபதி, செங்கடல் பாதுகாப்பிற்கு கப்பல் அனுப்புவதற்கு செலவாகும் நிதி தொடர்பில் நாம் சிந்தித்து, நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால் நாட்டுக்கு கப்பல்கள் வருகை நின்றுவிடும். இவ்வாறு ஏற்படின் நாடு பெரும் நட்டத்தை எதிர்கொள்ள நேரிடும்.

செங்கடலுக்கு யுத்தக் கப்பலை அனுப்புவது பொருட்கள் போக்குவரத்து கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காகவேயன்றி, நாடுகளுக்கிடையில் இடம்பெற்றுவரும் யுத்த நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கல்ல. 06

# ஷேய்க் ஹஸீனாவின் வெற்றிக்கு ஜனாதிபதி ரணில் வாழ்த்து





பங்களாதேஷில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் மகத்தான வெற்றி பெற்று மீண்டும் பிரதமர் பதவிக்கு தெரிவான ஷேய்க் ஹஸீனாவுக்கு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமது வாழ்த்தை தெரிவித்துள்ளார்.

அச் செய்தியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்ததாவது: 06

# உலகில் சுற்றுலா பயண இலக்குகளில் இலங்கை நான்காவது இடத்தில்

## ':ஃபிளாஷ் பேக்' சுற்றுலா இணையத்தளம் கணிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சுற்றுலா பயணங்களுக்காக (2024) உலகில் மிகவும் ஜனரஞ்சக நாடுகளில் இலங்கை நான்காவது இடத்தைப் பிடித்துள்ளது. 'ஃபோப்ஸ்' வர்த்தக சஞ்சிகை இந்த கணிப்பீட்டை வெளியிட்டுள்ளது. 'ஃபிளாஷ் பேக்' சுற்றுலா இணையத்தளம் மேற்கொண்ட கணிப்பீட்டிற்கு இணங்கவே இலங்கை நாலாவது இடத்தைப் பிடித்துள்ளது. 06

# மஹவயிலிருந்து அநுராதபுரம் வரை, ரயில் பாதை புனரமைப்பு

## அமைச்சர் பந்துலவின் தலைமையில் ஆரம்பம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மஹவயிலிருந்து அநுராதபுரம் வரையான ரயில் பாதை புனரமைப்பு நடவடிக்கைகள் அமைச்சர் பந்துல 06



இந்திய புதிய உயர்ஸ்தானிகர் இந்நாட்டில் தனது முதலாவது பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு அநுராதபுரத்திலிருந்து மஹவ வரையிலான வடக்கு ரயில் பாதையை முற்றாக புனர் நிர்மாணம் செய்யும் திட்டத்தை ஆரம்பிக்கும் விழாவில் கல்கமுவ ரயில் நிலையத்தில் போக்குவரத்து பெருந்தெருக்கள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவுடன் சிநேகபூர்வமாக உரையாடினார்...

# சமய போதனையின் போர்வையில் சமூகங்களை குழப்புவோர்

## ஆராய அமைச்சரவை உபகுழு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

சமூகத்தை திரிபுபடுத்தும் வகையில் செயற்பட்டுவரும் நபர்களால், முன்னெடுக்கப்படும் சமய பிரசாரங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக அமைச்சரவை உபகுழுவொன்றை நியமித்துள்ளதாக புத்தசாசன மற்றும் மத விவகார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

சமய போதனைகளை திரிபுபடுத்தி, சமூகத்தில் குழப்ப நிலையை ஏற்படுத்தும் வகையில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை 06

# யுக்திய சுற்றிவளைப்பில் 1060 இலட்சம் ரூபா சொத்துக்கள் பறிமுதல்



### ஆடம்பர வீடுகள், அதிசொகுசு வாகனங்கள், விலையுயர் காணிகளும் கையகம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் போதைப்பொருள் மற்றும் பாதாள உலகக் குழுவுக்கு எதிரான யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கையில், பிரபல போதைப் பொருள் வர்த்தகர்களான குடுரொஷான், கவிந்து மதுரங்க மற்றும் ஹெட்டியாரச்சிகே சிறியானி ஆகியோருக்கு சொந்தமான 1060 இலட்ச ரூபா பெறுமதியான சொத்துக்களை 06

## வட கடலில் அதிரடிப் பாய்ச்சல்

# ரூ.80 கோடி 40 இலட்சம் அபின் கஞ்சா பொதிகள் மீட்பு

**நாகர்கோவில் விஷேட, கரவெட்டி தினகரன் நிருபர்கள்**

வட மாகாணத்தில் வரலாற்றில் முதன் முறையாக 86 கோடி 40 இலட்சம் ரூபா பெறுமதியான அபின் மற்றும் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

கற்கோவளம் கடற்கரையில் வைத்து நேற்று பருத்தித்துறை பொலிஸார் இவற்றை மீட்டனர்.

வல்லிபுர ஆழ்வார் ஆலய தீர்த்தக் கடற்கரை பகுதியில், படகில் பயணம் செய்த மர்ம நபர்களால் பொதியொன்று வீசப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து விரைந்த பொலிஸார்



இப்போதைப் பொருட்களை மீட்டெடுத்தனர்.

பருத்தித்துறை தலைமைப்பீட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பியந்த அமரசிங்க 06

# மதுபானசாலையை ஆரம்பிக்க ரூ. 1 கோடி வைப்பிலிடல் அவசியம்

மதுபானசாலையை ஆரம்பிப்பதற்கு ஆரம்ப கட்டணமாக ஒரு கோடி ரூபாவை வைப்பிலிட வேண்டும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார். மதுபானசாலையை திறப்பதற்கு இதுவரையில் இத்தகைய அடிப்படைக் கட்டணம் எதுவும் அறவிடப்படவில்லை. மிகவும் சட்டபூர்வமான முறையில் மதுவரி உரிமம் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், B4 உரிமத்திற்கு 06

# கடன் வழங்குநர்களுடன் ஒப்பந்தம் கைச்சாத்து

## ஜப்பான் வலியுறுத்து



**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக கடன் வழங்கும் நாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை மேற்கொள்ள ஜப்பான் வலியுறுத்தியுள்ளது.

கொள்கை ரீதியான இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதையடுத்தே ஜப்பான் இதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளது.

இதன் முக்கியத்துவம் தொடர்பில் கடந்த வருடத்தில் இலங்கைக்கு கடன் வழங்கும் நாடுகளுடன் கொள்கை ரீதியான இணக்கப்பாடு 06

# ஐக்கிய மக்கள் சக்திக்குள் உட்பூசல் உக்கிரமடைகிறது

## ஏனைய கட்சிகளின் உறுப்பினர்கள் இணைவதால் பழையவர்கள் புறக்கணிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வேறு கட்சிகளின் உறுப்பினர்கள் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ள நிலையில் அந்த கட்சிக்குள் உள்ளக நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சில தினங்களாக சில கட்சிகளிலிருந்து உறுப்பினர்கள் சிலர் அந்த எதிர்க்கட்சியுடன் இணைந்து கொண்டுள்ளனர்.

இத்தகைய நிலையில் அந்த கட்சியுடன் புதிதாக 06



# பொங்கலை வரவேற்கும் தமிழர் பாரம்பரிய விழா

## கிழக்கு ஆளுநரின் ஏற்பாட்டுக்கு பலரும் பாராட்டு

நாட்டின் வரலாற்றில் முதல் முறையாக 1008 பொங்கல் பானைகள், 1500 பரத நாட்டிய கலைஞர்கள் மற்றும் 500 கோலங்களுடன் பொங்கலை வரவேற்கும் மாபெரும் பொங்கல் திருவிழா நேற்று (08) திருகோணமலையில் இடம்பெற்றது. கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் இதை ஏற்பாடு செய்திருந்தார். இதற்கு முன்னர் ஜல்லிக்கட்டு போட்டியும் திருமலையில் நடைபெற்றது.



இலங்கையில் தமிழ் மக்களின் பாரம்பரிய வீர விளையாட்டை மீட்டெடுத்தமைக்காக உலகம் முழுவதுமிருந்து ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருகிறது. தற்போது செய்யப்பட்டுள்ள பொங்கல் திருவிழாவும் தமிழர்களை பெரிதும் கவர்ந்துள்ளன.

# நகர்வலம்



பயங்கரவாதிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள

## இலங்கையர்களை விடுவிக்க மியன்மார் அரசாங்கம் இணக்கம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மியன்மாரில் பயங்கரவாத அமைப்பு ஒன்றினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்களை விடுவிப்பதற்கான செயற்பாடுகளில் பூரண ஒத்துழைப்பை வழங்குவதாக அந்த அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

மேற்படி இளைஞர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளில் மியன்மார் அரசாங்கம் தலையிட்டு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என ஏற்கனவே வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அந்த அரசாங்கத்திடமும் அந்த நாட்டின் பிரதமரிடமும் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அதற்கிணங்க மியன்மார் அரசாங்கம் பூரண ஒத்துழைப்பை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக மியன்மாரில் உள்ள இலங்கைக்கான தூதுவர் ஜனக பிரியந்த பண்டார தெரிவித்துள்ளார்.

மியன்மாரில் உள்ள இலங்கைத் தூதுவர் அந்த அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகளுடன் நடத்திய பேச்சு வார்த்தைக்கு இணங்க இந்த இணக்கப்பாடு காணப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மியன்மாரில் பயங்கரவாத அமைப்பு ஒன்றினால் 56 இலங்கையர்கள் முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தகவல்கள் வெளி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சீன அரசாங்கத்தின் நிதியுதவியில்...

## ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் நவீன வசதிகளுடனான அரிசி ஆலை

### விரைவில் நிர்மாணிக்க அரசு நடவடிக்கை

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் நவீன தொழில்நுட்பம் மற்றும் வசதிகளைக் கொண்ட அரிசி ஆலையொன்றினை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கு சீன அரசாங்கத்தின் அனுமதி கிடைத்துள்ளதாகவும் விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர (07) தெரிவித்தார்.

அம்பலாந்தோட்டை பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர், ஹம்பாந்தோட்டை,அங்குனுகொலபெலஸ்ஸவில் நவீன வசதிகளைக் கொண்ட அரிசி ஆலையை நிர்மாணிப்பதற்கு சீன நாட்டின் ஹைனேன் பிராந்திய அரசாங்கத்தின் அனுமதி கிடைத்துள்ளது. இதனூடாக இதுவரை எந்த அரசாங்கமோ அல்லது தனியார் நிறுவனமோ நிருவாதளவிற்கு அதிநவீன தொழில்நுட்ப வசதிகளுடன் இந்த அரிசி ஆலையினை மேற்படி பிரதேசத்தில் ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனூடாக இப் பிரதேசங்களில் தொழிலின்றி இருக்கும் இளைஞர்களின் ஒத்துழைப்பினை கூட்டுறவுத் திட்ட அடிப்படையில் பெற்று இதனை முன்னெடுத்துச் செல்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.



ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் மாத்திரமன்றி முழு தென் மாகாணத்திலும் உற்பத்தி செய்யப்படும் நெல்லினை அரிசியாக மாற்றி நாடு பூராவும் விநியோகிப்பதற்கு முடியுமாகவுள்ளது. இது தொடர்பாக சீன அரசாங்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல் சாதகமாக அமைந்துள்ளது.

எமது நாட்டின் அரிசி உற்பத்தி, விநியோகத்தின் பின்னணியில் பெரும் மாபியாக்கள் செயற்பட்டு வருகின்றன. ஒருசில பெரியளவிலான அரசி ஆலை உற்பத்தியாளர்களே அரிசி விலையினை தீர்மானிக்கிறார்கள். இந்த நிலைமையினை இல்லாமலாக்குவதற்கு அரசாங்கம் நவீன வசதிகளைக் கொண்ட பல அரிசி ஆலைகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## காலி சிறைச்சாலையிலுள்ள 07 கைதிகளுக்கு காய்ச்சல்

**(வெலிகம தினகரன் நிருபர்)**

காலி சிறைச்சாலையில் 7 கைதிகள் காய்ச்சல் காரணமாக பாதிக்கப்பட்டு காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக காலி சிறைச்சாலை அத்தியட்சகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

5 கைதிகள் காய்ச்சல் காரணமாக காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், (6/1) மேலும் இரு கைதிகள் காய்ச்சல் காரணமாக கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர், காய்ச்சலால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளி ஒருவர் உயிரிழந்தமைக்கு மூளைக் காய்ச்சலே காரணம் என பிரேத பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, காலி சிறைச்சாலையில் பார்வையாளர்களை பார்வையிடுவதற்கும், ஏனைய நடவடிக்கைகளை மட்டுப்படுத்துவதற்கும், புதிய கைதிகளை அகுணுகொலபலஸ்ஸ சிறைச்சாலைக்கு அனுப்பவும் சிறைச்சாலை நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

## அநுராதபுரம் சாஹிரா மாணவி சாதனை



**திறப்பனை தினகரன் நிருபர்**

அநுராதபுரம் சாஹிரா கல்லூரியில் தரம் 08 ல் கல்வி கற்கும் எம்.எஸ். அர்ஸா என்ற மாணவி அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற இரண்டாம் மொழி தேசிய மொழிப் போட்டி தொடரின் 'சிங்கள மொழி பிரயோகமும் கிரகித்தலும்' என்ற போட்டி நிகழ்ச்சியில் இரண்டாம் இடத்தைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார். இவர் முஹம்மத் சியாம் (ஆசிரியர்) அஸ்மிக்கா சுல்தான் (டெலிகாம்) ஆகியோர்களின் சிரேஷ்ட புதல்வி ஆவார்.

## வட மத்திய மாகாணத்தில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுப்பு

**( அநுராதபுரம் மேற்கு, கல்நேவ தினகரன் விசேட நிருபர் )**



வடமத்திய மாகாணத்தில் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் செயற்றிட்டங்களை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகளுடன் இணைந்து வட மத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் மேற்கொண்டு வருகின்றார்.

வடமத்திய மாகாண ஆளுநர் தலைமையில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொலிஸாருடன் இணைந்து பொலன்னறுவை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் டெங்கு ஒழிப்பு சம்பந்தமான கலந்துரையாடல் கூட்டம் கடந்த (05) இடம்பெற்றது.இலங்கையில் டெங்கு நோய் தீவிரமாக பரவும் அபாய நிலைமை உருவாகியுள்ளதெனவும் சுகாதார திணைக்களத்தினால் 2023 ஆம் ஆண்டு இலங்கையில் அதிகமான டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளதாகவும், இதில் 58 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

2023 ஆம் ஆண்டில் பொலன்னறுவை மாவட்டத்தில் 438 நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளதுடன் ஒரு டெங்கு மரணமும் பதிவாகியுள்ளது. பொலன்னறுவை மாவட்டத்தில் தமன்கடுவ, ஹிங்குரன்கொட மற்றும் மெதிரிகிரிய பிரதேசங்களில் டெங்கு அதிகளவில் பரவியுள்ளது. டெங்கு அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ள இடங்களில் சுமார் 75% அரச நிறுவனங்கள் காணப்படுகின்றது.

எனவே, டெங்கு சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக நேற்று (08) தொடக்கம் 14 ஆம் திகதி வரை ஒரு வார காலம் டெங்கு தடுப்பு வாரமாக பொலன்னறுவை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தந்தை செல்வா நற்பணி மன்றத்தினால்

## அறநெறி பாடசாலை பொங்கல் விழா

மேல் மாகாண தந்தை செல்வா நற்பணி மன்றத்தினால் அறநெறி பாடசாலையின் பொங்கல் விழா நிகழ்வு எதிர்வரும் 14 ஆம் திகதி மத்திய கொழும்பு இந்து வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக விவேகானந்தா சபையின் பொது செயலாளர் சிவசண்முகநாதன், நூலக பொறுப்பாளர் தயாநிதி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாணவர்கிடையே 5 குழுக்களாக பிரிக்கப்பட்டு சைவ பாரம்பரியங்களை கடைபிடித்து பொங்கல் பொங்கும் போட்டியில் வெற்றிபெறும் குழுவுக்கு பரிசுகள் வழங்கப்படவுள்ளன. இதற்கான ஒழுங்குகளை பொதுச் செயலாளர் எஸ்.கே. தளையரட்ணம் அறநெறி பாடசாலை பொறுப்பாசிரியர் செல்வி ராதாதேவி ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.

## கொழும்பில் 'FACETS' Sri Lanka கண்காட்சி; இறுதிநாள் நிகழ்வில் பலரும் பங்கேற்பு





**அஜ்வாத் பாஸி**

இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண சங்கம் (SLGJA), தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை (NGJA) மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையுடன் இணைந்து, ஆசியாவின் முதன்மையான 30ஆவது இரத்தினக்கல் மற்றும் ஆபரண கண்காட்சியான FACETS Sri Lanka இன் இறுதிநாளான (08) நேற்றைய தினமும் பல உள்நாட்டு, வெளிநாட்டு வியாபாரிகளும் கலந்து கொண்டனர்.



கடந்த சனிக்கிழமை (06) கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலின் ஆரம்பமான அங்குரார்ப்பண நிகழ்வில் கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இக்கண்காட்சியின் இறுதிநாளான நேற்றைய தினம் சுமார் 45 வருடகாலம் மாணிக்க வியாபாரத்தில் ஈடுபட்டோர் கௌரவிக்கப்பட்டமை விசேட அம்சமாகும். பேருவளை , கொழும்பு, இரத்தினபுரி பகுதிகளைச்சேர்ந்த மாணிக்க வியாபாரிகள் உட்பட உள்ளூர் மற்றும் வெளியூர் இரத்தினக்கல் மற்றும் ஆபரண வியாபாரிகளும் கலந்து கொண்டனர்.

## கங்கானங்கொட மஸ்ஜிதுல் பலாஹ் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம்





பேருவளை, சீனன்கோட்டை கங்கானங்கொட மஸ்ஜிதுல் பலாஹ் பள்ளிவாசல் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் பள்ளிவாசல் மருத்துவக் குழுவின் ஏற்பாட்டில் ஊர் மக்களின் பூரண ஒத்துழைப்புடன் இலவச மருத்துவ முகாமொன்று கடந்த வெள்ளிக்கிழமை (05) பள்ளிவாசல் வளாகத்தில் நடைபெற்றது. இதில் 30ற்கும் மேற்பட்ட மருத்துவர்கள் கலந்து கொண்டு வருகை தந்த பொதுமக்களுக்கு மருத்துவ பரிசோதனைகளை வெற்றிகரமாக மேற்கொண்டனர்.

மேற்படி மருத்துவ முகாமில் பிரதேசத்தைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட மூவின மக்கள் கலந்து கொண்டதோடு நோய்களுக்கான பரிசோதனைகளையும் மேற்கொண்டு தேவையான மருந்துகளையும், ஆலோசனைகளையும் இலவசமாக பெற்றுக் கொண்டதாக ஏற்பாட்டுக்குழு சார்பில் பிரதேச சமூக சேவையாளர் மபாஸ் மஷூர் தெரிவித்தார்.

வெகுசன ஊடக அமைச்சின் ஏற்பாட்டில்;

## வடமேல் மாகாண ஊடகவியலாளர்களுக்கு இருநாள் வதிவிட செயலமர்வு





**கற்பிட்டி தினகரன் விசேட . புத்தளம் தினகரன் நிருபர்கள்**

வெகுசன ஊடக அமைச்சு மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் (UNDP) என்பன இணைந்து நடத்திய வடமேல் மாகாண அச்சு, இலத்திரனியல் ஊடகவியலாளர்களுக்கான இரண்டு நாள் வதிவிட செயலமர்வொன்று குருநாகல் 'Kandiyan Reach Hotel' இல் இடம்பெற்றது.

ஊடக பணியாளர்களின் திறன் வளர்ச்சி திட்டத்தின் கீழ் சிறந்த எழுத்து மற்றும் பயனுள்ள அறிக்கையிடலுக்கு ஊடகவியலாளர்களை மேம்படுத்தும் நோக்கில் கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் இந்த இரண்டு நாள் வதிவிட செயலமர்வு வெகுசன ஊடக அமைச்சின் அபிவிருத்தி பிரிவுக்குப் பொறுப்பான பணிப்பாளர் டபிள்யூ. பி.செவ்வந்தி தலைமையில் இந்த செயலமர்வு நடைபெற்றது.

செயலமர்வின் முதலாவது நாளான சனிக்கிழமை (05) வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார பிரதம அதிதியாக கலந்துகொண்டு குறித்த செயலமர்வை ஆரம்பித்து வைத்தார்.

இந்த செயலமர்வில் வெகுசன ஊடக அமைச்சின் மேலதிக செயலாளர் ஈ.எம்.எஸ்.பி.ஜயசுந்தர, அமைச்சின் தலைமை உள்ளக கணக்காய்வாளர் ஆர்.எம்.ஜயந்த ரஸ்னாயக்க, சட்ட அதிகாரி சட்டத்தரணி டி.பி. உரேகா வெலரத்ன உட்பட வெகுசன ஊடக அமைச்சின் உத்தியோகத்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

மேலும், இலங்கை பத்திரிகை பேரவையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் மஹிந்த பத்திரன, சிரேஷ்ட ஊடகவியலாளர் மொஹான் சமரநாயக்க, சுயாதீன தொலைக்காட்சி தலைவர் சட்டத்தரணி சுதர்சன குணவர்தன ஆகியோர் செயலமர்வில் வளவாளர்களாக கலந்துகொண்டு இரண்டு நாட்களும் சிறப்பான முறையில் செயலமர்வை வழிநடத்தினார்கள்.

இந்த செயலமர்வில் புத்தளம் மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

குற்றவியல் அறிக்கையிடல் பற்றி வழக்கு ஆய்வு (case study) மூலம் தெளிவுபடுத்தப்பட்டதுடன், ஊடக அறிக்கையிடலின் போது எவ்வாறு ஒழுக்க நெறிகளை பேணுவது என்பது பற்றியும் தெளிவுபடுத்தப்பட்டது.

அத்துடன், தனிப்பட்ட தகவல்களை பாதுகாத்தல், தவறான தகவல்களை வெளியிடுதல் மற்றும் உண்மைத்தன்மையான செய்திகளை அறிக்கையிடல் பற்றி இதன் போதுகலந்துரையாடல்மூலம்விளக்கப்படுத்தப்பட்டது.

மேலும், சமூகப் பொறுப்பு வாய்ந்த ஊடகம் என்ற அடிப்படையில் ஊடக கலாசாரத்தை கட்டியெழுப்புவதற்கு ஊடகவியலாளர்களின் கடமைகளும், பொறுப்புக்களும் பற்றி எடுத்துரைக்கப்பட்டன. இந்த இரண்டு நாள் வதிவிட செயலமர்வில் கலந்துகொண்ட வடமேல் மாகாண ஊடகவியலாளர்களுக்கு நாட்குறிப்பேடு, ஊடக மேலங்கி ( Media Jacket) மற்றும் சான்றிதழ் என்பன அதிதிகள் மற்றும் வளவாளர்களால் வழங்கி வைக்கப்பட்டன.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஜனவரி 9 செவ்வாய்க்கிழமை

தினகரன்
THINAKARAN

தொழுகை நேரம்
சுபஹ் - 05.04
லுஹர் - 12.19
அஸர் - 03.40
மஃரிப் - 06.10
இஷா - 07.25

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் மார்கழி 24
ராகுகாலம் : காலை : 8.02 - 9.32வரை
சுபநேரம் : பகல் : 12.32 - 2.02வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# இலங்கை போக்குவரத்து சபைக்கு புதிய யாப்பு

இ.போ.சபைக்கு நிலையான புதிய யாப்பு அறிமுகப்படுத்தப்படுமென போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துலகுணவர்தன தெரிவித்தார்.

போக்குவரத்து சபையின் 66வது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய நிகழ்வில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார். இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான மதவாச்சி பிராந்திய வேலைத்தளத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

"மகிந்த தேரர் வருகையுடன், நாட்டின் மாற்றம் வரலாற்று தலைநகரான ரஜரட்டயில் ஆரம்பமானது. அந்த வரலாற்றின் தனித்துவமான சகாப்தமொன்று 1956 இல் தொடங்கியது. அந்நேரத்தில், இரண்டு முக்கிய பொருளாதார அமைப்புகள் உலகில் இயங்கின, சந்தை முதலாளித்துவ பொருளாதார அமைப்பு மற்றும் மத்திய திட்டமிடப்பட்ட சோசலிச பொருளாதார முறை என்பனவே அவையாகும்.

அதன்வழி சென்று பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலத்தில் இலங்கை தனியார் துறையை விட சிறந்த பொது சேவைகளை வழங்குவதற்காக ஜனசது சேவா அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.



அந்த யுகத்தில் பாரிய பணியாற்றிய ரஜரட்டயில் உதித்த மைத்திரிபால சேனநாயக்க போக்குவரத்து துறை அமைச்சராக மேற்கொண்ட பணியை நாம் அனைவரும் நன்றியுடன் நினைவு கூற வேண்டும்.

அவரை கௌரவப்படுத்தும் முகமாக மதவாச்சி வேலைத்தளம் "மைத்திரிபால சேனாநாயக்க பொறியியல் உற்பத்தி தொழிற்சாலை" என பெயர் மாற்றப்பட்டு முக்கிய தொழிற்சாலைகளில் ஒன்றாக மாற்றப்படும்.

அரச சேவையில் அதியுயர் அனுபவமுள்ள அதிகாரியான தற்போதைய தலைவரிடம் இந்த நிறுவனத்தை புனரமைக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன்படி நீண்டகாலமாக நிலவி வரும் பல பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் பணி இதன் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் கீழ், ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு, இடமாற்றம் போன்றவற்றுக்கு முறையான சேவை யாப்பை தயாரிப்பதில் பெரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு, இன்னும் சில பகுதிகள் மட்டுமே எஞ்சியுள்ளன. அதனை நிறைவு செய்வதன் மூலம் எதிர்வரும் சுதந்திர தினத்திற்கு முன்னர் சேவை யாப்பை அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

இதன்படி அமைச்சர்கள், அரசாங்கங்கள் மாறினாலும் மாறாத சேவை யாப்பை மக்களுக்கு வழங்குவதே எமது நோக்கமாகும். முன்மாதிரியான பணிகளைச் செய்வதன் மூலம், 2024 ஆம் ஆண்டை ஒரு முன்மாதிரியான நிறுவனமாக இ.போ.ச.வை மாற்ற நிறுவனத்தில் உள்ள அனைவரும் பாடுபட வேண்டும். கடந்த சுதந்திர தினத்தன்று நாட்டிலுள்ள சகல டிப்போக்களுக்கும் ஐந்நூறு புதிய பஸ்கள் வழங்கப்பட்டன. இதே போன்று இவ்வாண்டும் ஆயிரம் புதிய பஸ்களை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மிகக் குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர்களால் மேற்கொள்ளப்படும் நிதி மோசடி மற்றும் ஊழலைத் தடுக்கும் வகையில் இ–டிக்கெட் திட்டத்தை அடுத்த சில மாதங்களில் தொடங்கவும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்கு தீர்வு



ஜனவரி மாத இறுதிக்குள் மலையக தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்கு தீர்வு கிட்டுமென, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நானயக்கார நம்பிக்கை தெரிவித்தார்.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் கிளை நிலையம் நுவரெலியா மாவட்ட செயலகத்தின் ஐந்தாவது மாடியில் கடந்த (07) ஞாயிற்றுக்கிழமை காலை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

சர்வதேச புலம்பெயர் பணியாளர்களின் தினத்தை முன்னிட்டு கடந்த வருடம் டிசம்பர் மாதம் 18 இல், நடைபெற்ற கொண்டாட்டத்தின் போது, அமைச்சர் மனுஷ நாணயக்காரவிடம் நுவரெலியா மாவட்ட புலம்பெயர் பணியாளர்களர்கள் குடும்பங்களின் பிள்ளைகள் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க இந்த கிளை நிறுவனம் திறக்கப்பட்டது .

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டுக்கு பொருளாதார ரீதியில் மாபெறும் பங்காற்றிவரும் தோட்ட தொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில், தனக்கு கிடைத்த வேண்டுகோள்களை முடிந்தவரை நிறைவேற்றியுள்ளேன்.

அந்தவகையில் இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் தனது உரையில் தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில் விரைவில் தீர்வு ஒன்றை பெற்றுத்தருமாறு வேண்டுகோள் விடுத்தார்.

இவரின் வேண்டுகோள் இம்மாத இறுதிக்குள் நிறைவேறும் என்ற நம்பிக்கை உள்ளது. தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில் கலந்துரையாட ஜனாதிபதி திகதி குறித்துள்ளார். தன்னை அழைத்து இதுபற்றி பேசியும் உள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# குளோரின் தொழிற்சாலையில் புகை பரவுவதாக அறிவிப்பு

ஹோமாகம கட்டுவன கைத்தொழில் பேட்டைக் கிராமத்தில் உள்ள குளோரின் உற்பத்தி தொழிற்சாலையில் மீண்டும் புகை பரவி வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சில மாதங்களுக்கு முன்னரும் இந்த தொழிற்சாலையில், இரு தடவைகள் புகை வெளியாகியிருந்தது.

இந்நிலையில் இங்கு மீண்டும் புகை வெளியாகி வருகிறது.

இது குறித்து தொழிற்பேட்டையில் உள்ள தொழிற்சாலை ஊழியர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அனைவரும் முகக்கவசம் அணிந்து பணியில் ஈடுபட வேண்டும் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சூரிய ஒளி சரியாகப் பட்டால் இந்நிலை தவிர்க்கப்படும் எனவும், அதுவரை புகை மூட்டமாக காணப்படுவதால் முகமூடிகளை முறையாக அணிந்து செயற்படுமாறும் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேலும் மூச்சு விடுவதில் சிரமம் உள்ளவர்கள் உடனடியாக மருத்துவமனைக்கு செல்லுமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.



செலசினே மீடியா சொலூசன்ஸ் நிறுவனத்தின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள மஹேஷ் பண்டார நேற்று உத்தியோகபூர்வமாக தமது கடமைகளைப் பொறுப்பேற்றார். அந்த நிறுவனத்தில் இடம் பெற்ற இந்நிகழ்வில் மேற்படி நிறுவனத்தின் பொது முகாமையாளர் மற்றும் பணிப்பாளர் சபை உள்ளிட்ட நிறுவனத்தின் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.



இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள ஷேனுகா செனவிரத்ன அண்மையில்,இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்முவிடம் கடிதத்தை கையளித்த போது பிடிக்கப்பட்ட படம்.

# மருந்தகத்தில் திடீர் சோதனை போதை மாத்திரைகள் மீட்பு

போதை மாத்திரைகள் விற்பனை செய்யப்படும் மருந்தகத்திலிருந்து பொலிஸார்,250 போதை மாத்திரைகளை கைப்பற்றியுள்ளனர். வலி நிவாரணி மாத்திரைகள் எனக் கூறி, இவை விற்கப்பட்டுள்ளன. இம்மருந்தகத்தின் ஊழியர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். மேலும்,போதை மாத்திரைகளுடன் நடமாடிய மேலும் ஒருவரும் இதன் போது கைதானார்.

சந்தேக நபர்கள் இருவரிடமிருந்தும் 1,100 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இம் மருந்தகம் சோதனைக்குட்படுத்தப்பட்ட போதே இந்த போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இரண்டு பெட்டிகளில் 250 போதை மாத்திரைகள் இருந்தன. வலி நிவாரணி மாத்திரைகள் என்ற பெயரில் அதிக விலைக்கு இவை,விற்பனை செய்யப்பட்டு வந்துள்ளதாக கூறும் பொலிஸார் சந்தேக நபர்கள் இருவரையும் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை (07) இம்மருந்தகம் சோதனையிடப்பட்டது.

# யுக்திய இராணு நடவடிக்கை; நேற்று மாத்திரம் 995 பேர் கைது

போதை ஒழிப்புக்காக நடத்தப்படும் விசேட யுக்திய இராணுவ நடவடிக்கையில்,நேற்றைய (08) 24 மணி நேரத்தில்,995 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து 261 கிராம் ஐஸ், 435 கிராம் ஹெரோயின், 1403 போதை மாத்திரைகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

# தயாசிறி ஜயசேகர எம்.பி க்கு எதிராக நீதிமன்று தடையுத்தரவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகரவுக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

அக்கட்சியின் பதில் பொதுச் செயலாளர் சாரதி 06

# போலி நோட்டுக்களை அச்சிட்டு போதைப்பொருள் வாங்கியோர் கைது

ஆயிரம் ரூபா போலி நோட்டுக்களை அச்சிட்டு அவற்றை பயன்படுத்தி போதைப்பொருள் வாங்கியதாக கூறப்படும் இருவர், பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மாளிகாவத்தை மற்றும் தெமட்டகொடை பிரதேசங்களை சேர்ந்தவர்களாவர்.

சந்தேக நபர்கள் இருவரும் இவ்வாறு போலி நோட்டுக்களை அச்சிட்டு போதைப்பொருள் கொள்வனவு செய்து வந்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட மாளிகாவத்தை பொலிஸார் சந்தேக நபர்களிடமிருந்து 1000 ரூபா பெறுமதியான நான்கு போலி நோட்டுக்களையும் கைப்பற்றியுள்ளனர்

# எதிர்க்கட்சித் தலைவர் உயர்நீதிமன்றுக்கு விஜயம்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உயர் நீதிமன்ற வளாகத்துக்கு நேற்று (08) காலை சென்றுள்ளார்.

வழக்கு ஒன்று தொடர்பான விசாரணையைக் காண்பதற்காகவே அவர் உயர்நீதிமன்றம் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவின் குடியுரிமை தொடர்பான விசாரணையை உயர் நீதிமன்றில் பார்வையிடுவதற்காக அவர் நீதிமன்றத்துக்குச் சென்றுள்ளார்.

இதேவேளை, தற்போதைய மின் கட்டணத்தை குறைக்க உத்தரவிடுமாறு கோரி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உயர் நீதிமன்றத்தில் நேற்று அடிப்படை உரிமைகள் மனுவொன்றை தாக்கல் செய்தமையும் குறிப்பிடத்தக்கது.

# அமரர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் உருவச் சிலைக்கு அஞ்சலி




**(லோரன்ஸ் செல்வநாயகம்)**


முன்னாள் பிரதமர் அமரர் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் நினைவுதின அஞ்சலி நிகழ்வுகள் நேற்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் தலைமையில் கொழும்பு காலி முகத்திடலிலுள்ள பண்டாரநாயக்க உருவச் சிலைக்கு அருகில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவின் புதல்விகளானசந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் சுனேத்ரா பண்டாரநாயக்க ஆகியோர் கலந்து கொண்டு அமரர் பண்டாரநாயக்கவின் உருவச் சிலைக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

அதனையடுத்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் தினேஷ் குணவர்தன உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும், முன்னாள் பிரதமரின் உருவச் சிலைக்கு மலரஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

தினகரன்
THINAKARAN
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் மார்கழி மாதம் 25ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஜுமாதல் ஆகிறா பிறை 25




# தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கை நியாயமானது

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் நாளாந்த சம்பள உயர்வுக் கோரிக்கையை முன்வைத்திருக்கிறார்கள். அக்கோரிக்கை சம்பந்தப்பட்ட பெருந்தோட்ட நிறுவனங்களிடம் ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதி பெருந்தோட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையின் போது, சம்பள அதிகரிப்பு தொடர்பில் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு அறியத் தருமாறு பெருந்தோட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளிடம் கேட்டிருந்தார். இருந்த போதிலும் பெருந்தோட்ட நிறுவனங்கள் தங்கள் நிலைப்பாட்டை இதுவரை ஜனாதிபதிக்கு தெரிவிக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ள ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரான பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ், மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் முக்கிய பேச்சுவார்த்தையொன்று இன்று (09ஆம் திகதி) தொழில் அமைச்சில் நடைபெற உள்ளது. நாளொன்றிக்கு ரூ. 1700.00 ஐ பெற்றுக்கொடுக்கும் வகையில் இப்பேச்சுவார்த்தை இடம்பெறும் என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை நுவரெலியா மாவட்ட செயலகத்தில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் கிளை நிறுவனமொன்றை நேற்றுமுன்தினம் திறந்து வைத்து உரையாற்றிய அமைச்சர் மனுஷ நாணயக்கார, 'பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கைக்கு இம்மாத முடிவுக்குள் தீர்வு கிடைக்கப்பெறும்' என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சரினதும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரினதும் இந்த அறிவிப்புக்கள் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் நிச்சயம் நம்பிக்கையை ஏற்படுத்தும். அனைத்து பெருந்தோட்டத் தொழிலாளர்களதும் எதிர்பார்ப்பு சம்பள உயர்வே ஆகும்.

இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு அளப்பரிய பங்களிப்பை நல்கி வருபவர்களில் மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களும் முக்கியமானவர்களாவர். அவர்கள் இந்நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்காக சுமார் 200 வருடங்களாக உழைத்து வருகிறார்கள். அவர்கள் நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு அளித்துவரும் பங்களிப்பு வரலாற்றில் அழியாத்தடம் பதித்தவையாக உள்ளது.

இருந்த போதிலும் பெருந்தோட்டத் தொழிலாளர்களில் பெரும்பகுதியினர் இன்னும் இந்நாட்டில் நிலத்திற்கான உரிமை பெற்றவர்களாக இல்லை. அவர்கள் போதிய வசதிகள் அற்ற லயக்காம்பறாக்களில்தான் வாழ்ந்து வருகின்றனர். நாடொன்றின் பொருளாதார மேம்பாட்டுக்கு பங்களிக்கின்ற மக்களின் வாழ்க்கைத் தரத்திற்கு ஏற்ப இம்மக்களின் வாழ்க்கைத்தரம் இன்னும் மேம்பாடு அடைந்திருப்பதாக இல்லை. பல தரப்பினரதும் கருத்தும் அதுவேயாகும்.

அப்படியிருந்தும் இத்தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பது தொடர்பில் பெருந்தோட்ட நிறுவனங்கள் கூடிய கவனம் செலுத்தத் தவறி விடுகின்றன. இது நியாயம் காண முடியாத விடயமாகும். அதிலும் இம்முறை சம்பள அதிகரிப்பு தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து டிசம்பர் 31 ஆம் திகதிக்குள் தமக்கு தெரியப்படுத்துமாறு ஜனாதிபதி கேட்டிருந்தும் இற்றைவரையும் இந்த நிறுவனங்கள் அறிவிக்காதிருக்கின்றன. இது நியாயப்படுத்தக் கூடிய விடயம் அல்ல.

இவ்வாறான சூழலில்தான் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்ளவென நியமிக்கப்பட்டுள்ள குழு இன்று தொழில் அமைச்சில் கூடுகின்றது. இக்குழுவில் தொழில் அமைச்சு, பெருந்தோட்ட தொழிற்சங்கங்கள் மற்றும் பெருந்தோட்ட நிறுவனங்கள் என்பவற்றின் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கின்றனர். அதனால் இன்றைய கூட்டம் முக்கியத்துவம் மிக்கதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும். அதுவே அனைத்துத் தரப்பினரதும் விருப்பமாகும். கடந்த 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் நாடு முகம்கொடுத்த பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களைப் பெருந்தோட்டத் தொழிலாளர்களும் எதிர்கொண்டார்கள். குறிப்பாக பொருளாதார நெருக்கடி காரணமாக அனைத்து பொருட்களது விலைகளும் பெரிதும் அதிகரித்தன. அதன் தாக்கங்களுக்கும் அவர்களும் முகம் கொடுத்தார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துவரும் பொருளாதார மேம்பாட்டு வேலைத்திட்டங்களின் பயனாக அந்தப் பொருளாதார நெருக்கடியின் பாதிப்புக்களும் அசௌகரியங்களும் தற்போது பெரும்பாலும் நீங்கியுள்ளன. ஆனாலும் அந்நெருக்கடியின் தாக்கங்கள் நிலவவே செய்கின்றன. அவற்றில் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது. அதனால் அந்தத் தாக்கத்திற்கு சம்பள உயர்வு குறிப்பிடத்தக்களவு நிவாரணமாக அமைய முடியும். ஆகவே பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கை நியாயமானது என்பதே பெரும்பாலானவர்களின் அபிப்பிராயமாக உள்ளது. வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்க நவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளமும் அதிகரிக்கப்படுவது அவசியம். அதுவே மக்களின் கருத்தாகும்.

editor.tkn@lakehouse.lk

# கிழக்கில் கலாசார நிகழ்வுகள் ஊடாக இன நல்லிணக்கத்தை உருவாக்குவோம்!



**தைப்பொங்கல் கலாசார நிகழ்வில் மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான்**

கிழக்கு மாகாணத்தில் வாழ்கின்ற இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை கட்டி எழுப்பும் வகையில் அங்கு வாழ்கின்ற ஒவ்வொரு சமூகத்தினரும் கலாசார நிகழ்வுகளை கொண்டாடுவதன் மூலம் தேசிய நல்லிணக்கத்தை உருவாக்க முடியும். அதனடிப்படையில் தமிழர்களின் முதன்மைப் பண்டிகையான தைப்பொங்கலினை முன்னிட்டு கிழக்கு மாகாணத்தில் பல்வேறு கலாசார நிகழ்வுகள் நடைபெற்று வருவதுடன் இவ்வாறான கலாசார நிகழ்வுகளை நடத்துவதன் மூலம் தேசிய நல்லிணக்கத்தை உருவாக்க முடியும் என கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

திருகோணமலை எம்.சி. ஹைசர் அரங்கில் நடைபெற்ற மாபெரும் தைப்பொங்கல் கொண்டாட்ட நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், நிச்சயமாக ஏனைய சமூகங்களினது பண்டிகைகள் வருகின்ற பொழுது அவர்களின் கலாசாரங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் கிழக்கு மாகாணத்தில் கொண்டாட்டங்கள் நடத்தப்படவுள்ளதாகவும் அதன் மூலம் சமூகங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை உருவாக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார். குறிப்பாக இவ்வாறான நிகழ்வுகளின் மூலம் நல்லிணக்கம், தேசிய ஒற்றுமை, சமாதானம் போன்றவற்றை மக்களுக்கிடையில் உருவாக்கலாம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை என்று அவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணமானது அனைத்து சமூகங்களும் ஒற்றுமையாக வாழ்கின்ற ஒரு மிக முக்கியமான தனித்துவமான மாகாணமாகும். இந்த மாகாணத்தில் பல சமூகத்தினரதும் பண்டிகைகள் வருகின்ற பொழுது அவற்றினை விமரிசையாக கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை கிழக்கு மாகாண ஆளுநர் என்ற வகையில் தான் முன்னெடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.





இவ்வருடத்தில் மிகப்பிரம்மாண்டமான முறையில் கிறிஸ்மஸ் பண்டிகை கொண்டாடப்பட்டதுடன் தற்பொழுது தைப்பொங்கல் பண்டிகைக்கான நிகழ்வுகள் இம்மாகாணத்தில் கொண்டாடப்படுகின்றன. நிச்சயமாக எதிர்காலத்தில் வெசாக் பண்டிகை உட்பட ரமழான் பண்டிகைகளும் மிக விமர்சையான முறையில் இந்த மாகாணத்தில் கொண்டாடப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

குறித்த தைப்பொங்கல் கொண்டாட்ட நிகழ்வில் பல்வேறு கலாசார நிகழ்வுகள் மேடையேற்றப்பட்டதுடன் சுமார் 1500 மாணவர்கள் பங்குபற்றிய மிகப் பிரமாண்டமான நடனம் ஒன்றும் நேற்று(08) திருகோணமலை மாவட்டத்தில் அரங்கேற்றப்பட்டிருந்தது. குறித்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட ஆளுநர் செந்தில் தொண்டமான் அமைச்சுகளின் செயலாளர்கள், திணைக்களங்களின் பணிப்பாளர்கள் உட்பட ஏனைய நிறுவனத் தலைவர்கள் அனைவருக்கும் அதேபோன்று குறித்த நிகழ்வை வெற்றிகரமாக நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து நபர்களுக்கும் தனது உளப்பூர்வமான நன்றியினை தெரிவித்துக் கொண்டதுடன் தைப்பொங்கலை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய போட்டியாளர்களுக்கு சான்றிதழ்களும் பதக்கங்களும் வழங்கி வைக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் பாராளுமன்ற உறுப்பினர்களான கபில அத்துகோரள, இராசமாணிக்கம் சாணக்கியன் மற்றும் ஜல்லிக்கட்டு நலன்புரி அமைப்பின் தலைவர் ராஜா, அரசாங்க அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

**ஏ.பி. அப்துல் கபூர்...**
(அம்பாறை மாவட்ட குறூப் நிருபர்)

# அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்ற பேத்தாழை பொதுநூலகம்

இலங்கை தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபையினால், ஒக்டோபர் மாதமானது தேசிய வாசிப்பு மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டு ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு தொனிப்பொருளின் கீழ் ஒக்டோபர் மாதம் முதல் ஜனவரி வரை பொதுநூலகங்களில் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருவது வழக்கம்.

அவ்வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் தேசிய வாசிப்பு மாதத்தில் சிறப்பாக செயற்பட்ட பொதுநூலகங்கள், பாடசாலை நூலகங்கள், விசேட நூலகங்கள் போன்றவவை ஒவ்வொரு வகையின் கீழ் அகில இலங்கை ரீதியாக தெரிவு செய்யப்பட்டு நூலகங்களுக்கு வருடந்தோறும் விருதுகளும் வழங்கப்பட்டு வருகின்றது.

அவ்வகையில் 'அறிவார்ந்த சமூகத்திற்கான வாசிப்பு' எனும் தொனிப்பொருளில் நடத்தப்பட்ட தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளின் அடிப்படையில் அகில இலங்கை ரீதியாக மிகவும் சிறப்பாக செயற்பட்ட நூலகங்களுக்கான விருது வழங்கும் விழா இலங்கை தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபையில் மிகவும் பிரமாண்டமான முறையில் நடைபெற்றிருந்தது.

இதில் கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச சபையின் கீழ் இயங்குகின்ற தரம்2 நூலகமான பேத்தாழை பொது நூலகமானது பிரதேச சபைகளின் கீழ் இயங்குகின்ற பொது நூலகங்களில் அகில இலங்கை ரீதியாக முதலாம் இடத்திற்கான விருதினைப் பெற்று சாதனை படைத்துள்ளது. அத்துடன், தேவபுரம் பொதுநூலகமும் மிகவும் சிறப்பான முறையில் செயற்பட்டமைக்காக சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

பேத்தாழை பொதுநூலகமானது, கடந்த 2011ஆம் வருடம் டிசம்பர்10ஆம் திகதி அப்போதைய கிழக்கு மாகாண முதலமைச்சராக விளங்கிய சிவநேசதுரை சந்திரகாந்தன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.



இந்நூலகத்தின் வளர்ச்சிக்கு ஒவ்வொரு வருடமும் புத்தகங்களையும் தேவையான பௌதீக, தொழினுட்ப வளங்களையும் பெற்றுக் கொடுத்து நூலகத்தினை உருவாக்கியதோடு விட்டு விடாமல் அதனை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வதற்கான அனைத்துப் பணிகளையும் அவர் தொடர்ந்து வழங்கி வருகிறார்.

அவரால் உருவாக்கப்பட்ட பேத்தாழை பொதுநூலகமானது இலங்கையில் இயங்குகின்ற பொதுநூலகங்களுள் நவீன தொழினுட்ப வசதிக் கட்டைமைப்புகள் கொண்டதாகவும், 20ஆயிரத்துக்கு மேற்பட்ட நூல் ஆவணங்களைக் கொண்டதாகவும் விளங்குகின்றது. தனியான சிறுவர் பகுதி, இரவல்பகுதி, உசாத்துணைப் பகுதி, பத்திரிகை சஞ்சிகைப் பகுதி, கணினிப் பகுதி, விபுலம் ஆவணக்காப்பகம் எனப் பல்வேறு கட்டமைப்புக்களுடன் விளங்கும் பேத்தாழை பொதுநூலகத்தின் நூலகப் பொறுப்பாளராக தற்பொழுது மரகதம் பிரகாஷ் பணிபுரிந்து வருகின்றார். இவரின் கீழ் இன்னும் 05 நூலக உத்தியோகத்தர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

ஹொரா நூலக முகாமைத்துவ மென்பொருள் மூலம் நூலகத்தின் இரவல் சேவை மற்றும் நூலக தன்னியக்க தகவல் சேவை போன்றவற்றினை இலங்கை பொதுநூலக வரலாற்றில் முதன் முதலாக நடைமுறைப்படுத்தி தொடர்ந்து இயங்கி வரும் இந்நூலகம் கடந்த 2021ஆம் வருடம் பத்தாவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடியதுடன் 'வல்லகி' எனும் சிறப்பு மலரையும் வெளியிட்டுள்ளது.

அத்துடன் பேத்தாழை பொதுநூலகத்தின் மிக முக்கியமான சிறப்பானதொரு பணியாக கடந்த 03 வருடங்களாக 'நிலா முற்றம்' எனும் கலை, இலக்கியக் கருத்தாடல் நிகழ்வு நடைபெற்று வருகின்றது. ஒவ்வொரு மாதமும் வருகின்ற பௌர்ணமி தினத்தன்று நிலாவொளி படரும் நூலக முற்றத்தில் கலை, இலக்கியப் படைப்பாளிகளும் வாசகர்களும் சங்கமிக்கின்ற அருமையானதொரு நிகழ்வு தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது.

கடந்த நவம்பர் மாதத்துடன் சேர்த்து 33ஆவது நிலாமுற்ற நிகழ்வுகள் இங்கு நடந்தேறி உள்ளன. உள்ளூர் எழுத்தாளர்கள் முதல் உலகத்தமிழ் எழுத்தாளர்கள் பலரது நூல்கள் இங்கு அறிமுகப்படுத்தப்பட்டு அவைபற்றிய கருத்தாடல்கள் பகிரப்படுவதுடன், இலைமறை காயாக விளங்குகின்ற பிரதேசப்படைப்பாளிகளைப் பற்றி தேடிக் கண்டுபிடித்து அவர்களைப் பற்றியும் அவர்களது படைப்புக்கள் பற்றியும் இந்நிகழ்வில் பேசப்படுகின்றது.

பேத்தாழை பொது நூலகத்தின் விபுலானந்தர் வாசகர் வட்டமும், நூலகமும் இணைந்து நடத்தி வருகின்ற இந்நிகழ்வானது இதுவரை பல பிரதேசப்படைப்பாளிகளை வெளியுலகிற்கு அறிமுகம் செய்துள்ளதுடன், பல வெளியூர், வெளிநாட்டு படைப்பாளிகளை வாசகர்களுக்கு அறிமுகம் செய்துள்ளது. அத்துடன் கடந்த இரு மாதங்களாக பேத்தாழை பொதுநூலகத்தின் விபுலானந்தர் கலை, இலக்கிய மன்றத்தின் மூலம் 'கவிமுளரி' எனும் கவிதை மின்னிதழும் வெளியிடப்பட்டு வருகின்றது. இதன் ஆசிரியராக நூலகப் பொறுப்பாளர் மரகதம் பிரகாஷ் விளங்குகின்றார்.



# முதியோருக்கான சிறந்த விளையாட்டு வீரராக எம்.எல்.எம்.ஜமால்டீன் தெரிவு

விளையாட்டு வீரராக, நடுவராக அறியப்பட்டு வந்த மருதமுனை எம்.எல்.எம். ஜமால்டீன் முதியோருக்கான சிறந்த விளையாட்டு வீரராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உலக முதியோர் தினத்தை முன்னிட்டு கிழக்கு மாகாண சமூக சேவை திணைக்களத்தினால் நடத்தப்பட்ட முதியோருக்கான சிறந்த விளையாட்டு வீரர்கள் தெரிவிலேயே இக்கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.

இவர் அம்பாறை மாவட்டத்தில் முதலாவது இடத்தினையும், கிழக்கு மாகாணத்தில் மூன்றாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டார். கிழக்கு மாகாண கலை கலாசார விளையாட்டுத்துறை சார்ந்தவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் காரைதீவு கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் ஜமால்டீன் பொன்னாடை போர்த்தி ஞாபகச்சின்னம் மற்றும் சான்றிதழ் ஆகியன வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

சமாதான நீதிபதியான எம்.எல்.எம். ஜமால்டீன் சமூக சேவைகளில் ஈடுபாடுடையவர். அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் செயலாளராக கடந்த ஏழு வருடங்களில் பணியாற்றியுள்ளதுடன், மருதமுனை மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆ பள்ளிவாசலின் தலைவராகவும் பதவி வகித்தவர். உதைபந்தாட்ட வீரராகவும் நடுவராகவும் நீண்ட காலமாக செயற்பட்டு வரும் இவர் மருதமுனை ஈஸ்ரன் யூத் விளையாட்டுக் கழகத்தின் தவிசாளராகவும், மருதமுனை ஊடகப் பேரவையின் தலைவராகவும் இருந்து வருகிறார்.

ஜமால்டீன் சிரேஷ்ட ஊடகவியலாளர் என்பது குறிப்பிடத்தக்கது. அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கிடையே நடத்தப்பட்ட தகுதிகாண் ஆவண போட்டியின் போதே எம்.எல்.எல்.ஜமால்டீனுக்கு இக்கௌரவம் லழங்கப்பட்டுள்ளது.

**ஜெஸ்மி எம்.மூஸா...**
(பெரியநீலாவணை தினகரன் நிருபர்)

# உலகெங்கும் ஆயிரம் பிரமுகர்களுக்கு இலவச உம்ரா வழங்கும் சவூதி மன்னர்

இஸ்லாமிய உலகுக்கு மகிழ்ச்சியளிக்கும் செய்தியாக மக்கா மதீனா ஆகிய இரு புனிதத் தலங்களின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் 2024 ஆம் ஆண்டில் உலகெங்கிலும் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 1,000 பிரமுகர்களுக்கு இலவசமாக உம்ரா நிறைவேற்றும் அரிய சந்தர்ப்பத்தை வழங்குவதற்கு அனுமதி வழங்கியுள்ளார்.

இது இஸ்லாமிய விவகாரங்கள் அழைப்பு மற்றும் நேர்வழித்துறை அமைச்சு செயல்படுத்தி வரும் ஹஜ் உம்ராவுக்காக விருந்தினர்களை அழைக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

இது தொடர்பாக இஸ்லாமிய விவகாரங்கள் அழைப்பு மற்றும் நேர்வழித்துறை அமைச்சர் ஷேக் அப்துல்லத்தீஃப் அல்ஷேக் தனது செய்தியில், தாராள தன்மையுடன் வழங்கப்பட்ட 1000 யாத்திரிகர்களுக்கு வழங்கப்படும் உம்ரா சலுகைப் பொதியை முன்னிட்டு மன்னருக்கும் பட்டத்து இளவரசரும் பிரதமருமான முகம்மது பின் சல்மான் அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்தார்.

மேலும் இந்நிகழ்வானது இஸ்லாத்துக்கும் உலகின் பல்வேறு பகுதிகளில் வாழ் முஸ்லிம்களுக்கு சேவையாற்றுவதிலும் அவர்களுக்கிடையிலான சகோதரத்துவப் பிணைப்புகளை வலுப்படுத்துவதிலும் இஸ்லாமியப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுடன் பயனுள்ள தொடர்புகளை ஏற்படுத்துவதிலும் சவூதி ஆட்சியாளர்களுக்குள்ள அக்கறையை எடுத்துக்காட்டுகின்றது என்று அவர் கூறினார்.

மேலும் உம்ரா திட்டத்தின் ஊடாக உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் இஸ்லாமிய அறிஞர்கள் ஷேக்குமார்கள் அறிவுஜீவிகள் செல்வாக்குமிக்க நபர்கள் பல்கலைக்கழக பேராசிரியர்கள் என 1000 பிரமுகர்கள் இலவசமாக உம்ரா செய்யவும் மதீனாவில் உள்ள மஸ்ஜிதுன்னபவியில் தொழவும் வரலாற்றுப் புகழ்பெற்ற இடங்களை தரிசிக்கவும் அரிய சந்தர்ப்பமாகும் என்றும் அல்ஷேக் கூறினார்.

இஸ்லாத்தை பரப்புவதற்கும் அதன் கொள்கைகளையும் மதிப்புகளையும் விளக்குவதற்கும் வெறுப்பு மதவெறி மற்றும் தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கும் சவூதி ஆட்சியாளர்கள் இஸ்லாமிய விவகாரங்கள் அமைச்சுக்கு தொடர்ந்து வழங்கி வரும் ஆதரவை அமைச்சர் பாராட்டினார்.



மேலும் மன்னர் சல்மான் பட்டத்து இளவரசர் முகம்மத் இப்னு ஸல்மான் ஆகியோர் மூலமாக இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் பெரும் சேவைகளை வழங்கவும் உலக முஸ்லிம்களுக்கிடையில் ஒற்றுமையை பலப்படுத்தவும் ஹஜ் உம்ரா பயணிகள் வசதியாக அமல்களை நிறைவு செய்தபின் பாதுகாப்பாக தங்கள் நாடுகளுக்குத் திரும்பவும் அவர் பிரார்த்தனை செய்தார்.

**கலாநிதி அப்துல் சத்தார்**
விரிவுரையாளர், காஸிமிய்யா அரபுக்கல்லூரி




## இறைவனைத் தேடும் ஆவலைத் தூண்டும்

# திருக்காட்சிப் பெருவிழா

புது வருடம் பிறந்து முதலாவது ஞாயிற்றுக்கிழமையில் கத்தோலிக்கத் திருச்சபையானது மூன்று ராஜாக்கள் திருவிழா அல்லது திருக்காட்சி பெருவிழா என்ற பெருவிழாவைக் கொண்டாடி மகிழ்கிறது.

இயேசு பாலகன் பிறந்ததை அறிந்து அவரை தரிசித்து, வணங்கி, பரிசுப் பொருட்களை வழங்குவதற்காக கிழக்குத் திசையிலிருந்து மூன்று ஞானிகள் அல்லது ராஜாக்கள் பெத்லகேமுக்கு சென்று இயேசு பாலனை தரிசித்ததாக வரலாறு தெரிவிக்கின்றன.

மூன்று ராஜாக்கள், மூன்று சாஸ்திரிகள் அல்லது மூன்று ஞானியர் என்று பலவாறு அழைக்கப்படும் இந்த மூவரும் யார்? இயேசு ஒரு குழந்தையாக பெத்லஹேமில் பிறந்திருந்தபோது கிழக்கிலே தோன்றிய வால் நட்சத்திரம் வழிகாட்ட, அவர்கள் பலநூறு மைல்கள் அந்த நட்சத்திரம் காட்டிய வழியைப் பின்பற்றி பெத்லஹேம் வந்து சேர்ந்தார்கள்.

குழந்தை இயேசுவைக் கண்டு, பொன்னையும் வெள்ளைப் போளத்தையும் தெய்வக் குழந்தைக்குக் காணிக்கையாகச் செலுத்திவிட்டு நிறைவோடு திரும்பிச் சென்றார்கள்.

டிரெஸ், ரேயெஸ், மேகோஸ் என்ற பெயர்களைக் கொண்ட அந்த மூன்று ராஜாக்களைப் பற்றி இயேசுவின் முதன்மைச் சீடரான மத்தேயு தனது நற்செய்தியில் குறிப்பிடுகின்றார்.

இந்த மூவரும் கடந்த இருபது நூற்றாண்டுகளாகப் பல கோடி மக்களின் மனங்களில் இறைவனைத் தேடும் தாகத்தை உண்டாக்கியிருக்கின்றார்கள். இந்த காரணத்துகாகவே உலகின் பல்வேறு பிரிவு கிறிஸ்தவ மக்களும் ஆண்டுதோறும் ஜனவரி முதல் வாரத்தை இவர்களின் பெயரால் திருக் காட்சித் திருவிழாவாகக் கொண்டாடுகின்றார்கள்.

கடவுள் தங்களுக்கு மட்டுமே தோன்றுவார் என்று எண்ணிவந்த யூத இனமக்களுக்கு இந்தத் திருவிழாவில் பொதிந்திருக்கும் உண்மை அதிர்ச்சியைத் தரக்கூடியாது. காரணம் வான தூதர் வழியாகவும், எரியும் புதர் வழியாகவும் தங்களுக்கு மட்டுமே இறைவன் தோன்றினார் தங்களுக்கு மட்டுமே பத்துக் கட்டளைகள் எனும் மகத்தான வாழும் வழிமுறையைக் கொடுத்தார் என்ற கர்வத்தோடு தங்களை 'இறைமக்கள்' என்று அழைத்துக் கொண்டனர்.

தங்களுக்காகவே தங்கள் இனத்தில் இறைமகனை கடவுள் பிறக்கச் செய்வார். அவர் தங்களுக்கானவர் மட்டுமே என்று கருதினார்கள். ஆனால் யூதமக்களின்



இந்த அகந்தையை மூன்று ஞானியர் வழியாகக் கடவுள் சுக்குநூறாக நொறுக்கினார் என்றே சொல்ல வேண்டும்.

இறைவன் மனித உருவில் யூத இனத்தில் இயேசுவாக அவதரித்தபோது கீழை நாடுகளில் தர்ம பரிபாலன ஆட்சியை நல்கி வந்த மூன்று தேசங்களின் ராஜாக்களுக்கு இறைமகன் பிறந்திருப்பதை குறிப்பால் உணரச் செய்து யூதர் அல்லாத புற இனத்தாருக்கும் கடவுள் தன்னை வெளிப்படுத்தினார்.

அந்த மூவரில் ஒருவர் ஆதிக்குடிகளாய் வாழ்ந்த கருப்பின மக்களின் தேச அதிபதி என்பதும் குறிப்பிடத் தக்கது.

தன்னை எந்தவொரு மனிதக் குழுவும் தனித்து சொந்தம் கொண்டாட முடியாது, அதேபோல் யாராலும் தன்னை ஒளித்து வைக்க முடியாது என்பதை கீழைத் தேசங்களைச் சேர்ந்த மூன்று ராஜாக்களுக்கு இறைவன் வெளிச்சம்போட்டுக் காட்டினார்.

உண்மையில் இறைவன் இந்த உலகத்தின் பொது சொந்தம். எனவேதான் இயேசு பிறந்து குழந்தையாய் இருக்கும் போது அவரைக் காண வந்த இந்த மூன்று ராஜாக்களின் வருகையை எல்லோருக்குமான திருக்காட்சித் திருவிழாவாகக் கொண்டாடுகிறார்கள்.

இறைவனைப் பங்கு போட்டுப் பிரித்து அதன் மூலம் மக்களையும் பிரிக்கும் எண்ணங்கள் தவறானவை என்பதைச் சுட்டிக் காட்டும் விழாவாக இது அடையாளம் பெற்று வருகிறது.

தன்னைச் சிரத்தையுடன் தேடும் அனைவருக்கும் கடவுள் தன்னை வெளிப்படுத்தும் அழகு தன்னிகரற்றது. அதேநேரம் தன்னைத் தேடி ஏழு கடல், ஏழு மலை தாண்டி வரத் தேவையில்லை. "நான் எப்போதும் எங்கும் உங்களைச் சூழ்ந்தே இருக்கிறேன்" என்பதையே இயேசு இதன் மூலம் தெரிவிக்கின்றார்.அவரைக் காண நாம் மறுத்து, நம் அகக் கண்களை மூடிக் கொள்வதாலேயே, அவர் தூரமாய் இருப்பதைப் போல் நாம் உணர்கிறோம்.

ஞானமே வடிவான இந்த மூன்று ராஜாக்கள் இயேசுவைச் சந்திக்க வந்த இந்த நிகழ்வைப் பல கோணங்களில் சிந்திக்கலாம். அவர்கள் விண்மீன்களின் ஒளியில் நடந்தனர். இறைவனை மனிதக் குழந்தையாகச் சந்தித்த பின் அவர்கள் ரோமாபுரியின் அரசன் எரோதுவுக்கு பயந்து வேறு வழியாகத் திரும்பிச் சென்றனர் என்றும் நற்செய்தி சொல்கிறது.

இவர்கள் இறைவனைச் சந்திக்கும் போதும், சந்தித்த பின்பும் ஏற்பட்ட மாற்றங்களை நாம் சிந்திப்பது சிறந்தது.

### விண்மீன் காட்டும் வெளிச்சம்

விண்மீனைக் கண்டு பயணம் மேற்கொண்ட இந்த ஞானிகளைப் பற்றி விவிலியம் தரும் மற்றுமொரு விபரம்: "கிழக்கிலிருந்து வந்த ஞானிகள்." விவிலிய ஆராய்ச்சியாளர்கள் இந்த ஞானிகள் இந்தியாவிலிருந்தும் ஆசியாவிலிருந்தும் வந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது.

இவர்கள் கோள்களையும், நட்சத்திரங்களையும் ஆராய்ந்து வந்தவர்கள். வானில் புதிய நட்சத்திரம் தோன்றியதும் வியப்புற்று அதன் மூலம் நடந்துவற்றை அறிய விரும்பினார்கள்.

கோள்களையும், நட்சத்திரங்களையும் வைத்து வாழ்வில் பல முடிவுகள் எடுக்கப் படுவதை நினைத்துப் பார்க்கலாம்.

ஒருவர் பிறந்த திகதியால், பிறந்த நேரத்தால் அவருக்குக் குறிக்கப்படும் நட்சத்திரம் அவரது வாழ்க்கையில் பல நேரங்களில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன என்பதை நாம் அறிவோம்.

இப்படிக் கோள்களையும், நட்சத்திரங்களையும் நம் வாழ்க்கையை நடத்திச் செல்ல விட்டுவிட்டு, பல நேரங்களில் நம்மையும், நம் குடும்பங்களையும் வழி நடத்தும் பொறுப்பிலிருந்து நாம் விலகிப் போகிறோம் என்பதை நாம் உணர்வதே இல்லை. இந்தக் கோள்களும் நட்சத்திரங்களும் கடவுளின் கைப்பிடிக்குள் இருப்பவை என்பதையே மறந்து கடவுளுக்கு பயப்படுவதற்குப் பதிலாக நாம் கோள்களுக்குப் பயப்படும் பரிதாபகரமான குழந்தைகளாகிவிடுகிறோம்

இந்த அவசர உலகில் நாம் விண்மீன்கள் நிறைந்த நிர்மல நீலவானத்தை ஆபூர்வமாகவே பார்க்கிறோம். நம்மில் பலர் நகரங்களில் வாழ்க்கிறோம். அங்கு இரவும் பகலும் எரியும் செயற்கை விளக்குகளின் ஒளியில் நாம் வானத்தையே மறந்து போகிறோம். வானத்தை நிமிர்ந்து பார்க்கக்கூட நமக்கு இப்போது நேரமில்லை. கருமேகங்கள் திரண்டு வரும்போது, "ஒருவேளை மழை வருமோ?" என்ற சந்தேகப் பார்வையோடு வானத்தை நிமிர்ந்து நோக்குகிறோம்.

கடவுள் என்ற ஒருவர் அங்கிருக்கிறாரா என்பதைத் தெரிந்துகொள்ள நாம் வானத்தை நோக்கிப் பார்ப்பதும் இல்லை. பிரார்த்திப்பதும் இல்லை. சந்தேகம் வரும்போது மட்டும் வானத்தைப் பார்த்தால், அங்கே கருமேகங்கள் மட்டுமே தெரியும். அந்தக் கருமேகங்களுக்குப் பின் கண் சிமிட்டும் விண்மீன்கள் தெரியாது. அந்த விண்மீன்கள் கண்சிமிட்டி அழைக்கும் தெய்வீக அழகும் நமக்குத் தெரியாது.

நாம் சிந்திக்கும் இந்த ஞானிகள் எத்தனை இரவுகள் விண்மீன்களை வானில் தொலைத்துவிட்டு வேதனைப் பட்டிருப்பார்கள்? இருந்தாலும் இறுதிவரை மனம் தளராமல் பயணத்தைத் தொடர்ந்தார்கள். இலக்கை அடைந்தார்கள். கடவுளைக் கண்டார்கள். அந்த ஞானிகளைப் போல் கடவுளை சிரத்தையுடன் நாமும் தேடுவோம்.

**அனிதா அசிசி**

## புனித திரேசாள் ஆலய நத்தார் பண்டிகை சிறப்புத் திருப்பலி






கொழும்பு திம்பிரிகஸ்யாய புனித திரேசாள் ஆலயத்தில் நத்தார் பண்டிகை தினத்தன்று பங்குத்தந்தை அருட்திரு சந்தன பெரேரா அடிகளார் தலைமையில் இடம் பெற்ற சிறப்புத் தமிழ் திருப்பலி பூசையை படங்களில் காணலாம். அன்றைய தினம் மூன்று மொழிகளிலும் தனித்தனியே திருப்பலி பூசைகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.
(பட உதவி: ஜொனதன்)

## எளிமையும் நம்பிக்கையும் கொண்ட வாழ்வு

### திருத்தந்தையின் மூவேளை செபவுரை



திவ்விய நற்கருணையில் இயேசுவை வணங்கி ஆராதிப்பது என்பது வெறுமனே நேரத்தை வீணாக்குவதல்ல என்றும் மாறாக நேரத்திற்கான அர்த்தத்தை வழங்குவது என்றும், இதயத்திற்கு ஊட்டமளிக்கும் எளிமையான அமைதியில் வாழ்வின் பாதையைக் கண்டறிவது என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்தார்.

ஜனவரி 6ஆம் திகதி சனிக்கிழமை வத்திக்கான் புனித பேதுரு பெஸ்லிகா வளாகத்தில் குழுமியிருந்த சுமார் 40,000 திருப்பயணிகளுக்கு திருக்காட்சிப் பெருவிழாவில் வழங்கிய மூவேளை செப உரையின்போதே திருத்தந்தை இவ்வாறு தெரிவித்தார்.

ஞானியர் குழந்தை இயேசுவைக் கண்டது போல நாமும் நம்பிக்கை, ஆச்சர்யம், ஆர்வம், கொண்டு குழந்தை இயேசுவைக் காண வேண்டும் என்றும், கடவுள் எளிய குழந்தையாக அன்பானவராக நமக்காக பிறந்தார் என்பதை உணர்ந்து வாழ வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

குழந்தை இயேசுவின் முன் நின்று அவரைப் போல எளியவராகவும் நம்பிக்கை உடையவராகவும் அவரது ஆச்சர்யமான வாழ்வை நாம் வாழ அருள் வேண்டுவோம் என்றும் இதனால் உலகின் பிரச்சனைகளை எதிர்கொள்வதற்கான புதிய மற்றும் ஆக்கப்பூர்வமான முன்னோக்குகளை நம்மால் பெற முடியும் என்றும் கூறினார் திருத்தந்தை.

கடவுளின் தாயும் நமது தாயுமான அன்னை மரியாள், குழந்தை இயேசுவின் மீதும், எல்லாக் குழந்தைகளின் மீதும், குறிப்பாகப் போர்கள் மற்றும் அநீதிகளால் பாதிக்கப்பட்டவர்களிடத்தில் நமது அன்பை அதிகரிக்க உதவட்டும் என்று கூறி தனது மூவேளை செப உரையை நிறைவு செய்தார்.

**மெரினா ராஜ்**

# கடவுளால் இரக்கம் பெறுவோர் பேறுபெற்றோர்



கடவுளால் இரக்கம் பெறுவோர் பேறுபெற்றோர். கடவுள் இரக்கம் உடையவர். ஆதலால் எல்லோரும் இரக்கத்தைப் பெறமுடியும்.

எசாயா 55:7ஆம் வசனத்தின்படி கொடியவர்கள் தம் வழிமுறைகளை விட்டு, மனம் மாறி ஆண்டவரிடம் திரும்பும் பொழுது அவர் அவர்களுக்கு இரக்கம் காட்டுவார். மன்னிப்பதில் தாராள மனம் உடையவர் அவர். ஏனெனில் மீட்க முடியாத அளவு அவர் கை குறுகிவிடவில்லை. கேட்க முடியாதவாற காது மந்தமாகிவிடவில்லை.

**(ஏசாயா 59:1.2)**

நம்மைநாமே ஆராய்ந்துப் பார்த்து வெளிவேடத்தை அல்ல உள்ளார்ந்த மனமாற்றத்தைக் கொண்டு வருவதை ஆண்டவர் விரும்புகிறார். ஏனெனில் அவர் அருள் நிறைந்தவர் இரக்கம் மிகுந்தவர். இந்த வார்த்தை தான் இன்று இந்தப் பாவம் நிறைந்த உலகில் இறைவனின் பிள்ளைகளாக எமக்கு வழி வகுக்கிறது.

நாம் ஆண்டவரின் நன்மைகளை (இரக்கத்தையும், அன்பையும்) அறிந்திருக்கின்றோம். ஆதலால் எதைச் செய்தாலும் இரக்கம் காட்டுவார். மன்னிப்பார். அன்பு செய்வார் என்று சொல்லிக் கொண்டு பாவத்தின் மேல் பாவம் செய்து பாவத்தைப் பற்றிய அச்ச உணர்வு இல்லாமல் இருக்கின்றோம்.

இந்த இரக்கத்தின் ஜூபிலி ஆண்டில் அவ்வாறின்றி செபத்தை அறிந்த ஆண்டவருடைய வார்த்தைக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும். என நினைக்கும் ஒருவர் தனக்கு எதிரே வந்து கொண்டிருந்த ஒருவர் திடீரென்று கீழே விழுந்து விட, உடனே அவர் அச்சச்சோ! என்று சொல்லிவிட்டுக் கோயிலுக்குள் போய்விட்டார்.

அங்கு அவர் முழந்தாள் படியிட்டுச் செபிப்பது நன்மை செய்ய ஒருவருக்குத் தெரிந்திருந்தும் அவர் அதைச் செய்யாவிட்டால், அது பாவம்(யாக்கோபு 4:17) என்று கூறியது போல் ஆகும்.

அவர் தூக்க உதவியிருக்கலாம். அல்லது உதவிக்கு ஆள் தேடி இருக்கலாம். எதையுமே செய்யாமல் கோவிலுக்குப் போய் முழந்தாள்படியிட்டுச் செபிப்பதை ஆண்டவர் விரும்பவில்லை.

இதைத் தான் நாம் ஆண்டவர் பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன். **(ஓசேயா 6:6.)** அதனால் தான் ஆண்டவர் தங்கள் குற்றத்திற்கான பழியை ஏற்று என்னைத் தேடி வரும் வரை என் இடத்தற்குப் போய் அவருக்காய்க் காத்திருப்பேன்.

காத்திருக்கின்ற ஆண்டவரின் இரக்கத்தைப் பெற்ற நாம் இரக்கத்தைக் கொடுப்போம். இது தான் இயங்கும் இரக்கம். இரக்கத்தால் இயக்கப்பட வேண்டும் நாமும் பிறரையும் இயக்க வேண்டும். (மத்தேயு 5:7) இரக்கமுடையோர் பேறுபெற்றோர். எனெனில் இரக்கம் பெறுவர்.

**(சாலமோனின் ஞானம் 12:5,6)**

எதிர்க்க முடியாத குழந்தைகளைக் கொல்வது சிசுகொலை மன்னிக்கமுடியாத பாவம். உங்களையும் என்னையும் கொல்ல வந்தால் பேராடுவோம். ஆனால் கருவிலிருக்கும் குழந்தை என்ன செய்யும்? இந்த மாதிரியான பாவத்திற்கு அந்தக் காலகட்டத்தில் திருத்தந்தையிடம் பாவ மன்னிப்புப் பெற்று பேதுரு ஆலயத்தில் நுழைந்து திருப்பலியில் பங்கேற்க வேண்டும் என்பது மரபு.

அதற்காகத் தான் நம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் இரக்கத்தின் வாயில்களைத் திறந்து வைத்து ஒப்புரவு அருள்சாதனம் பெற்று இரக்கத்தின் வாயில் வழியாக நுழைந்துத் திருப்பலியில் பங்கேற்று நற்கருணை பெற்று இறைஇரக்கத்தைப் பெற வேண்டும் என்கிறார். அதை நாமும் செய்வோம். பலன் பெறுவோம்.

**(திருப்பாடல் 139:13)**

திருப்பாடல் ஆசிரியர் தாவீது கூறியது போல நம்மை முற்றிலும் அறிந்தவர். அவரை ஏமாற்றமுடியாது. எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு அறிந்து இருப்பவர். (சீராக் 23:9) ஆண்டவரின் கண்கள் கதிரவனைவிடப் பத்தாயிரம் மடங்கு ஒளி படைத்தவை. திருப்பாடல் 145:9

தாம் உண்டாக்கிய அனைத்தின் மீதும் இரக்கம் காட்டுகிற கடவுள் உம் மீதும் என் மீதும் இரக்கம் காட்டாது இருப்பாரா? (யாக்கோபு 2:13) இரக்கம் காட்டாதோருக்கு இரக்கமற்ற தீர்ப்பு தான் கிடைக்கும். இரக்கமே தீர்ப்பை வெல்லும். இதை நினைவில் கொள்வோம். இரக்கமுடையோராய் வாழ்வோம்.

**திருமதி ஜெயமேரி**





கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஏற்பாடு செய்த பொங்கல் விழா நேற்று திருகோணமலையில் நடைபெற்றது. இலங்கை வரலாற்றில் முதல் முறையாக 1008 பானைகளில் பொங்கல் பொங்க,1500 பரதநாட்டிய கலைஞர்கள் நடனமாட, 500 பெண்கள் கோலமிட இப்பொங்கல் விழா நடத்தப்பட்டது.

# ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயத்தில் ஸ்ரீ ஆஞ்சநேயர் ஜெயந்தி விழா

ஸ்ரீ ஆஞ்சநேயர் ஜெயந்தி விழா, கொழும்பு, தெஹிவளை அருள்மிகு ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயத்தில் வெகு விமர்சையாக நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 09ஆம் திகதி தேர்த்திருவிழாவும் எதிர்வரும் 10ஆம் திகதி ஸ்ரீ ஆஞ்சநேயர் ஜெயந்தி விழாவுக்கான சங்காபிஷேகம் நடைபெறும். இன்று காலை 6 மணிக்கு வசந்த மண்டபூஜையுடன் தேர்த்திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் 10ஆம் திகதி காலை 5 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறும். எதிர்வரும் 15ஆம் திகதி மாலை 5 மணிக்கு தைப்பொங்கலன்று சபரிவாசன் (தர்மசாஸ்தா) அலங்கார பூஜையும் மகரஜோதி தரிசனமும் நடைபெறும்.

எதிர்வரும் 16ஆம் திகதி மாலை 5 மணிக்கு வைரவர் மடை நடைபெறும்.

## சமய போதனை போர்வையில்...

தடுக்கவும், இதுபோன்ற செயற்பாடுகளை இல்லாதொழிப்பதற்கும் அரசாங்கம் புதிய சட்டமொன்றை தயாரித்துவருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டதிட்டங்களுக்கு அமைய அனைவருக்கும் தமது சமய நடவடிக்கைகளை முன்னெடுக்கக்கூடிய வகையில், சூழலை உருவாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கொடுப்பனவுகளை அதிகரிக்கும்...

கொடுப்பனவை அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக மருத்துவர்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பேராசிரியர்களின் சேவை இத்தகைய தருணத்தில் நாட்டிற்கு மிகவும் அவசியமானது என்பதை தெளிவுபடுத்திய அவர், அவர்களை தொடர்ந்தும் நாட்டில் தக்க வைத்துக்கொள் வது அவசியமானது என்றும் மக்களுக்கு அவர்களுடைய சேவை அவசியமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்தவகையில், அரசாங்க ஊழியர்களின் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு உள்ளிட்ட ஏனைய நன்மைகளையும் அதிகரிப்பதானது நாட்டின் பொருளாதார முன்னேற்றம் மற்றும் ஸ்திரத்தன்மைக்கு வழி வகுக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தயாசிறி ஜயசேகர எம்.பி... (03ஆம் பக்க தொடர்ச்சி)

துஷ்மந்த மித்ரபாலவின் பணிகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில், அவர் செயற்படுவதையும் அது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு தவறான பரிந்துரைகளை வழங்குவதையும் தடுக்கும் வகையில் இந்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த தடையுத்தரவு எதிர்வரும் 21ஆம் திகதி வரை அமுலில் இருக்குமென, கொழும்பு மாவட்ட நீதிமன்ற நீதிபதி சந்துன் விதானகே உத்தரவிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் அதன் பதில் செயலாளர் நாயகம் சாரதி துஷ்மந்த மித்ரபால ஆகியோர் சமர்ப்பித்த மனுவை பரிசீலித்த பின்னரே, நீதிமன்றம் இந்த தடையுத்தரவை பிறப்பித்தது .

## மஹவயிலிருந்து அநுராதபுரம்...

குணவர்தனவின் தலைமையில் இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா வின் பங்கேற்புடன், கல்கமுவ ரயில் நிலையத்திற்கருகில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்திய இர்கோன் சர்வதேச நிறுவனத்தின் மூலம் இந்த நிர்மாணப்பணிகள் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் இ த் திட்டத்தின் உடன்படிக்கை பெறுமதி 91.27 மில்லியன் அமெரிக்கன் டொலராகும் (30,000 மில்லியன் ரூபா).

128 கிலோ மீற்றரை உள்ளடக்கும் வகையிலான முழுமையான இத்திட்டம், இவ் வருடத்தின் ஜுலை 6 ஆம் திகதி நிறைவுசெய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அமைச்சர் பந்துல குணவர்தனவின் விசேட வேண்டுகோளுக்கிணங்க பொஸன் பண்டிகையையொட்டி ஜூன் மாதம் 15 ஆம் திகதி நிர்மாணப் பணிகளை நிறைவுசெய்வதற்கு தீர்மானிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கை கள் ரயில்வே திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன .

இதற்கு, நிர்மாணப் பணியில் ஈடுபடும் இந்திய சர்வதேச நிறுவனமும் இணக்கம் தெரிவித்துள்ளது.

முழுமையான திட்டத்தின் இரண்டாவது கட்டமாக நடைமுறைப்படுத்தப்படும் மஹவவிலிருந்து அநுராதபுரம் வரைக்குமான ரயில் பாதை தொகுதியின் கீழ் 65 கிலோ மீற்றர் தூர பாதை புனரமைக்கப்படவுள்ளது. இந்த நிர்மாணப் பணிகள் நிறைவுபெற்றதும், ரயில்கள் 100 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்க முடியும் என்றும் அமைச்சர் இதன் போது தெரிவித்துள்ளார்.

## செங்கடலூடாக வரும் கப்பல்களுக்கு...

தமது நாடுகளுக்கு வருகை தரும் பொருட்கள் போக்குவரத்து கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கும் நடவடிக்கைகளை பிராந்தியத்தின் ஏனைய நாடுகளும் தற்போது முன்னெடுத்துள்ளன.

ஹூதி கிளர்ச்சியாளர்க ளினால் அச்சுறுத்தலால்,தற்போது பெருமளவு கப்பல்கள் செங்கடலை தவிர்த்து வேறு வழியாக பயணிக்கின்றன.இதனால், கப்பல் போக்குவரத்துக் கட்டணம் அதிகரித்து வருகின்றது. கொழும்புத் துறைமுகத்திற்கு கப்பல்கள் வருவதற்கு தென்னாபிரிக்கா போன்ற நாடுகளுக்குச் சென்று திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பதற்கும் இடமுண்டு. கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் எரிபொருள் கப்பல் வரும்வரை காத்திருந்த நாடு. தற்போது சர்வதேச கடலில் பாதுகாப்பிற்காக கப்பலை அனுப்பும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

ஹூதி நடவடிக்கை களுக்கு எதிராக இலங்கையின் கடற்படை கப்பல் செங்கடலுக்கு அனுப்பப்படும். பாதுகாப்பு ஒத்துழைப்பு வழங்குவதற்கு இலங்கை இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

## யுக்திய சுற்றிவளைப்பில்...

ஊழல் மற்றும் சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பான பொலிஸ் பிரிவு கைப்பற்றியுள்ளது.

இச்சொத்துக்களின் 610 இலட்ச ரூபாவுக்கும் அதிக பெறுமதி கொண்ட வாகனம், 450 இலட்ச ரூபா பெறுமதியான வீடு மற்றும் காணிகளும் உள்ளடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள பிராடோ ரக ஜீப் வண்டியின் பெறுமதி 330 இலட்சம் ரூபா என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அத்துடன் 130 இலட்சம் ரூபா பெறுமதியான கே.டி.எச்.ரக வான், 76 இலட்சம் ரூபா பெறுமதியான கார், 64 இலட்சம் ரூபா பெறுமதியான கார், 10 இலட்சம் ரூபா பெறுமதியான முச்சக்கரவண்டி, 15 இலட்சம் ரூபா பெறுமதியான 7.5 பேர்ச்சஸ் காணி, 45 இலட்சம் ரூபா பெறுமதியான மாலபே பிரதேசத்திலுள்ள காணி, 240 இலட்சம் ரூபா பெறுமதியான ரஜவத்த டெரஸ், ஜாஎல கொடுகொட பிரதேசத்திலுள்ள 12.5 பேர்ச்சஸ் காணி, 2 மாடிவீடுகள், 150 இலட்சம் ரூபா பெறுமதியான ஜாஎல நிவன்தன தெற்கிலுள்ள காணி ஆகியவையும் பொலிஸா ரால் கைப்பற்றப்பட்ட சொத்துக்களில் உள்ளடங்குவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சொத்துக்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு, தடைசெய்யும் வகையில் நீதிமன்ற உத்தரவை பெற்றுக் கொள்ளவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## ரூ.80 கோடி 40 இலட்சம்...

தலைமையில் பருத்தித்துறை பொலிஸார் நேற்றுக் காலை குறித்த இடத்திற்குச் சென்று மறைவாக இருந்து அவதானித்துள்ளனர். நீண்டநேரமாகியும் குறித்த பொதியை எடுத்துச் செல்வதற்கு எவரும் வராத நிலையில், பொலிஸார் குறித்த பொதியை கைப்பற்றி சோதனை செய்துள்ளனர்.

மத்திய போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்தின் தரவுகளுக்கு அமைவாக இவை,கைப்பற்றப்பட்டன. அபின் போதைப் பொருள் ஒரு கிலோ ரூ. ஒரு கோடி 80 லட்சம் ரூபாவாகும்.

கைப்பற்றப்பட்ட 48 கிலோ அபினின் மொத்த பெறுமதி ரூபா 86 கோடி 40 லட்சம் எனவும், ரூ.44 லட்சத்து 80 ஆயிரம் பெறுமதியான 28 கிலோ கிராம் கேரள கஞ்சாவும் கைப்பற்றப்பட்டிருப்பதாகவும் பருத்தித்துறை தலைமைப்பீட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பியந்த அமரசிங்க தெரிவித்தார்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட அபின் போதைப்பொருள் நாட்டில் பாவனையில் இல்லாத நிலையில், கடல்வழியாக நாட்டுக்கு கொண்டுவந்து வேறு நாடுகளுக்கு கொண்டுசெல்லும் நோக்கில் இவை,கடத்தி வரப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இந்தளவு பெருந்தொகை அபின் கைப்பற்றப்பட்டுள்ளமை வரலாற்றில் முதன்முறை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கைப்பற்றபட்ட அபின் மற்றும் கஞ்சா போதைப்பொருட்களை பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஒப்படைக்க, நடவடிக்கை எடுத்துள்ளதாக பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## கடன் வழங்குநர்களுடன்...

காணப்பட்டிருந்தது. இந்நிலையில், உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழுவிற்கு (OCC) வெளியே உடன்படிக்கைகளின் நேர்மைத்தன்மை மற்றும் ஒப்பீட்டு வகையை உறுதிப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜப்பான் சுட்டிக்காட்டியுள்ளது.

ஜப்பான், பிரான்ஸ் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் இணைத் தலைமைத்துவம் ஏற்கும் கடன் வழங்கும் நாடுகள் 15 ஆகும்.

பொருளாதாரம் மற்றும் நிதி ரீதியில் இலங்கையை பலப்படுத்துவதற்காக ஒத்துழைப்பு வழங்குவதற்கு பல்வேறு நாடுகள் ஆதரவு வழங்கும் என்றும் ஜப்பான் தெரிவித்துள்ளது.

1948 ஆம் ஆண்டு சுதந்திரத்தின் பின்னர் கடும் நிதி நெருக்கடியுடன் போராடிய தெற்காசிய நாடான இலங்கை பணவீக்கம், நிதி மற்றும் குறைந்த வெளிநாட்டு கையிருப்பு காரணமாக பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்தது.

2022 ஆம் ஆண்டு மே மாதம் வெளிநாட்டுக் கடனை தவிர்த்து கடன் வழங்குனர்களுடன் மறுசீரமைப்பை மேற்கொள்ளும் வேலைத்திட்டத்திற்கு உறுதியளித்தது. இலங்கை மற்றும் கடன் வழங்கும் நாடுகள் கடந்த நவம்பர் மாதத்தில் கொள்கை ரீதியான கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இணக்கப்பாட்டுக்கு வந்தன.

அந்தவகையில் 5.9 பில்லியன டொலர் என்ற ரீதியில் அரச கடன் நிலுவை முன்னெடுக்கப்படும்வகையில் நீண்டகால திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது

## ஷேக்ஹஸீனாவின் வெற்றிக்கு...

ஷெய்க் ஹஸீனா இதுவரை காலமும் பங்களாதேஷ் மக்களுக்கு பெற்று கொடுத்த திறமையான மற்றும் தொலைநோக்கு தலைமைத்துவம் இந்த வெற்றிக்கு வழி வகுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஷெய்க் ஹஸீனாவின் ஆட்சி காலத்தில் இலங்கைக்கும் பங்களாதேசுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் மிகவும் வலுவாக முன்னோக்கி பயணித்தது. எதிர்காலத்திலும் இத்தொடர்பை விரிவுப்படுத்தி இரு நாடுகளதும் தொடர்புகளை பேண முடியும்.

வெகு விரைவில் இலங்கைக்கு விஜயமொன்றை மேற்கொள்ளுமாறு ஹஸீனாவுக்கு அழைப்பு விடுத்த ஜனாதிபதி இலங்கைக்கும் பங்களாதேசுக்கும் இடையிலான அரசியல், பொருளாதார மற்றும் கலாசார தொடர்புகளை மேம்படுத்துவதற்கு அன்னியோன்ய நம்பிக்கை மற்றும் நட்பை அதிகரிப்பதற்கு அவரது விஜயம் உதவியாக இருக்கும்.

கடந்த காலங்களில் ஷேய்க் ஹஸீனா தனிப்பட்ட ரீதியில் தலையிட்டு பங்களாதேஷ் இலங்கைக்கு பெற்றுக் கொடுத்த விசேட ஒத்துழைப்பு தொடர்பாக நினைவுகூர்ந்த ஜனாதிபதி ஷேய்க் ஹஸீனா இலங்கை மக்கள் மீது கொண்ட அன்புக்கும் ஆதரவுக்கும் நன்றி தெரிவித்தார்.

பங்களாதேஷ் மக்களின் முன்னேற்றம் மற்றும் வளமான வாழ்வுக்காக நடவடிக்கைகளை எடுப்பதற்கு பிரதமர் ஷேய்க் ஹஸீனா நலமுடன் வாழ பிரார்த்திப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

# இன்றைய பலன்கள்

**( 09. 01. 2024 )**

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:** குடும்பத்தில் சலசலப்புகள் ஏற்படாமல் கலகலப்பாக இருக்க விட்டுக் கொடுத்துச் செல்வது உத்தமம்.

**ரிஷபம்:** வரும் மாற்றங்களை ஏற்றுக் கொள்வது உத்தமம். சகோதரருக்குள் இருந்த வாக்குவாதங்கள் அகலும். பாகப்பிரிவினைகள் சுமூகமாக முடியும்.

**மிதுனம்:** பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புதிய ஒப்பந்தங்களும் வந்து சேரும். குடும்பத்தில் ஒன்றுக்கும் மேற்பட்டவர்களின் வருமானம் கிடைத்து மகிழ்ச்சி படுத்தும்.

**கடகம்:** பூர்வீக சொத்துக்களை பிரித்துக் கொள்வதில் பிரச்சினைகள் உருவாக்கலாம். உத்தியோகத்தில் வேலை பளு அதிகரிக்கும்.

**சிம்மம்:** பெற்றோர் வழியில் சில பிரச்சினைகளை சந்திப்பீர்கள். கடல் தாண்டி செல்வதில் தாமதங்கள் உருவாகும். புதிய வாகனங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி:** சிறு சிறு ஆரோக்கிய தொல்லைகள் வந்து அலைமோதும். பங்குதாரர்களின் விரோதத்தால் இதுவரை மூடிகிடந்த தொழில் இப்போது திறக்கப்படும்.

**துலாம்:** ஆங்கில புத்தாண்டு சிறப்பாக அமையட்டும். தம்பதிகளுக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். கல்யாண முயற்சிகளில் இருந்த தடை விலகும்.

**விருச்சிகம்:** முத்தான தொழில்கள் வாய்க்கும் யோகம் உண்டு. முன்னேற்ற பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். எதிரிகள் பலம் குறையும்.

**தனுசு:** பங்குச் சந்தை,வெளிநாட்டு வணிகத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு வருமானம் திருப்திகரமாக இருக்கும். அதே நேரம் விரயங்கள் கொஞ்சம் கூடுதலாக இருக்கும்.

**மகரம்:** விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். பாக்கியங்கள் வசூல் ஆகி பரவசப்படுத்தும். இடம் பூமி வாங்குவதிலிருந்த பிரச்சினை அகலும்.

**கும்பம்:** வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைத்து அதன் மூலம் உதிரி வருமானங்கள் வரலாம். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:** வெளிநாட்டில் உள்ள நல்ல நிறுவனங்களில் இருந்து உத்தியோகத்திற்கான அழைப்புகள் வரலாம். பணிபுரியும் இடத்தில் பல நாட்களாக இருந்த பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும்.

## பாராளுமன்றம் இன்று...

தேசிய நல்லிணக்கம் மற்றும் மறுசீரமைப்பு தொடர்பான அலுவலக சட்டமூலம், தேசிய நீர் தொடர்பான சட்டமூலம் மற்றும் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தின் கீழ், வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியின் கட்டளைகள் தொடர்பான விவாதங்களும் இடம்பெறவுள்ளன.

## உலகில் சுற்றுலா பயண...

அதற்கிணங்க இந்த பட்டியலில் ஜப்பான், ஆர்ஜன்டீனா மற்றும் எகிப்து நாடுகள் முதல் மூன்று இடங்களைப் பிடித்துள்ளன. மிக நெருக்கடியான சில வருடங்களின் பின்னர் இலங்கையானது சுற்றுலாத்துறையில் தற்போது முன்னேற்றம் கண்டு வருவதாகவும் அந்த இணையத்தளம் இலங்கை தொடர்பில் கருத்துக்களை பதிவு செய்துள்ளது.

அதேவேளை இலங்கை மத்திய வங்கியின் தரவுகளுக்கிணங்க 2023ஆம் ஆண்டு 1,487,303 உல்லாசப் பிரயாணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

அந்த வகையில் சுற்றுலாத்துறையானது கடந்த வருடத்தில் 2,068 மில்லியன் அமெரிக்கன் டொலர்களை வருமானமாக பெற்றுக்கொண்டுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

## மதுபானசாலையை ஆரம்பிக்க...

அதிக தேவை இருப்பதால், அந்த உரிமம் வழங்குவதற்கு அடிப்படைக் கட்டணமாக ஒரு கோடி ரூபாவை வைப்பிலிடவேண்டுமெனவும் அவர் தெரிவித்தார். சுற்றுலாத்துறையுடன் இணைந்து உரிமம் வழங்கும் திட்டத்தை விரிவுபடுத்த நம்புவதாகத் தெரிவித்த அவர், நாட்டின் பொது மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள வரிச் சுமையை படிப்படியாகக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

## ஐக்கிய மக்கள் சக்திக்குள்...

இணைந்து கொண்டுள்ள சில தரப்பினருடன் அந்தக் கட்சியில் உள்ளவர்கள் எதிர்ப்பினைத் தெரிவித்து வருவதாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறு கட்சியில் இணைவதாக பாராளுமன்ற பிரதிநிதித்துவம் தொடர்பான போட்டி உக்கிரமடையலாம் என்ற காரணத்தினாலேயே அவர்கள் இந்த எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர்.

எவ்வாறாயினும் இதுவரை ஐக்கிய மக்கள் சக்தியின் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொண்டு அந்த கட்சியில் இணைந்து கொண்டவர்கள் ஜயரத்ன ஹேரத், சந்திம விஜயகொடி, சான் விஜேயலால் மற்றும் தயாசிறித திசேரா ஆகியோர் மட்டும என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

# புதுக்குடியிருப்பில் டெங்கு நோய் பரவலை தடுக்க நடவடிக்கை

*(மாங்குளம் குரூப் நிருபர்)*

புதுக்குடியிருப்பில் டெங்கு நோய் பரவலை தடுக்க விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர், புதுக்குடியிருப்பு பிரதேச சபையினருடன் இணைந்து இவ்வேலைத் திட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

பிரதேசசபை மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள், சுகாதார பரிசோதகர்கள், இராணுவம், பொலிஸார், வர்த்தக சங்கத்தினர் இணைந்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை



நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பித்துள்ளனர். புதுக்குடியிருப்பு நகர்ப குதி மற்றும் புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்துக்குட்பட்ட பகுதிகளில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் டெங்கு நோய் சடுதியாக அதிகரித்திருப்பதனால் நீர் தேங்கி நுளம்பு குடம்பிகள் பரவக்கூடிய சிறிய பாத்திரங்கள், பிளாஸ்டிக் பொருட்கள், ஏனைய நீர் தேங்கி நிற்கக் கூடிய பொருட்களை அகற்றுமாறும், டெங்கு அபாய நிலையை கருத்திற்கொண்டு சுகாதார திணைக்களத்தின் அறிவுறுத்தல்கள் மீறப்படும் பட்சத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு கடுமையான தண்டனைகள் வழங்கப்படும் எனவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

## வடக்கின் உதயம்





மறைந்த மன்னார் மறைமாவட்ட முன்னாள் ஆயர் அமரர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் திருவுருவ சிலை மன்னார் ஜோசப் வாஸ் நகர் கிராமத்தில் நேற்று முன்தினம் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரட்திரு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையினால் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள்,பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், பங்குமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்; மன்னார் குறூப் நிருபர்)



யாழ்.பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருக்காட்சி விழா (07) நேற்றுமுன்தினம் ஆலய பங்கு முதல்வர் ஆர். நேசராஜா தலைமையில் இடம்பெற்றது. யேசுபாலனின் பிறப்பின் திருப்பாடுகளை எடுத்துக்காட்டும் வகையில் திருக்காட்சிகள் அரங்கேற்றப்பட்டன. இதில் அருட்சகோதரர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

(படம்; கோப்பாய் குறூப் நிருபர்)

# ஐஸ் போதைக்கு அடிமையான இளம் பெண் கைது

*யாழ்.விசேட நிருபர்*

யாழில் ஐஸ் போதைக்கு அடிமையான இளம்பெண்ணொருவர் பருத்தித்துறை நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பகுதியில் இரவு வேளை சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய பெண்ணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பெண்ணின் நடவடிக்கையில் சந்தேகமடைந்த பொலிஸார் அப்பெண்ணை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் ஆஜர்படுத்தி மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திய போது அவர் போதைக்கு அடிமையானவர் என கண்டறியப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து அப்பெண்ணிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் அண்மைக்காலமாக ஐஸ் போதைக்கு அடிமையாகியுள்ளமை தெரியவந்துள்ளது.

விசாரணைகளின் பின்னர் , பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது அப்பெண்ணை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# காரை நகர் வீதியை புனரமைத்து தருமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை

*(யாழ்.விசேட நிருபர்)*



காரை நகர் வீதியை புனரமைத்து தருமாறு இளைஞர் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் செந்தூரன் ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில், நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற சந்திப்பின்போதே குறித்த கோரிக்கையினை ஜனாதிபதியிடம் முன்வைத்தார்.

16 கிலோமீற்றர் நீளமுள்ள காரைநகர் சுற்று வீதி நீண்டகாலமாக புனரமைப்பு செய்யப்படாமல் உள்ளது. அவ்வீதியை பயன்படுத்துவோர் கடும் இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இலங்கையில் மிகவும் மோசமான வீதியாக காரைநகர்வீதி காணப்படுகின்றது. எனவே காரைநகர் சுற்று வீதியினை உரிய வடிகால் அமைப்பு முறைகளுடன் புனரமைப்பு செய்து தரவேண்டுமென கோரிக்கை விடுத்தார்.

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் நிவாரண உதவிகள்



*(கரவெட்டி தினகரன் நிருபர்)*

வடமராட்சி தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் தொடர் மழை காரணமாக பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்தின் லகுகல பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட 35 குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

நிவாரணப்பணிகளை ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார்.

# யாழ் ஸ்ரீ தேவி பூதேவி சமேத மகா விஷ்ணு ஆலய கும்பாபிஷேகம்

சைவமும் தமிழும் தானமும் தார்மமும் தழைத்தோங்கும் ஈழத்திருநாட்டின் சிகரமென விளங்கும் யாழ்ப்பாண நகரின் கிழக்கே கச்சேரி நல்லூர் வீதியில் கோயில்கொண்டு கல்ப்பவிருட்ஷ மந்திரசுவர்ண நவரத்தின சிம்மாசனத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் யாழ்ப்பாணம் அருள்மிகு ஸ்ரீ தேவி பூதேவி சமேத மகா விஷ்ணு தேவஸ்தானத்தின் மகா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 9.53 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்ட மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 8.35 மணிக்கு ஆரம்பமாகும்.

எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிமுதல் பிற்பகல் 4 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

சிவஶ்ரீபாலசுதர்சன சிவாச்சாரியார் தலைமையில் கும்பாபிஷேக கிரியைகள் நடைபெறும்.

எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 6 மணிமுதல் விஷ்ணு சகஸ்ரநாம பாராயணம் இடம்பெறும். அதனைத்தொடர்ந்து 6.30 மணி முதல் கைலாச விநாயகர் வழிபாடு, ஆச்சாரிய தருணம், பிரதிஷ்டா மகா சங்கற்பம், புண்ணி யாகவாசனம் காவேரி தீர்த்த திருமஞ்சன சங்கோபனம், மணிக் கோபுர ஸ்தூபி அபிஷேகம், தேவபிராமண அனுக்ஞை, திரவ்வியசுத்தி, திரவ்விய சகஸ்நாமம், தனகர்சன குபேர பூஜை, லக்ஷ்மி பூஜை, முகூர்த்த பத்திரிகை படனம், மகா கணபதி ஹோமம், மகாலட்சுமி ஹோமம். நவக்கிரக மகம், விநாயகர் அகவல் பாராயணம், திருநாம பிரசாத சேவை என்பன நடைபெறும்.

அன்று மாலை 4 மணி முதல் விஷ்ணு சகஸ்ரநாம பாராயணம் பஞ்சகத்தில் கைலாச விநாயக வழிபாடு, கிராமசாந்தி, பிரவேச பலி, அஷ்டபலி, திருஞானபிரசாத சேவை என்பன நடைபெறும்.

## போதைப் பொருளுடன் இருவர் கைது

*(யாழ்.விசேட நிருபர்)*

யாழ்ப்பாணம் மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் போதைப்பொருளுடன் கைதான இரு இளைஞர்களையும் புனர்வாழ்வு மையத்துக்கு அனுப்பி வைக்குமாறு மல்லாகம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மானிப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட 24 மற்றும் 25 வயதுகளையுடைய இரு இளைஞர்களை சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே இவர்கள் இருவரும் போதைக்கு அடிமையானவர்கள் என கண்டறியப்பட்டது.

அதனை தொடர்ந்து மேலதிக விசாரணைகளின் பின்னர், மல்லாகம் நீதவான் நீதிமன்றில் பொலிஸார் இரு இளைஞர்களையும் ஆஜர்படுத்திய போது அவர்களை கந்தக்காடு மறுவாழ்வு மையத்துக்கு அனுப்புமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

# விஷ பாம்புக்கடிக்கு இலக்காகி குடும்பஸ்தர் உயிரிழப்பு

*(சாவகச்சேரி விசேட நிருபர்)*

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரணி பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் விஷ பாம்புக்கடிக்கு இலக்காகி 62 வயதான மகேந்திரன் என்ற குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.

மேற்படி குடும்பஸ்தர் அவருடைய தோட்டத்தில் மாட்டுக்கு புல் வெட்டிய போது விஷ பாம்பு தீண்டியுள்ளது. இதனையடுத்து குடும்பஸ்தர் மயக்கமடைந்த நிலையில் கிடந்ததை அவதானித்த அயலவர்கள் அவரை மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதிலும் அவர் வழியிலேயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளின் பின்னர் நேற்று திங்கட்கிழமை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மரண விசாரணைகளை கொடிகாமம் மரண விசாரணை அதிகாரி திருமதி சி.தவமலர் மேற்கொண்டிருந்தார்.



வலிகிழக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பத்து விளையாட்டு கழகங்களைச் சேர்ந்த 150 கிரிக்கட் வீரர்களை ஏலத்தில் தெரிவு செய்யும் "யூ.சி.எல் மெகா ஒக்சன்" எனும் நிகழ்வு அண்மையில் ஊரெழு அனுஷ்கா திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக ஊரெழு கணேச வித்தியாசாலை அதிபர் திரு.இரா. ஜெயக்குமார் கலந்துகொண்டார்.

## மன்னார் மாவட்ட

# மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி உரிய தீர்வை வழங்க வேண்டும்

### வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடக பேச்சாளர்

*(மன்னார் குறூப் நிருபர் )*

மன்னார் மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி உரிய தீர்வை வழங்க வேண்டும் என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடக பேச்சாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று (8) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடக்கிற்கான விஜயத்தின் போது மன்னார் மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாட எங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எனினும் கலந்துரையாடல் தொடர்பான நிகழ்ச்சி நிரல் மாற்றப்பட்டிருந்தமையால் எமது கோரிக்கைகளை முன்வைக்க முடியாத நிலை ஏற்பட்டது.



இந்திய இழுவைப்படகுகளால் எமது வாழ்வாதாரம் அடியோடு அற்றுப் போகும் நிலை ஏற்பட்டுள்ளது. படியாக எமது கரைக்கு மிக அருகாமையில் (சுமார் 500 மீற்றர் தொலைவில்) வந்து மீன்பிடி நடவடிக்கைய மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் எமது தொழில் வெகுவாகப் பாதிக்கப்படுவதோடு கடல் வளம் அறவே அற்றுப் போய் விடுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இதுதொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்தவேண்டும். இல்மனைட் மண் அகழ்வினாலும் கடற்றொழில் பாதிக்கப்பட்டு வருகின்றது. அதேபோல் இழந்த மீன்பிடி உபகரணங்களுக்கான நஷ்டஈட்டை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

எமது மாவட்டத்தில் மீனவர்கள் இயற்கை சீற்றங்களினாலும் இந்திய இழுவைப் படகுகளினாலும் தமது மீன்பிடி உபகரணங்களை இழந்து விடுகின்ற பல சந்தர்ப்பங்கள் தொடர்ந்து ஏற்பட்ட வண்ணமுள்ளன. எனவே எமது மாவட்ட மீனவர்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி தீர்வை பெற்றுத்தர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## முல்லைத்தீவில் மக்கள் ஆர்ப்பாட்டம்

*(மாங்குளம் குரூப் நிருபர்)*

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பின் வவுனியா மாவட்ட தலைவியை விடுதலை செய்யக்கோரி முல்லைத்தீவில் நேற்று ஆர்ப்பாட்ட பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று காலை 10.30 மணியளவில் இப்பேரணி ஆரம்பமானது. முல்லைத்தீவு புனித இராஜப்பர் தேவாலயத்திற்கு முன்பாக ஆரம்பமாகிய ஆர்ப்பாட்ட பேரணியானது முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக சென்று நிறைவு பெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'பொலிஸ் அராஜகம் ஒழிக', 'விடுதலை செய் விடுதலை செய்',' ஜெனிற்றாவை விடுதலை செய்', 'சர்வதேச விசாரணையே எமக்கான தீர்வு போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்ததுடன், கோஷங்களையும் எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர் .

# கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மாணவர் கௌரவிப்பு





(முல்லைத்தீவு குறூப் நிருபர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் க.பொ.த.உயர்தரம், சாதாரண தரம், தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று சாதனை புரிந்த அரச உத்தியோகத்தர்களின் பிள்ளைகள் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் வைத்து கௌரவமளிக்கப்பட்டனர். மாவட்டச் செயலகத்தின் வருடாந்த ஒன்றுக் கூடலிலேயே இம்மாணவர்கள் கௌரவமளிக்கப்பட்டனர். கிளிநொச்சி மத்திய கல்லூரியிலிருந்து உயர்தர விஞ்ஞானப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்ற கேதீஸ்வரன் கிசேரன் உட்பட சாதனை நிலை நாட்டிய மாணவர்கள் கிளிநொச்சி மாவட்டச் செயலாளரால் கௌரவமளிக்கப்பட்டனர்.

# கிழக்கின் குரல்



## டெங்கு பரவும் சூழலை வைத்திருப்போருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும்

### சுகாதார வைத்திய அதிகாரி ஏ.ஆர்.எம்.அஸ்மி

*(பெரியநீலாவணை விசேட நிருபர்)*



தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் டெங்கு மேற்பார்வை மற்றும் சிரமதான பணிகள் தற்போது தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இதன் ஆரம்ப நிகழ்வு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் சகீலா இஸ்ஸதீனின் பணிப்புரைக்கு அமைய நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் தொடர்ந்தும் ஒருவார காலத்திற்கு டெங்கு நுளம்பு பரவும் இடங்கள் மேற்பார்வை செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி ஏ.ஆர்.எம்.அஸ்மி தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையில் இதுவரை 80 ஆயிரம் பேருக்கு மேற்பட்டோர் டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 50ற்கு மேற்பட்டோர் மரணமடைந்துள்ளனர். பொதுமக்களாகிய உங்கள் ஒவ்வொருவருடைய வாசல் கதவுகளையும் டெங்கு மரணம் தட்டும் போது இதன் உண்மையான பாதிப்பை உணரக்கூடியதாகவிருக்கும். டெங்கு மரணமொன்று இடம்பெறுவதாகவிருந்தால் அதற்கு சுகாதாரத் தரப்பும் பொதுமக்களும் பொறுப்பு கூற வேண்டும். இரு தரப்பினரதும் ஒத்துழைப்பு இல்லாத போதே டெங்கு மரணம் நிகழ்கிறது. எனவே வீடு வீடாக சென்று டெங்கு தொடர்பான பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளோம். டெங்கு நோய் பரவுவதற்கான சூழல்கள் அடையாளங்கள் காணும் பட்சத்தில் உரிய நபர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். பொது இடங்களில் டெங்கு நோய் பரவுவதற்கான சூழலை இல்லாமல் செய்யும் சிரமதான பணிகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதேபோன்று சமூகத்தில் உள்ள மதஸ்தலங்கள், சிவில் சமூக அமைப்புக்கள், விளையாட்டுக்கழகங்கள், சமூக சேவை நிறுவனங்கள் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இவ்வாறான அமைப்புகள் கடந்த காலங்களில் எமக்கு பாரியளவிலான ஒத்துழைப்புகளை வழங்கி வருகின்றன. அவர்களுடைய ஒத்துழைப்பு எதிர்காலத்திலும் எமக்கு கிடைக்க வேண்டுமென தெரிவித்தார்.

ஆரம்ப நிகழ்வில் வைத்தியர்கள் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொலிஸ் அதிகாரிகள், சிவில் சமூக பிரதிநிதிகள் என பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

10 வருடங்களுக்கு மேலாக

## பாழடைந்து கிடக்கும் அரச கட்டடம் மீள இயக்க தீர்மானம்



*(தம்பலகாமம் குறூப் நிருபர்)*

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட மஜீத் நகர் டீ சந்தியிலுள்ள மருத்துவ நிலையம் பலவருடகாலமாக பாழடைந்த நிலையில் காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இக்கட்டடம் ஆரம்பிக்கப்பட்டு திறப்பு விழா மட்டுமே இடம் பெற்றதாகவும் அதன்பின்னர் கைவிடப்பட்ட நிலையில் பயன்பாடின்றி கிடப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியிலுள்ள கர்ப்பிணி தாய்மார்கள், குழந்தைகளுக்கான நிறை போசாக்கு தொடர்பிலான சிகிச்சைகளுக்கு பல கிலோமீற்றர் தூரம் செல்ல வேண்டியுள்ளது.

இதனை கருத்திற் கொண்டு குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஊடாக இக்கட்டடத்தை மீள் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எம்.எம்.அஜீத் இக்கட்டடத்தை பார்வையிட்டதுடன் எதிர்வரும் வாரமளவில் மீள் இயங்க செய்வதாக தெரிவித்துள்ளார். இதனை மீள் இயங்க செய்தால் மக்கள் இதன்மூலம் பயனடைவர்.

## களுவாஞ்சிக்குடியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுப்பு



*(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)*

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் கீழுள்ள பகுதிகளைக் கண்காணித்து டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி அ.உதயசூரியாவின் தலைமையில் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அபயவிக்கிரம, பொதுசுகாதார பரிசோதகர்கள் பொலிஸார், உள்ளிட்ட பலரும் ஒன்றிணைந்து இந் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

இக்குழு வீடு வீடாகச் சென்று டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை அடையாளம் கண்டு பொது மக்களின் உதவியுடன் அவற்றை அகற்றிவருவதுடன், தேங்கி நிற்கும் வெள்ள நீரையும் வெளியேற்றுவதற்குரிய ஆலோசனைகளையும் வழங்கிவருகின்றனர். இந்நிலையில் டெங்கு நுளம்பு பெருகும் சூழலை வைத்திருந்தவர்கள் எச்சரிக்கப்பட்டதுடன், ஒலி பெருக்கி மூலம் மக்கள் இதுதொடர்பில் அறிவுறுத்தப்பட்டனர்.

## இலங்கையின் கல்விமுறைமை மாற்றமடைய வேண்டும்

### முன்னாள் மாநகர சபை உறுப்பினர்

*(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)*



இலங்கையின் கல்விமுறையில் உடனடி மாற்றங்கள் இடம்பெற வேண்டும் என அக்கரைப்பற்று மாநகர சபை முன்னாள் உறுப்பினர் எஸ்.எம்.சபீஸ் தெரிவித்தார்.

உண்மை மற்றும் நல்லிணக்கத்துக்கான இடைக்கால செயலகத்துக்கும் அம்பாறை மாவட்ட பொது அமைப்புக்களின் பிரதானிகள், கல்விமான்களுக்குமிடையிலான சந்திப்பொன்று தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடைபெற்றது. இங்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

மக்களிடமிருந்தும் கருத்துக்களை பெற்று புதிய சட்டங்களை இயற்றுவதற்கு அரசாங்கம் முயற்சித்து வருவதையிட்டு சந்தோஷமடைகின்றோம். நமது நாட்டில் காணப்படும் கல்விமுறையில் உடனடி மாற்றங்கள் இடம்பெற வேண்டும். ஒரு மாணவன் தனது முதல் பட்டப்படிப்பை 21 வயதுக்குள் நிறைவு செய்து ஒரு தொழிலை உருவாக்கி 10 பேருக்கு தொழில் வழங்கும் அளவுக்கு கல்வித்திட்டங்கள் மாற்றம் பெறவேண்டும்.

பல்கலைக்கழகம் வரை கல்வி கற்றுவிட்டு மீண்டும் அரசாங்கத்தையே ஒரு தொழிலுக்காக காத்திருக்கும் கல்விமுறையை எதற்காக வைத்திருக்கின்றோம். இந்த நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் பட்டதாரிகளாக வரவேண்டும். ஆனால் நாம் குறிப்பிட்ட மாணவர்களையே கலாசாலைகளுக்கு தெரிவு செய்கின்றோம். இந்த முறை பிழையானதாகும்.

அரசாங்கம் தமது வசதிக்கேற்ப மாணவர்களை இணைத்துக்கொள்ளட்டும். ஆனால் தகுதி வாய்ந்த ஏனைய மாணவர்களும் பட்டப்படிப்பை மேற்கொள்ள தரமான தனியார் பல்கலைக்கழகங்களை அரசு உருவாக்கவேண்டும் என அவர் தெரிவித்தார்.

## அதாவுல்லாஹ் எம்.பி, பள்ளிவாசல்கள் சம்மேளன பிரதிநிதிகளுடன் சந்திப்பு

*(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)*



திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களின் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு தலைவருமான ஏ.எல்.எம் அதாவுல்லாஹுக்கும் காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று அண்மையில் காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளன மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் இங்கு ஆராயப்பட்டன

காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன தலைவர் உட்பட சம்மேளன, சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

## தலைவரானால் தடம் மாறுவேன் என்ற சந்தேகம் வேண்டாம்!

### சிறிதரன் எம்.பி

*(காரைதீவு குறூப் நிருபர்)*

தலைவரானால் தடம் மாறுவேன் என்ற சந்தேகம் வேண்டாம் என இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்திற்கு போட்டியிடும் கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அம்பாறை மாவட்ட ஊடக சந்திப்பில் தெரிவித்தார். கூடவே அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் முன்னாள் காரைதீவு தவிசாளர் கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

வரலாற்றில் முதல் தடவையாக மக்கள் தலைவனை மக்கள் தொண்டர்கள் தெரிகின்ற சந்தர்ப்பம் வந்திருக்கிறது.வேறெந்த கட்சியிலும் இல்லாத ஜனநாயக அணுகுமுறை இது. தேர்தல் என்றால் வெற்றி தோல்வி சகஜம். பரீட்சை போல. அதில் சில நெருடல்கள் இருக்கத் தான் செய்யும்.

எமது நோக்கம் எல்லாம் தமிழ் தேசியத்தை நோக்கியதாகவே இருக்கும். மக்களோடு இணைந்து பயணிக்க வேண்டியது எனது கடமை. அதனை நான் மக்களோடு மக்களாக இணைந்து முன்னெடுப்பேன்.

இன்று அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்து மூன்று தொகுதிகளையும் உள்ளடக்கிய பொதுச் சபை உறுப்பினர்களுடன் கலந்துரையாடினேன். ஆரோக்கியமான கருத்துக்களை மனம் விட்டு பேசினார்கள். நான் தலைவரானால் எதிர்காலத்தில் அம்பாறை மாவட்டத்தில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்ற துல்லியமான கருத்து ஏற்பட்டிருக்கின்றது.

நான் தலைவரானாலோ இல்லையோ எமது கட்சி இந்த பிரதேச செயலகம் தொடர்பில் தனித்துவமான செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுக்கும் .

எது எப்படியோ அரசாங்கம் இந்த செயலகத்தை மக்களிடம் கையளித்தேயாக வேண்டும். இதுவே எமது கட்சியின் நிலைப்பாடு. எமது கட்சியின் நோக்கமே இன விடுதலைக்கான இலக்காகும்.

அதனை உடைப்பதற்கு மாறி மாறி வரும் அரசாங்கங்கள் போதைவஸ்து பாவனை, நில ஆக்கிரமிப்பு, புத்தர் சிலை விவகாரம் போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர். அதற்கு எமது மக்கள் பலியாகக் கூடாது. நாங்கள் மக்களோடு இணைந்து பயணிக்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுப்போம். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

வெற்றியோ தோல்வியோ நாங்கள் கட்சிக்காக இணைந்து பயணிப்போம். கட்சியை சீர்குலைக்கும் எண்ணம் கடுகளவும் இல்லை. தேசிய இலக்கை நோக்கி புலம்பெயர் எமது உறவுகளுடன் இணைந்து எமது மக்களின் எதிர்காலத்தை நோக்கிய பயணத்திற்கு நாங்கள் முனைப்பாக செயற்படுவோம் என அவர் தெரிவித்தார்.

தொடரும் சீரற்ற காலநிலை

## கல்முனை அனர்த்த முகாமைத்துவக் குழுவின் விசேட ஒன்று கூடல்

*(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)*

கிழக்கில் கடந்த வாரம் முழுவதும் பெய்த கடும் மழை காரணமாக தாழ்நிலப்பிரதேசங்கள் பல நீரில் மூழ்கியுள்ளதுடன் மேலும் சில இடங்களில் வெள்ள அனர்த்தமும் ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்தும் கடும் மழை பெய்வதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாகவும் பொதுமக்களை அவதானத்துடன் செயற்படுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ திணைக்களம் ஆகியன அறிவித்துள்ளன.

இந்நிலையில் வெள்ள அனர்த்தத்திலிருந்து மக்களை பாதுகாக்கும் பொருட்டும், அனர்த்தத்தில் பாதிப்புக்குள்ளாகும் மக்களுக்கு சிறந்த சுகாதார சேவையை வழங்கும் பொருட்டும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் அனர்த்த முகாமைத்துவக் குழுவின் விசேட ஒன்றுக் கூடல் அண்மையில் நடைபெற்றது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகிலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்ற ஒன்றுகூடலில் பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

கல்முனை பிராந்தியத்திலுள்ள 13 சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களூடாக அனர்த்தம் தொடர்பாக மக்களை விழிப்பூட்டுதல், வைத்தியசாலைகள் உள்ளிட்ட பிராந்திய சுகாதார நிறுவனங்களிலுள்ள அனர்த்த முகாமைத்துவ குழுக்களை ஒழுங்குபடுத்தி தயார் நிலையில் வைத்துக் கொள்ளல், அனர்த்த நிலைமைகளின் போது அதற்கு முகம் கொடுப்பது தொடர்பாகவும் மக்களின் பாதுகாப்பு நலன்கருதியும் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து செயற்படல்,

வெள்ள நீரினால் ஏற்படக்கூடிய தொற்று நோய்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் முறையான வேலைத்திட்டங்களை மேற்கொள்ளல்,

அனர்த்தத்தினால் பாதிக்கப்படும் மக்களுக்கு மருத்துவ சேவைகளை வழங்கும் பொருட்டு மருத்துவ முகாம்களை நடாத்துதல்,



அனர்த்த பாதுகாப்பு தொடர்பான விடயங்களை முன்னெடுத்தல் என பல்வேறு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## முன்னாள் பிரதேச செயலாளர் எம்.ஏ.எம்.நியாஸ் காலமானார்

*(தோப்பூர் தினகரன் நிருபர்)*



மூதூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இலங்கை நிர்வாக சேவை முன்னாள் பிரதேச செயலாளர் எம்.ஏ.எம். நியாஸ் காலமானார். இவர் மூதூர் பிரதேச செயலகத்தில் 2005-2006 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதிகளில் மூதூர் பிரதேச செயலாளராகக் கடமையாற்றியுள்ளார். விஞ்ஞானமானி தொழில் நிர்வாகப்பட்டதாரியான இவர் முதலில் ஆசிரியராக அரச சேவையில் இணைந்துகொண்டார்.

அதனைதொடர்ந்து 1990 ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவை போட்டிப்பரீட்சைக்குத் தோற்றி அதில் சித்தியடைந்து 1991 இல் இலங்கை நிர்வாக சேவையில் இணைந்து கொண்டார். நிர்வாக சேவையின் அதிகாரியான இவர் நாட்டின் பல பிரதேசங்களில் பிரதேச செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார். நிர்வாக சேவையிலுள்ள பல உயர் பதவிகளையும் இவர் வகித்துவந்துள்ளார்.

## நாட்காட்டி, நாட்குறிப்பேடு வெளியீடு



*(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)*

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் 2024 ஆம் ஆண்டுக்கான நாட்காட்டி மற்றும் நாட்குறிப்பேடு வெளியீட்டு வைக்கப்பட்டது. அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் தலைவர் ஏ.மாபீர் தலைமையில் ஒலுவில் கிறீன் விளாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்நிகழ்வில் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் முன்னாள் தேசிய தலைவர் எம்.ஐ.உதுமாலெப்பை மற்றும் மாவட்ட பிரதம ஆலோசகர் ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர் எஸ்.எல்.ஆதம் பாவா ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டு 2024 ஆம் ஆண்டுக்கான நாட்காட்டி மற்றும் நாட்குறிப்பேட்டை வெளியீட்டு வைத்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் செயலாளர் எம்.எச்.ஏ.வஹாப், மாவட்ட தலைவி றிபா முஸ்தபா, மாவட்டப் பொருளாளர் ஐ.அஹமட் ஸிறாஜ், மாவட்ட முன்னாள் தலைவர் (ஐ.பீ.பீ) எம்.ஐ.எம்.றியாஸ் முன்னாள் தலைவர்களான எம்.எம். அஜ்வத், யூ.எம்.நியாஸி, பாலமுனை பாறூக், உட்பட முன்னாள் மாவட்ட தலைவர்கள் மற்றும் மாவட்ட ஆலோசகர்கள் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.




# 300 கிலோ லீக்ஸ் திருடிய மூவர் கைது

விவசாய தோட்டத்தில் பயிரிடப்பட்டிருந்த சுமார் 300 கிலோகிராம் லீக்ஸை திருடிச்சென்று விற்பனைச் செய்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

இச்சம்பவம் மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாமிமலை ஹோல்டன் தோட்டத்தில் கடந்த சனிக்கிழமை (06) இடம்பெற்றுள்ளது.

விவசாய தோட்டத்தின் உரிமையாளர் செய்த முறைப்பாட்டையடுத்து களவாடிய லீக்ஸை நோர்வூட் நகரில் விற்பனை செய்துள்ளமை தெரியவந்துள்ளது.



இதில் இருவரை மஸ்கெலியா பொலிஸார் கைது செய்துள்ளதாக மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இருவரும், ஹற்றன் நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் விநாயகமூர்த்தி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவர்களை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.



பொகவந்தலாவ ம /மா /ஹவ/ லொயினோன் தமிழ் வித்தியாலயத்துக்கு யாழ்ப்பாணம் காளி அறக்கட்டளை பணிப்பாளர் சி.இன்பரூபனினால் பாடசாலை உபகரணங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

# புதைக்கப்பட்ட சடலம் இனந்தெரியாத நபர்களால் தோண்டியெடுப்பு

பண்டாரவளை பகுதியில் புதைக்கப்பட்டிருந்த யுவதியொருவரின் சடலம் மீண்டும் தோண்டியெடுக்கப்பட்டு நிர்வாணமாக மீட்கப்பட்டுள்ளது.

பண்டாரவளை பதுலுகஸ்தான பகுதியைச் சேர்ந்த ரஷ்மிகா மதுஷானி என்ற 24 வயதுடைய யுவதி நிமோனியா காய்ச்சலால் கடந்த புதன்கிழமை உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து அனைத்து மத சடங்குகளுக்கும் பின்னர் சடலம் மறுநாள் (04) புதைக்கப்பட்டது. இந்நிலையில் உயிரிழந்த யுவதியின் சடலம் மயானத்தில் புதைக்கப்பட்டிருந்த போது அதை இனந்தெரியாத நபர்கள் தோண்டியெடுத்து ஆடைகளை கழற்றி விட்டு சடலத்தை நிர்வாணமாக விட்டு சென்றுள்ளனர்.

இந்நிலையில், அந்த யுவதியின் தந்தை கல்லறைக்குச் சென்றுள்ளார். அப்போது தனது மகளின் சடலம் தோண்டியெடுக்கப்பட்டு ஆடைகள் இன்றி நிர்வாணமாக எடுக்கப்பட்டிருப்பதைக் கண்டுள்ளார். இதுதொடர்பில் பண்டாரவளை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள்.

# கண்டி மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் இரத்த தான முகாம்





கண்டி மாவட்ட செயலகம், கண்டி மனித உரிமைகள் மற்றும் சமூக மேம்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் இரத்த தான முகாம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மத்திய மாகாண பிரதான செயலாளர் அஜித் பிரேமசிங்க கலந்து கொண்டார். உதவி மாவட்டச் செயலாளர் திருமதி நிலூகா புலத்கே மற்றும் கண்டி சமாதான அமைப்பின் பிரதிநிதி ரூபி உள்ளிட்ட அரச உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு இரத்த தானம் வழங்கி வைத்தனர்.

இதில் கலந்து கொண்ட ஒவ்வொருவருக்கும் மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டன.

# படியிலிருந்து தவறி வீழ்ந்து இளம் பெண் உயிரிழப்பு

(மஸ்கெலியா தினகரன் நிருபர்)

சிவனொளிபாதமலைக்கு யாத்திரை சென்ற பெண்ணொருவர் படியிலிருந்து தவறி விழுந்து உயிரிழந்துள்ளதாக நல்லதண்ணி பொலிஸார் தெரிவித்தனர்.

யாத்திரை சென்ற குழுவுடன் சென்ற பெண் நேற்றுமுன்தினம் இரவு 07.00 மணியளவில் நல்லதண்ணி நகரின் வாகன தரிப்பிடத்திற்கு கீழே ஓடும் சீதா ககுல ஓயாவில் படியில் இருந்து தவறி விழுந்து உயிரிழந்துள்ளதாக நல்லதண்ணி பொலிஸார் தெரிவித்தனர்.

பனாகொட, பன்னிமுல்ல, பரணவல பகுதியைச் சேர்ந்த பி.எல். மலானி என்ற 58 வயதுடைய பெண்ணே தலையில் பலத்த காயமடைந்த நிலையில் மஸ்கெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

ஆபத்தான நிலையில் இருந்த பெண் உடனடியாக நல்லதண்ணி சுகாதார சேவை நிலையத்தின் அம்பியூலன்ஸ் மூலம் மஸ்கெலியா பிரதேச வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக நல்லதண்ணி பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண்ணின் மரணம் தொடர்பான பிரேத பரிசோதனை டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் நடைபெற உள்ளதாக நல்லதண்ணி பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.


## இடிஐ ஃபினான்ஸ் லிமிட்டட்

**கம்பனியின் பதிவு இல - PB 488**

**2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவுகளுக்கு அமைவாக கம்பனி கலைப்பு அறிவித்தலும் கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தலும்**

| | |
|---|---|
| கம்பனியின் பெயர் | : இடிஐ ∴பினான்ஸ் லிமிட்டட். |
| பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி | : இல. 114, வார்ட் ப்ளேஸ், கொழும்பு - 07 |
| நீதிமன்றம் | : வர்த்தக உயர் நீதிமன்றம் மேல் மாகாணம் கொழும்பு (குடியியல்) |
| வழக்கு இல | : CHC 43/2023/CO |
| நீதிமன்ற கட்டளைத் திகதி | : 15.12.2023 |
| கோரிக்கை தாக்கல் செய்த திகதி | : 16.06.2023 |
| கம்பனி கலைப்பாளரின் பெயர் | : Gerard Jeevananthan David |
| முகவரி | : Liquidator<br>C/o SJMS Associates<br>(Presently Deloitte Associates)<br>03 Floor, No. 11 Castle Lane,<br>Colombo - 04 |
| நியமன திகதி | : 15.12.2023 |






தமிழ் வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் தைப்பொங்கல் தின நிகழ்வு கண்டி தேசிய வைத்தியசாலையின் புற்றுநோயாளர் சங்க அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு தமிழ் வர்த்தக சங்கத்தின் தலைவர் பி. குமாரதாஸ் தலைமை தாங்கியதுடன் தேசமானிய பெ. பழனியப்பன் உள்ளிட்ட பலர் முக்கிய பிரமுகர்களாக கலந்து கொண்டனர்.

(படங்கள் ; மாவத்தகம தினகரன் நிருபர்)

# கொழுந்து லொறி விபத்து; ஆறு வயது சிறுவன் பலி

பெலவத்தையிலிருந்து தினியாவல நோக்கி தேயிலை ஏற்றிச் சென்ற லொறியொன்று யட்டபாத 09 அஞ்சல் பிரதேசத்தில் வைத்து வீதியை விட்டு விலகி அருகிலுள்ள வீடொன்றில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியதில் ஆறு வயது சிறுவனொருவன் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யட்டபாத பிரதேசத்தைச் சேர்ந்த ஆதித்யக புன்சர என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.





கண்டி மகியாவ ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயத்தில் ஐயப்பன் பூஜையின் இறுதி நிகழ்வு அண்மையில் நடைபெற்றது . இப்பூஜையில் மகியாவ வாழ் பக்த பெருமக்களும் கலந்துகொண்டார்கள் .


## முடிவுறுத்தல் தொடர்பான அறிவித்தல்
## கொழும்பில் அமைந்துள்ள மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தில் அதன் சிவில் நியாயாதிக்கத்தை அமுல்படுத்தல்

வாத்துவ, பொஹாதரமுல்ல, வெரல பார என்ற முகவரியில் அதனது பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள ஈஎம் ஹோட்டல்ஸ் இன் முடிவுறுத்தல் தொடர்பான விடயமானது.

வழக்கு இலக்கம் : CHC 102/2023/CO
தன்மை : (கம்பனி முடிவுறுத்தல்)

Limitone Global LTD
CMC Chambers, Wickhams Cay 1, Road Town,
Tortola, British Virgin Islands.

மனுதாரர்

மேற்படி பெயரிடப்பட்ட நிறுவனம் கொழும்பில் அமைந்துள்ள மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தில் அதன் சிவில் நியாயாதிக்கத்தை அமுல்படுத்தல் மூலமாக கணக்குகளை முடித்து மூடிவிடுவதற்கான மனுவொன்றை 2023 டிசம்பர் 08 திகதியன்று மேலே பெயரிடப்பட்டுள்ள மனுதாரரினால் மேற்கூறப்பட்டுள்ள நீதிமன்றத்திற்கு மனுவொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த மனுவானது 2024 மார்ச் 25 ஆம் திகதியன்று விசாரணைக்கு எடுக்கப்பட கட்டளை இடப்பட்டதாகவும் அம்மனு தொடர்பான கட்டளையொன்று வழங்குவதற்கு சாதகமாக அல்லது எதிராக கூற்றுக்களை எடுத்துரைக்க எதிர்பார்க்கும் குறித்த நிறுவனத்தின் கடன் வழங்குநர் அல்லது உடனுதவுனர் இருப்பின் அது குறித்து பிரத்தியேகமாக அல்லது சட்டத்தரணி மூலமாக குறித்த விசாரணை நடத்தும் போது ஆஜராக முடியும் என்றும் குறித்த மனுவின் பிரதியொன்றை பெற்றுக் கொள்வதற்காக உரிய கட்டணங்களை பெற்றுக் கொண்ட பின்னர், அதன் பிரதி தேவைப்படும் குறித்த நிறுவனத்தின் கடன் வழங்குநர் அல்லது உடனுதவுனருக்கு கீழே கையொப்பமிடுபவரினால் வழங்கப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**கையொப்பமிட்டது : கே.ஏச்.பி. தனுஷிக்கா பிரியதர்ஷனி
மனுதாரருக்கான சட்டத்தரணி,
இல.: 166/1, ஹல்ஸ்டோர்ப் வீதி,
கொழும்பு-12.**

குறிப்பு : குறித்த மனுவை விசாரணை செய்யும் போது ஆஜராக எதிர்பார்க்கும் எவரேனும் இருப்பின், அவ்வாறு செய்வதற்கு தான் திட்டமிட்டு இருப்பதாக எழுத்துமூலமான அறிவித்தல் ஒன்று மேற்படி பெயரிடப்பட்ட சட்டத்தரணியிடம் கொண்டுவந்து கையளித்தல் வேண்டும் அல்லது தபாலில் அனுப்புதல் வேண்டும். குறித்த அறிவித்தலில் குறித்த நபரின் பெயர் மற்றும் முகவரி அல்லது வர்த்தக நிறுவனமென்றால் அந்நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி போன்றவற்றைக் குறித்து, குறித்த நபரால் அல்லது அவ்வர்த்தக நிறுவனத்தினால் அல்லது அவரின் அல்லது அவர்களது சட்டத்தரணிகள் இருப்பின் அவர்களினால் கையொப்பமிட்டு மேற்படி நபருக்கு 2024 மார்ச் 24 ஆம் நாளன்று மாலை (ஆறு) 6 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப் பெறுமாறு கொண்டுவந்து கையளிக்கப்படல் வேண்டும் அல்லது தபாலில் அனுப்பப்படுமானால் போதுமான கால அவகாசத்தில் அனுப்பப்படல் வேண்டும்.



**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**

## ரூ.120,000 மில்லியன் திறைசேரி முறிகளை வழங்கல்

09.00%2026'A' தொடர்களின் கீழ் ரூ. 45,000 மில்லியனையும் 10.75%2028'A' தொடர்களின் கீழ் ரூ. 45,000 மில்லியனையும் 11.00% - 2030'A' தொடர்களின் கீழ் ரூ. 30,000 மில்லியனையும் கொண்ட திறைசேரி முறிகள் 2024 ஜனவரி 11 ஆம் திகதி இடம்பெறும் ஏலங்களின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

**இத்திறைசேரி முறிகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.**

| தொடர்கள் | 09.00%2026'A' | 10.75%2028'A' | 11.00%2030'A' |
|---|---|---|---|
| ISIN* | LKB 01326B011 | LKB 01028C151 | LKB 01530E152 |
| முன்வைக்கப்பட்ட தொகை | ரூ. 45,000 மில்லியன் | ரூ. 45,000 மில்லியன் | ரூ. 30,000 மில்லியன் |
| நறுக்கு வீதம் | 9.00% ஆண்டொன்றிற்கு | 10.75% ஆண்டொன்றிற்கு | 11.00% ஆண்டொன்றிற்கு |
| வழங்கப்பட்ட திகதி | 2013 பெப்ரவரி 01 | 2018 மார்ச் 15 | 2015 மே 15 |
| **முதிர்வுத்திகதி** | **2026 பெப்ரவரி 01** | **2028 மார்ச் 15** | **2030 மே 15** |
| நறுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படும் திகதிகள் | 01 பெப்ரவரி & 01 ஆகஸ்ட் | 15 மார்ச் & 15 செப்டெம்பர் | 15 மே & 15 நவம்பர் |
| ஒன்று சேர்ந்த வட்டி வீதம் | ரூ. 100.00 இற்கு ரூ. 4.1087 | ரூ. 100.00 இற்கு ரூ. 3.6326 | ரூ.100 இற்கு ரூ. 1.8736 |
| ஏலவிற்பனைத் திகதி | 2024 ஜனவரி 11, வியாழக்கிழமை | | |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | 2024 ஜனவரி 11, வியாழக்கிழமை மு.ப. 11.00 மணி | | |
| **தீர்ப்பனவுத் திகதி** | **2024 ஜனவரி 16** | | |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக் குறைந்த தொகை | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அத்துடன் ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ. 1,000,000/-) பெருக்கங்களிலிருந்து | | |

முதனிலை வணிகர்களிடமிருந்து உண்மையான விலைகளின் (இறுதி நறுக்குக் கொடுப்பனவுத் திகதியிலிருந்து தீர்ப்பனவு செய்யும் நாள் வரையான ஒன்றுசேர்ந்த வட்டி நீங்கலாக) அடிப்படையில் விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. விலைக்குறிப்பீடுகள் சமர்ப்பிக்கின்ற இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீடு வசதியினூடாக மாத்திரமே மேற்கொள்ளப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவேரனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக்குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக்குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | | | |
|---|---|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 | என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| இலங்கை வங்கி | 2541938 | மக்கள் வங்கி | 2206783 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 | சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| கொமர்ஷல் பாங் ஒப் சிலோன் பிஎல்சி | 2332319 | செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 | வெல்த்ரஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

ஒவ்வொரு தொடர்கள்/ஐஎஸ்ஐஎன் தொடர்பிலும், சந்தை நிலைமகளுக்கமைய, இலங்கை மத்திய வங்கி, முன்வைக்கப்படுகின்ற தொகையினை விஞ்சாத ஏதேனும் தொகையினை ஏற்றுக்கொள்ளக்கூடும்.

முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

* பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கம்

**என். டி. வை. சி. வீரசிங்க
பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

**வழங்கும் அலுவலகம்,
பொதுப்படுகடன் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு-1.
தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687
வெப்தளம் : www.cbsl.gov.lk**

# பொருளாதாரத்தை சரியான திசையில் கொண்டு செல்ல பிரபலமல்லாத எந்த ஒரு முடிவையும் எடுக்கத் தயார்

## யாழ்ப்பாணத்தில் ஐ. தே. க செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி வலியுறுத்தல்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி செயற்பாட்டாளர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த 7 ஆம் திகதி யாழ்ப்பாணம் வலம்புரி ஹோட்டலில் இடம்பெற்றது.

நாட்டின் பொருளாதாரத்தை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கு பிரபலமல்லாத எந்தவொரு தீர்மானத்தையும் எடுப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது வலியுறுத்தினார்.

இலங்கையின் தமிழ் நாகரீகம் வட மாகாணம் என்றும், யாழ்ப்பாணம் இந்து மதத்தின் மையப்பகுதி என்றும் கூறிய ஜனாதிபதி, வடமாகாணத்தின் முக்கியத்துவத்தை அப்படியே பேணிக்காத்து, வடக்கின் பொருளாதாரத்தை நாட்டின் தேசிய பொருளாதாரத்துடன் துரிதமாக இணைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

வடக்கின் விரைவான பொருளாதார அபிவிருத்தியுடன் எதிர்காலத்தில் புதிய தொழில் வாய்ப்புகளும் பல புதிய முதலீட்டு வாய்ப்புகளும் உருவாகும் எனவும் வடக்கை அபிவிருத்தி செய்து முழு நாட்டையும் அபிவிருத்தி செய்வதற்கு வடக்கிலுள்ள அனைத்து மக்கள் பிரதிநிதிகளின் ஆதரவை எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான விஜயகலா மகேஸ்வரனின் ஏற்பாட்டில் இந்த சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் சுமார் 600 கட்சி செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டதோடு அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நேரடியாக ஜனாதிபதியிடம் முன்வைத்தனர்.

வடமாகாண இளைஞர் கே. ரவியால் வரையப்பட்ட ஜனாதிபதியின் உருவப்படம் கொண்ட ஓவியமும் இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது:

“இந்த சந்திப்பை ஏற்பாடு செய்தது தொடர்பில் விஜயகலா மகேஸ்வரனுக்கு நன்றி தெரிவிக்கிறேன். வட மாகாண பிரச்சினைகளில் காணிப் பிரச்சினை மற்றும் காணாமற்போனோர் பிரச்சினை என்பன முதன்மைப் படுத்தப்பட்டிருந்தன. அரசாங்கம் என்ற வகையில், அந்தப் பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வுகளை வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளோம்.

2025ஆம் ஆண்டு இறுதிக்குள் வடக்கின் காணி பிரச்சினை மற்றும் காணாமல் போனோர் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கிறோம். அத்துடன் இடம்பெயர்ந்தவர்களுக்கு வீடுகளை வழங்கும் வேலைத்திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. வடமாகாணத்தில் காற்றாலை மற்றும் சூரிய சக்தி என்பவற்றை பயன்படுத்தி ஏற்றுமதிக்கான வலுசக்தி உற்பத்தியை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. பசுமை ஹைட்ரஜன், பசுமை அமோனியா உற்பத்தியிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் வளமான விவசாய நிலங்களில் நவீன தொழில்நுட்பத்தை சேர்த்து ஏற்றுமதி விவசாயத்தை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. அடுத்த தசாப்தத்தில் உலக மக்கள் தொகை இரட்டிப்பாகும் நிலையில், அவர்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி விவசாயத்தை அதிகரிப்பதிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் யாழ். மாவட்டத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கான விசேட வேலைத்திட்டம் ஒன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. யாழ்ப்பாணத்தில் நடைபெறும் நல்லூர் திருவிழாவை உலக இந்து பக்தர்களுக்கு காணும் வாய்ப்பை வழங்கும் வகையில் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன. சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் ஒகஸ்ட் மாதம் எசல பெரஹெர மற்றும் கதிர்காமம் பெரஹெர மற்றும் யாழ் நல்லூர் திருவிழா ஆகியவற்றை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளன.



வடக்கில் சுகாதாரம் மற்றும் கல்வி அபிவிருத்தியில் புதிய முதலீட்டு வாய்ப்புகளுக்கான வாய்ப்புகளை புலம்பெயர் தமிழர்களுக்கு வழங்குவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறான புதிய பொருளாதார மறுசீரமைப்புகளினால் வட மாகாணத்தில் புதிய தொழில் வாய்ப்புகள் மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் உருவாகும். இதனால் வடபகுதி இளைஞர்களுக்கு புதிய தொழில் வாய்ப்புகள் உருவாகி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடியும்.

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் முடிவுகள் பிரபலமானவையாக இல்லாதிருக்கலாம். ஆனால், நாட்டின் பொருளாதாரத்தை சரியான பாதையில் கொண்டு செல்வதற்காக எந்தவொரு பிரபலமற்ற முடிவையும் எடுப்பேன். நாம் அனைவரும் வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்து நாட்டை அபிவிருத்தி செய்வோம்”. இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார். இந்நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதியின் சமூக அலுவல்கள் தொடர்பான பணிப்பாளர் நாயகம் ரஜித கீர்த்தி தென்னகோன், சுன்னாகம் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் சுரேஷ்குமார் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.





நாட்டு, மக்கள், எதிர்கால பரம்பரையை

# குற்றவாளிகளிடமிருந்து விடுவிக்க எத்தகைய கடும் தீர்மானத்தையும் எடுக்கத் தயார்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ்

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டையும் நாட்டு மக்களையும் எதிர்கால பரம்பரையையும் குற்றவாளிகளிடமிருந்து விடுவிப்பதற்கான எந்தவொரு கடுமையான தீர்மானத்தையும் மேற்கொள்வதில் பின்நிற்கப் போவதில்லையென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தானியங்கி முகங்களை இனங்காணும் நவீன கமரா தொகுதியை உத்தியோக பூர்வமாக ஸ்தாபித்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றும்போது அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் முதல்தடவையாக இவ்வாறான அதிநவீன தொழில்நுட்ப தானியங்கி கமரா கட்டமைப்பு தொகுதி கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,

நாட்டிலிருந்து குற்றச்செயல்களை முற்றாக இல்லாதொழிக்கும் வகையில் தற்போது விசேட செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்காக பொலிஸ் துறையின் சகல அதிகாரிகளும் இரவு பகல் பாராமல் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றனர். அதன்மூலம் இதுவரை சிறந்த பிரதிபலன்களை பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது.



அவர்களை ஊக்குவிக்கும் வகையில் தொழில்நுட்பத்தை அதிகரித்து தேவையான வசதிகளைப் பெற்றுக்கொடுப்பது எமது பொறுப்பாகும். ஒரு குற்றச்செயல் இடம்பெற்று 24 48 மணித்தியாலங்களுக்குள் அந்த குற்றவாளியை இனங்காணுவதற்கு பொலிஸாரினால் முடியுமானால் அவ்வாறன குற்றவாளி விமான நிலையத்தினூடாகவோ அல்லது கடல் மார்க்கமாகவோ நாட்டிலிருந்து தப்பிச் சென்றுவிடுவார்.

விமான நிலையத்தின் மூலம் அவ்வாறு தப்பிச் செல்வதை தடுக்கும் வகையில் சில மாதங்களுக்கு முன்பு மேற்படி முகங்களை இனங்காணும் தொகுதிக்கான ஆரம்ப கட்ட நடவடிக்கையே மேற்கொள்ளப்பட்டுவந்த நிலையில் குற்றத்தடுப்பு ஆய்வு திணைக்கள தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் தற்போது அதனை முழுமையாக ஸ்தாபிக்க முடிந்துள்ளது. எந்தவொரு குற்றவாளியும் நாட்டுக்குள் மறைந்திருப்பதற்கு இடமளிக்காத வகையில் நாம் அனைத்து நடவடிக்கைகளையும 'மேறகொண்டுள்ளோம். எவர் எத்தகைய தடைகளை மேற்கொண்டாலும் அதனை எவராலும் நிறுத்தமுடியாது. நாட்டின் அனைத்து நிறுவனங்கள் மற்றும் மக்கள் அதற்காக ஒன்றிணைவர்.

அந்தவகையில் பாதாள உலகக் குழு போதைப் பொருள் வர்த்தகர்கள் குற்றச்செயல்களில் ஈடுபடுவோர் ஆகியோரை ஒழிப்பது கஸ்டமான நடவடிக்கையாக இருக்காது என அவர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில்

# சீரற்ற காலநிலையால் டெங்கு நோய் பரவும் அபாயம்

இறக்காமம் தினகரன் நிருபர்

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு நோய் வேகமாக பரவும் அபாயம் காணப்படுவதால் இதனை பரவாமல் தடுப்பதற்காக அனைத்து நிறுவனங்களின் முனைப்பான பங்களிப்புடன் டெங்கு ஒழிப்பு வாரம் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. அம்பாறை மாவட்டத்திலுள்ள இறக்காமம் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் இவ்வேலை திட்டம் மிக சுமுகமாக இடம் பெற்றது.

இறக்காமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜே எம் எம் சேனாரத்ன தலைமையில் பொது சுகாதார பரிசோதரர்கள், டெங்கு கட்டுப்பாட்டு ஊழியர்கள், சிவில் பாதுகாப்பு படையினர், கிராம சேவை உத்தியோகத்தர்கள் பள்ளிவாசல் நிர்வாகிகள் உள்ளிட்ட இக்குழுவினர் ஆரம்பகட்ட நடவடிக்கையாக இறக்காமம் வரிப்பத்தான்சேனை முதலாம் பிரிவிலிருந்து தங்களது பரிசோதனைகளை வெற்றிகரமாக ஆரம்பித்து வைத்தனர். இதற்கு அமைவாக அரச நிறுவனங்கள் வெற்று காணிகள் மக்கள் நடமாடும் பொது இடங்கள் மதஸ்தலங்களில் மக்கள் குடியிருப்புகள் போன்ற பல்வேறு இடங்கள் டெங்கு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு ஒரு சிலருக்கு சிவப்பு அறிக்கை வழங்கப்பட்டுள்ளதுடன் வேறு சிலருக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது

# ஒரு பாடசாலை நூறு கோவில்களுக்கு சமன் என்பதை நிரூபித்தவர் அமரர் மாணிக்கவாசகம்

## மனோ கணேசன் எம்பி

அரசாங்க பாடசாலைகளில் படிக்கும் பாமர பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவிடுவதை போன்ற பெரும் புண்ணியம் ஏதுமில்லை. அதுவே இறைவனுக்கு ஆற்றும் பணி. அதுதான் “ஒரு பாடசாலை நூறு ஆலயங்களுக்கு சமன்” என்ற கொள்கையாகும். இந்த கொள்கையை, தனது சுமார் ஒரு ஏக்கர் விஸ்தீரண காணியை, வத்தளை வாழ் தமிழ் பிள்ளைகளின் பாடசாலை கனவுக்காக வழங்கி, தன் வாழ்வில் செய்து காட்டி நிரூபித்த மாமனிதர் அமரர் மாணிக்கவாசகம் என தமிழ் முற்போக்குகூட்டணிதலைவரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.



வத்தளை அருண் மாணிக்கவாசகம் இந்து வித்தியாலயத்தில் நடைபெற்ற கல்லூரி ஸ்தாபகர் அமரர் மாணிக்கவாசகம் சிலை திறப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்துக்கொண்டு உரையாற்றியபோதே மனோ கணேசன் எம்.பி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியதாவது, ஒவ்வொரு தேர்தலிலும் “உங்களுக்கு தமிழ் பாடசாலை கட்டி தருவேன்”, என்று சொல்லி வாக்குகளை வாங்கி இவர்கள் சுருட்டுவதும், அப்பாவி தமிழர்கள் ஏமாறுவதும், தொடர்ந்து நிகழ்ந்து வந்தது.

இதற்கிடையில் இங்கே வந்தவேளையில் இன்னொரு காணியில் சில எடுபிடி தமிழர்கள் இதே மோசடி அரசியல்வாதிகளை அழைத்து சென்று பலமுறை அடிக்கல்கள் நாட்டி ஏமாற்றியதும் நடந்து வந்தது.

தமிழ் பாடசாலை அமைக்க காணியை அமரர் மாணிக்கவாசகம் மனமுவந்து வழங்குவதை “சரி, சரி தாருங்கள்” என வாங்கிக்கொண்டு, கடைசியில் பெரும்பான்மை இன பாடசாலைக்கு அந்த காணியை, பெரும்பான்மை இன அரசியல்வாதிகள் திருப்பி விடுவார்கள்.

கண்டியில் இப்படித்தான் ஒரு தமிழ் தனவந்தர் ஒரு காலத்தில் தமிழ் பாடசாலைக்கு வழங்கிய காணியில் இன்று சிங்கள பாடசாலை இருக்கிறது. காணியை வழங்கிய அந்த தமிழ் தனவந்தரின் பெயர்கூட, பாடசாலை காணியின் சரித்திரம் கூட இப்பொழுது அங்கே எவருக்கும் தெரியாது.

ஆகவே, நாம் எச்சரிகையுடன் செயற்பட வேண்டும் என தீர்மானித்தேன். சிங்கள பிள்ளைகளுக்கும் பாடசாலை தேவைதான். ஆனால், இங்கே சிங்கள பாடசாலைகள் அநேகம் உள்ளன.

எமது பிரச்சினையே, வத்தளையில் முழுமையான தமிழ் பாடசாலை இல்லவே இல்லை என்பதுதானே என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும் என்பதையும் நாம் தீர்மானித்தோம்.

அதன்பிறகு நான் ஒரு அமைச்சரவை அமைச்சராக, இது தொடர்பில் ஒரு அமைச்சரவை பத்திரம் சமர்ப்பித்து, இந்த காணி வழங்கலை ஒரு அமைச்சரவை நடவடிக்கையாக மாற்றினேன்.

பாடசாலையின் பெயர், மறைந்த தனது மகனின் பெயரில் அமைய வேண்டுமென, பாசமுள்ள தந்தை அமரர் மாணிக்கவாசகம் விரும்பினார். அந்த பெயருடன் “இந்து” என்ற பெயரையும் சேர்க்க வேண்டும் என நான் விரும்பி, அவரின் அனுமதியை பெற்று, இந்த பாடசாலையில் பெயரை “அருண் மாணிக்கவாசகம் இந்து வித்தியாலயம்” என முடிவு செய்தோம்.

அத்துடன் நான் நிறுத்தவில்லை. “பாடசாலையின் ஸ்தாபகர் தினம், பாடசாலையின் ஸ்தாபகர்களாக அருண் பிரசாந் மாணிக்கவாசகம் அறக்கட்டளை” என்ற விடயங்கள் எனது அமைச்சரவை பத்திரத்தில் இடம் பெற்றன. அது மட்டும் அல்லாமல், இந்த பாடசாலை, தமிழ் இந்து பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உருவாக்கப் படுகிறது.

இந்த நோக்கம் ஒருபோதும் மாற்றப்படக்கூடாது. அப்படி அது மாறுமானால், இந்த காணி, மாணிக்கவாசகம் குடும்பத்துக்கு மீள கையளிக்கப்பட வேண்டும் என்ற பிரதான நிபந்தனையையும் நான் எனது அமைச்சரவை பத்திரத்தில் இடம்பெற செய்தேன் என்றார்.

# கேள்வி அறிவித்தல்

## நியாகம பிரதேச சபை

நியாகம பிரதேச சபைக்குச் சொந்தமான கீழ்க்காணும் சொத்துக்களை குத்தகைக்கு விடுவதற்காக கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| குத்தகை சொத்தின் பெயர் | | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் ரூ. | மீளளிக்கப்படும் கேள்வி பிணை வைப்பு ரூ. | குறைந்தபட்ச கேள்வி (சேர்க்கப்பட்ட தொகை) ரூ. | மாதாந்த குத்தகை தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 01. | பிட்டிகல பஸ் நிலையத்தின் பின்னால் வர்த்தக கட்டிடத்தொகுதியில் அமைந்துள்ள கேட்போர் கூடம் (10 வருட காலத்திற்கு நீண்ட கால குத்தகைக்கு விடல்) | 3000.00 | 30000.00 | 562500.00 | 22500.00 |
| 02. | பிட்டிகல பலநோக்கு வளாகத்தில் கடை அறை இல. 19 | 3000.00 | 30000.00 | 900000.00 | 9000.00 |
| 03. | பிட்டிகல பெலவத்த வீதி பொருளாதார நிலையத்தில் கடை அறை இலக்கம் 04 | 3000.00 | 30000.00 | 400000.00 | 4000.00 |
| 04. | பிட்டிகல பெலவத்த வீதி பொருளாதார நிலையத்தில் கடை அறை இல. 05 | 3000.00 | 30000.00 | 525000.00 | 5250.00 |

மேற்படி ஒவ்வொரு சொத்துக்களுக்கும் வேறு வேறாக கேள்வி விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டியதுடன் அவை பதிவுத் தபாலில், “செயலாளர், நியாகம பிரதேச சபை, தல்கஸ்வல” என்ற முகவரிக்கு அனுப்பப்படலாம். அல்லது நியாகம பிரதேச சபை தலைமையகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்து சொத்துக்களின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் மற்றும் விபரங்களை விநியோகித்தல்
2024.01.09ம் திகதி மு.ப. 8.30 முதல்
2024.01.23ம் திகதி பி.ப. 3.00 வரை
(வாரத்தின் வேலை நாட்களில்)

கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல்
2024.01.24ம் திகதி மு.ப. 10.00 வரை

கேள்விப் பத்திரங்கள் திறத்தல்
2024.01.24ம் திகதி மு.ப. 10.30 இற்கு

நியாகம பிரதேச சபை தலைமையகத்தில் நடைபெறும்.

தொ.பே.இல:
091 - 2296518
091 - 7294610
091 - 7294611

**டபிள்யூ.டி.ஏ. தர்ஷனி**
**செயலாளர்**
**நியாகம பிரதேச சபை**

## காணி சுவீகரித்தல் சட்டத்தின் 7வது பிரிவின் கீழ் அறிவித்தல்

பொதுமக்கள் பணியொன்றின் நிமித்தம் கீழே விவரிக்கப்பட்டுள்ள காணிகள் சம்பந்தமாக நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள 9 ஆவது பிரிவின் கீழான சரிபார்ப்பு நடவடிக்கை சம்பந்தமாக 7 ஆவது பிரிவின் கீழ் விளம்பரம் ஒன்று இலக்கம்: 2360/81 மற்றும் 2023/12/02 ஆம் திகதிய இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

மாகாணம் : சப்ரகமுவ
மாவட்டம் : இரத்தினபுரி
பிரதேச செயலகம் : பெல்மடுள்ள
கிராம உத்தியோகத்தர் பிரிவு : உடதுல
கிராமம் : குட்டாபிடிய வத்த, கிறிதிஎல்ல பாகம்
ஆரம்ப திட்டப்பட இலக்கம் : இ.கி.வ.ர. 323
உரிய துண்டிலக்கம் : து. இ. 01

மேலதிக விபரங்களுக்கு மேற்கண்ட வர்த்தமானிப் பத்திரிகையை பார்க்கவும்.

**பிரதேச செயலாளர்/ சுவீகரித்தல் அதிகாரி,**
**பெல்மடுள்ள.**

**2024-01-03 ஆம் திகதி,**
**பெல்மடுள்ள பிரதேச செயலகத்தில்**

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிறு 2024.01.07
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5352
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 30,037,996.00
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 1 4 4 3 0 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3594
சீட்டிழுப்பு திகதி 2024.01.07
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,931,311.04
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 32 34 36 61
விசேட எழுத்து C
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 74337

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1700
2024.01.07
34985
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 419,954,480.00
ஆங்கில எழுத்து K
சுப்பர் இலக்கம் 03
வெற்றி இலக்கங்கள் 03 31 57 58
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

Lucky 7 VIP
திகதி 2024.01.07
சீட்டிழுப்பு இலக்கம் 0178
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கங்கள் 5 8 8 7 7 0
L7 எழுத்து Q
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 22,789,197.64

ராசி சுப பலன்
திகதி 2024.01.07
சீட்டிழுப்பு இலக்கம் 661
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,598,539.28
வெற்றி இலக்கினம் சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 03 04 44 49
தனயோக இலக்கம் 38767
நாளுக்கான விதி எண் 23

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1382
2024.01.07
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 128,934,656.24
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 13 41 58 62
விசேட எழுத்து A
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 07500

## இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் (CFHC)

### மீன்பிடித் துறைமுகங்களுடன் தொடர்புடைய வணிகங்களில் தனியார் துறை பங்கேற்புக்கான ஆர்வம் தொடரபான (EOI) அழைப்புக்கான அறிவிப்பு

***CFHC/SD/EOI/2024***

இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனம் அனுபவம் வாய்ந்த நிறுவனங்கள், கூட்டு முயற்சிகள், சங்கங்கள் ஆகியவற்றிலிருந்து தனியார் துறையின் திட்ட முன்மொழிவில் (உள்நாட்டு / வெளிநாட்டு) கீழ்க்கண்டவாறு மீன்பிடித் துறைமுகம் தொடர்பான நடவடிக்கைகளில் பங்கேற்க ஆர்வத்தை வெளிப்படுத்துகிறது.

| தொடர் இலக்கம் | பங்கேற்பதற்கான முன்மொழியப்பட்ட பகுதிகள் | |
|---|---|---|
| 01 | மீன் பதப்படுத்துதல் / குளிர் சேமிப்பு உள்கட்டமைப்பு | a. மீன் செயலாக்க விரிகுடாக்கள்<br>b. ஐஸ் ஆலைகள்<br>c. குளிர் சேமிப்பு, பிளாஸ்ட் /ப்ரீசர் வசதிகள்<br>d. மீன்பிடி கியர் கடைகள் |
| 02 | கடல்சார் சுற்றுலா நடவடிக்கைகள் | a. படகு தளம்<br>b. திமிங்கல பார்வையிடல்<br>c. கடல்சார் சுற்றுலா நடவடிக்கைகள்<br>d. துறைமுக உணவகங்கள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்கள்<br>e. உல்லாசப் பயணத்திற்கான பயணிகள் படகுகள் |
| 03 | புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூல முதலீடுகள் மீதான முதலீடு | a. சூரிய சக்தி மற்றும் பிற புதுப்பிக்கத்தக்க ஆற்றல் முதலீடுகள்<br>b. மின்சார வாகன சார்ஜிங் நிலையங்கள் |
| 04 | ஏனைய முதலீடுகள் | a. உற்பத்தி மற்றும் பழுதுபார்க்கும் வசதிகள் மீன்பிடி / மீன்பிடி அல்லாத கப்பல்கள்<br>b. வணிக துறைமுகங்கள் மற்றும் கடல் சார்ந்த செயல்பாடுகள்<br>c. ஏனைய கடல், கடலோர மற்றும் துறைமுகம் தொடர்பான முதலீடுகள்<br>d. குப்பைகளை அகற்றுதல் / மறுசுழற்சி திட்டங்கள்<br>e. தலைகீழ் சவ்வூடுபரவல் நீர் அமைப்பு<br>f. அணுகல் கட்டுப்பாடு / வாகன தரிப்பிட முகாமைத்துவம் |

திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக்க பரிந்துரைக்கப்பட்ட மீன்பிடி துறைமுகங்கள் டிகோவிட்ட, பாணந்துரை, பேருவல, அம்பலன்கொட, ஹிக்கடுவ, தொடன்துவ, காலி, மிரிஸ்ஸ, புரானவெல்ல, கந்தர, சுதுவெல்ல, நில்வெல்ல, குடாவெல்ல, தங்காலை, கலமெடிய, ஹம்பாந்தோட்டை, கிரிந்த, வாழைச்சேனை, கொட்பே, பேதுருதுடுவ, மைலிட்டி, கல்பிட்டி, வெல்லமன்கர, சிலாபம் மற்றும் நீர்கொழும்பு.

துறைமுக இருப்பிடம் மற்றும் இதர விவரங்களுக்கு **www.cfhc.gov.lk** இல் CFHC இணையதளத்தைப் பார்வையிடலாம்.

ஆர்வமுள்ள தரப்பினர் **29.01.2024 க்கு முன்னர், தலைவர், இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனம்,** இல. 15, ரொக் ஹவுஸ் லேன், கொழும்பு 15 என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவும், **"suppliescfhc@gmail.com"** என்ற மின்னஞ்சல் ஊடாகவும் தொடர்பு கொள்ள திட்ட முன்மொழிவைச் சமர்ப்பிக்க வேண்டும்.

திட்ட முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்ட உறையின் மேல் இடது மூலையில் **“பங்கேற்புக்கான ஆர்வம் தொடரபான (EOI) மற்றும் தொடர்புடைய துறைமுகம்”** தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

சமர்ப்பிக்கப்பட்ட திட்ட முன்மொழிவுகளை ஏற்க அல்லது நிராகரிக்க கொள்முதல் குழுவிற்கு உரிமை உள்ளது. கூடுதல் **விவரங்களை 011- 2525063** என்ற எண்ணில் கொள்முதல் முகாமையாளரிடமிருந்து பெறலாம்.

**தலைவர்,**
**இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்,**
**இல. 15, ரொக் ஹவுஸ் லேன், கொழும்பு 15.**

SELACINE

## பண்டாரவளை மாநகர சபை வசமுள்ள வாகனங்களை நிறுத்துவதற்கான கட்டணம் அறவிடும் சேவையை 2024.02.01 ஆம் திகதி தொடக்கம் 2024.12.31 ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கு பெறுகை அறிவித்தல்

பண்டாரவளை மாநகர சபைக்கு சொந்தமான கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்களை அதில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்காக குத்தகைக்கு விடுவதற்கு குத்தகைதாரர்களை தேர்வு செய்வதற்காக 2024.01.29 ஆம் திகதி மு.ப. 10.00 வரை முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள், 18 வயதுக்கு மேற்பட்ட இலங்கை பிரஜைகளிடம் மற்றும் தகுதியுடைய நிறுவனங்களிடம் இருந்து இங்கு அழைக்கப்படுகிறது.

02. பெறுகைப் படிவங்களை 2024.01.08ஆம் திகதி தொடக்கம் 2024.01.28ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 3.00 வரை பண்டாரவளை மாநகர சபையின் அட்டவணை இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனு படிவக் கட்டணத்தை செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். கேள்வி விண்ணப்பப் படிவம் மற்றும் நிபந்தனைகள் இரு பிரதிகளில் வழங்கப்படுவதோடு, அந்த விண்ணப்பங்களின் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியை பூர்த்தி செய்து உறுதி செய்த பின் வெவ்வேறு உறைகளில் இட்டு, அதன்படி மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என குறிப்பிட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் குறித்த சேவை விபரத்தையும் குறிப்பிட்டு அந்த இரு பிரதிகளையும் ஒரு கடித உறையில் இட்டு அந்த உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் மேலுள்ள கேள்விமனுவின் விபரத்தை அவசியம் குறிப்பிட்டு முத்திரை இட்டு 2024.01.29 ஆம் திகதி மு.ப. 10.00க்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு பெறுகைக் குழு தலைவர், மாநகர சபை, தோட்ட வீதி, பண்டாரவளை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது மாநகர சபையின் மாநகர ஆணையாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இட வேண்டும். மேலும் தபாலில் இடம்பெறும் காணாமல்போதல் மற்றும் தாமதம் தொடர்பில் மாநகர சபை பொறுப்பேற்காது என்பதோடு, தாமதித்து கிடைக்கின்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

03. 2024.01.29 ஆம் திகதி மு.ப. 10.00 கடந்த உடன் பண்டாரவளை மாநகர சபை அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படுவதோடு அந்த சந்தர்ப்பத்திற்கு விலைமனுதாரருக்கு அல்லது அவரது பிரதிநிதி ஒருவருக்கு மாத்திரம் அதனை பரீட்சிக்க முடியும். மேலும் இது தொடர்பில், மேலதிக விபரங்களை பண்டாரவளை மாநகர சபை அலுவலகத்திற்கு வந்து அல்லது 057-2222275 என்ற இலக்கம் கொண்ட தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**நிபந்தனைகள்:**

1. பெறுகை படிவத்தை பெறும்போது விண்ணப்பதாரரின் தேசிய அடையாள அட்டை அல்லது ஓட்டுநர் அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
2. குறித்த சேவையை குத்தகைக்கு விடுவதற்கு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச விலைமனுவுக்கு நிகரான அதிக விலைமனு தொடக்கம் கருத்திற் கொள்ளப்படுவதோடு, அதற்காக அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் மீளளிக்கப்படாத வைப்பு ஒன்றை நீங்கள் பணத்தில் 2024.01.28 ஆம் திகதி பி.ப. 03.00 க்கு முன்னர் செலுத்தி இருத்தல் வேண்டும் என்பதோடு, அந்த பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றை, கிராம சேவகர் சான்றிதழின் பிரதி ஒன்று, விண்ணப்பப் படிவத்தின் பிரதி ஒன்றை மூலப்பிரதியுடன் இணைத்திருத்தல் வேண்டும் என்பதோடு, அந்த வைப்பை செலுத்த வேண்டிய இறுதித் திகதி விடுமுறை தினமாகும் சந்தர்ப்பம் ஒன்றில் அரச வேலை நாளின் பி.ப. 03.00க்கு முன்னர் செலுத்தி இருத்தல் வேண்டும்.
3. பண்டாரவளை நகர எல்லைக்குள் வாகனங்கள் நிறுத்தும் இடங்களில் கட்டணம் அறவிடல் மற்றும் பிரதான வீதி (பதுளை வீதி வரை) தர்ம விஜய மாவத்தை (முச்சக்கர வண்டி நிறுத்தும் இடம் தொடக்கம்) பதுளை வீதி (போட் சிட்டி வரை) பதுளை வீதி (சரசவி கல்வி நிறுவனத்தில் இருந்து) ஹப்புத்தளை வீதி (வைன் ஸ்டோர் வரை) தர்மபால மாவத்தை (ஓரியன்ட் ஹொட்டல் வரை), வர்த்தக நிலையத்தைச் சூழ (பொல பிட்டிய நுழைவு வீதி தொடக்கம்) பிங்கெய வரையும், வர்த்தக நிலைய கட்டடத்தின் (முதல் மாடி வாகனத் தரிப்பிடம் மற்றும் தோட்ட வீதியின் மாநகர சபை பிரதான வாயில் அருகில் இருந்து சைனிஸ் ஹோட்டல் வரையும்) பெயரிடப்பட்டிருக்கும் வாகன தரிப்பிடங்களின் மாநகர சபையினால் நிர்ணயிக்கப்பட்ட கீழுள்ள அட்டவணை இலக்கம் 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் அறவிடப்படுதல் வேண்டும்.
4. இரவு 8.00க்குப் பின்னர் எந்த ஒரு வாகனத்தில் இருந்தும் கட்டணம் அறவிடக்கூடாது என்பதோடு, வர்த்தக நிலையத்தில் நிறுத்தப்படும் வர்த்தகர்களுக்கு சொந்தமான வாகனங்களுக்கு மற்றும் விகாரைக்கு அருகில் வர்த்தக சங்கத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் நிலத்தில் இதற்கு முன் செலுத்தப்பட்ட வகையில் குறித்த கட்டணத்தை கேள்விமனுதாரருக்கு செலுத்துதல் வேண்டும்.
5. சமர்ப்பிக்கப்படும் விலைமனுத் தொகை குறித்த மாதத்திற்கு குறித்த பிணைத் தொகையுடன் செலுத்த வேண்டிய தொகையை ஒவ்வொரு மாதத்தின் முடிவுக்கு முன் செலுத்த வேண்டும் என்பதோடு, என்றாலும் விடுமுறை நாட்களை கருத்திற்கொண்டு அந்த மாதத்தின் பணத்தை செலுத்துவதற்கு அடுத்த மாதம் 05ஆவது வேலை நாள் வரை வாய்ப்பு வழங்கப்படுவதோடு, அந்த தினத்திற்குப் பின் நிலுவைத் தொகையின் அளவை கருத்தில் கொள்ளாது நாளொன்றுக்கு ரூபா 1000.00 மேலதிக தண்டப் பணம் ஒன்றை செலுத்துதல் வேண்டும்.
7. விலைமனுக்களை சமர்ப்பித்த பின் மேலுள்ள வைப்புக்கு மேலதிகமாக சமர்ப்பிக்கும் விலைமனு தொகையில் 10% வங்கிப் பிணை ஒன்றை கோரும்போது மாநகர சபைக்கு விடுவிக்க முடியுமான வகையில் ஒப்பந்தம் கைச்சாத்திடும் முன் சமர்ப்பித்தல் வேண்டும். அது பணமாகவும் மாநகர சபையில் வைப்புச் செய்ய முடியும்.
8. குறித்த கட்டணத்தை அறவிடுவதற்கு மின்னணு ஊடகத்தையும் பயன்படுத்த முடியும். அவ்வாறு பயன்படுத்துவதாயின் கேள்விமனுதாரர் மூலமாகவே குறித்த நிறுவனத்தை தேர்வு செய்தல் வேண்டும் என்பதோடு, இதற்காக மாநகர சபையினால் எந்த ஒரு உபகரணமும் அல்லது சேவையும் வழங்கப்படாது என்பதோடு, குறித்த கட்டணத்தை அறவிடுவதற்காக சாதாரண பற்றுச்சீட்டு ஒன்றை வழங்குவதாயின் அது மாநகர சபையின் சின்னத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பற்றுச்சீட்டாக இருத்தல் வேண்டும்.
9. பணம் அறவிடுவதற்காக பயன்படுத்தப்படும் பணியாளர்களை இலகுவாக அடையாளம் காண்பதற்கு மாநகர சபை அங்கீகரித்த சீருடை மற்றும் அடையாளம் காணும் முத்திரை ஒன்றை கட்டாயம் குத்தகைதாரரின் செலவில் வழங்குதல் வேண்டும்.
10. அவ்வாறு பயன்படுத்தப்படுகின்ற பணியாளர்கள் முற்பகல் 7.00 தொடக்கம் பிற்பகல் 8.00 வரை பணியில் ஈடுபடுத்துதல் வேண்டும் என்பதோடு, அந்தக் கால எல்லைக்கு அப்பால் கட்டணம் அறிவிடாதிருத்தல் வேண்டும். அரசாங்கம் விதித்திருக்கும் வீதிச் சட்ட ஒழுங்குகளை பின்பற்றுதல் வேண்டும் என்பதோடு, வீதிக்கு இடையூறு இல்லாத வகையில் வாகனங்களை கையாள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
11. வாகனக் கட்டணம் அறவிடுவதற்கு பயன்படுத்தும் பணியாளர்களின் நடத்தை, சுத்தம், ஒழுக்கம், பராமரித்தல் மற்றும் கட்டுப்படுத்தல் கேள்விமனுதாரர் மூலம் அவரின் விருப்பத்திற்கு அமைய மேற்கொள்ளல் வேண்டும். என்றாலும் அது இருக்கின்ற சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.
12. முதல் மணி நேரத்திற்கு வழங்கப்படும் பற்றுச்சீட்டு, நகரத்தின் வேறு வாகனத் தரிப்பிடம் ஒன்றில் அந்தக் காலப்பகுதிக்குள் நிறுத்தப்பட்டாலும் முன்னர் வழங்கப்பட்ட ரசீது செல்லுபடியாக இருத்தல் வேண்டும் என்பதோடு, கட்டணம் அறவிடக்கூடாது.
13. மேற்குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு மேலதிகமாக பெறுகை விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் இணங்குதல் வேண்டும் என்பதோடு, இந்தப் பெறுகை தொடர்பில் இறுதி முடிவு கேள்விக் குழு மற்றும் முகாமைத்துவ குழுவின் இணக்கத்தின் அடிப்படையில் மாநகர ஆணையாளரின் முடிவு அடிப்படையில் அமையும்.

**அட்டவணை இலக்கம் 01**

| வரிசை இலக்கம் | விபரம் | குறைந்தபட்ச விலைமனு (வரி இன்றி) ரூபா | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் ரூபா | மீளளிக்கப்படும் பிணை வைப்பு ரூபா |
|---|---|---|---|---|
| 01 | பண்டாரவளை நகரின் வாகனங்களை நிறுத்துவதற்கான கட்டணம் அறவிடுவதற்கு 2024.02.01 ஆம் திகதி தொடக்கம் 2024.12.31 ஆம் திகதி வரை குத்தகைக்கு விடல் | 4,528,500.00 (ரூபா நாற்பத்து ஐந்து இலட்சத்து இருபத்து எட்டாயிரத்து ஐந்நூறு) | 15,000.00 (ரூபா பதினைந்தாயிரம்) | 100,000.00 (ரூபா ஒரு இலட்சம்) |

**அட்டவணை இலக்கம் 02**

| வரிசை இலக்கம் | வாகனத்தின் வகை | முதல் 10 நிமிடம் தொடக்கம் முதல் மணித்தியாலம் அல்லது ஒரு பகுதிக்காக (ரூபா) | அதிகரிக்கும் ஒவ்வொரு மணித்தியாலம் அல்லது அதன் ஒரு பகுதிக்கு (ரூபா) | கட்டணங்களில் இருந்து விடுவிக்கப்படும் கால எல்லை |
|---|---|---|---|---|
| 01 | மோட்டார் சைக்கிள் | 10.00 | 10.00 | முதல் 10 நிமிடங்கள் |
| 02 | முச்சக்கர வண்டி உட்பட இலகு ரக வாகனங்கள் | 50.00 | 30.00 | முதல் 10 நிமிடங்கள் |
| 03 | லொறி உட்பட கனரக வாகனங்கள் | 200.00 | 100.00 | முதல் 10 நிமிடங்கள் |

**2024.01.05 ஆம் திகதி,**
**மாநகர சபை,**
**தோட்ட வீதி, பண்டாரவளை**

**டீ. கஜேந்திரன் குமார்,**
**பெறுகைக் குழு தலைவர்,**
**(மாநகர ஆணையாளர்)**
**மாநகர சபை, பண்டாரவளை**

Daily News Classifieds, the Housewives’ companion

## தங்கக் கடன் பகிரங்க விற்பனை/ஏலம்

ரிச்சர்ட் பீரிஸ் ஃபைனான்ஸ் லிமிடெட்டின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தங்கக் கடன் மையங்களில் 31.10.2023 வரையிலான காலப்பகுதியில் அடகு வைக்கப்பட்ட தங்கப் பொருட்கள், இது வரை மீட்டெடுக்கப்படவில்லை, 29.01.2024 அன்று விற்கப்படும்.

### தங்க கடன் நிலையங்கள்

Arij City, சிலாபம், சிலாபம் Metro, கம்பஹா, ஹட்டன், ஹோமாகம, கல்முனை, கண்டி, களனி, குளியாப்பிட்டிய, குருநாகல், மாத்தறை, நீர்கொழும்பு, நுவரெலியா, பாணந்துறை, வென்னப்புவ

### திகதி, நேரம் மற்றும் விற்பனை நடைபெறும் இடம்

திகதியும் நேரமும் : **29.01.2024 மு.ப 10.00 மணிக்கு**
இடம் : **ரிச்சர்ட் பீரிஸ் ஃபைனான்ஸ் லிமிடெட்**
**இல. 69, ஹைட் பார்க் கோனர், கொழும்பு 02**

பங்கேற்கும் அனைவரும் தேசிய அடையாள அட்டை மற்றும் உத்தரவாத வைப்புத் தொகையை கொண்டு வர வேண்டும். ரிச்சர்ட் பீரிஸ் ஃபைனான்ஸ் லிமிடெட் எந்த அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ரத்து செய்ய அல்லது ஒத்திவைக்கும் உரிமையை கொண்டுள்ளது.

**ரிச்சர்ட் பீரிஸ் பினான்ஸ் லிமிட்டெட்**
Richard Pieris Finance
தொலைபேசி: 0714 368 997 / 0711 692 272

skills

## இலங்கை வங்கி

ஏல விற்பனை அறிவித்தல்

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் 2000ஆம் ஆண்டின் 54ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 22ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.**

கடன் தொடர்பு இலக்கம் 74958675 மற்றும் கடன் தொடர்பு இலக்கங்கள் 83021533, 84944692,85002714, 85039687, 85053718, 85099390, 85200031

இல.104, எல்லீ ஹவுஸ் வீதி, கொழும்பு 15 என்ற முகவரியிலுள்ள M/S ஷலோம் என்ரபிறைசஸ் என்ற பெயரிலான நிறுவனத்தின் பங்காளர்களான திரு. யேசு சேவியர் ஸ்பெல்மன் பெனான்டோ, திருவாட்டி. அந்தோனி ஷெல்மா பெனான்டோ ஆகியோரின் கடன் பொறுப்புகளுக்காக இல. 104, எல்லீ ஹவுஸ் வீதி, கொழும்பு 15 என்ற முகவரியில் அமைந்துள்ள திரு. யேசு சேவியர் ஸ்பெல்மன் பெனான்டோ, திருவாட்டி. அந்தோனி ஷெல்மா பெனான்டோ ஆகியோரின் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2023.11.10ஆம் திகதிய 2358ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023.11.10ஆம் திகதி தினமின, டெய்லி நியூஸ், தினகரன் ஆகிய நாளிதழ்களிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய முதல் நிலுவையையும் விற்பனைத் திகதி வரை செலுத்தவேண்டியுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகளையும் பணங்களையும் அறவிடும் பொருட்டு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தையும் நிலமனையையும் இல. 50/3 விஹார மாவத்தை, கொலன்னாவை எனும் முகவரியைச் சேர்ந்த T & H ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம். எச்.ரி. கருணாரத்ன 2024.02.07ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பாரென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

மேற்குறிப்பிடப்பட்ட முதலாவது அட்டவணை

இல. 104, எல்லீ ஹவுஸ் வீதி என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் R.F குணசேகர தயாரித்த 1947.10.31ஆம் திகதிய 2625B' என்ற இலக்கத்தையுடைய வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு B1 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு மாநகர சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு எல்லைகளுக்குட்பட்ட லுணுபொக்குண கிராம சேவகர் பிரிவின் ஐந்தாம் வட்டாரத்திலுள்ள (லுணுபொக்குண) முகத்துவாரம் என்ற இடத்தில் அமைந்துள்ளது. வடகிழக்கில் 108ஆம் இலக்க காணி மற்றும் கட்டடத்தையும் தென்கிழக்கில் இல. 102/1 - 7 என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட காணித்துண்டு B2ஐயும் தென்மேற்கில் 3 அடிகள் அகலங்கொண்ட ஒற்றையடிப் பாதை, இல. 100 என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட காணித்துண்டு A என்பவற்றையும் வடமேற்கில் எல்லீ ஹவுஸ் வீதியையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி குறித்த 2625B : என்ற இலக்கத்தையுடைய வரைபடத்தின்படி பதினாறு மற்றும் நூறின் மேல் நாற்பத்தெட்டு பேர்ச்சுகள் (A0.R0.P16, 48/100) பரப்பளவையும் அதில் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ளதோடு கொழும்புக் காணிப்பதிவகத்தில் D94/74 எனும் இலக்கத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த காணியானது உரிமம் பெற்ற நில அளவையாளர் S. ஜெகதீசன் தயாரித்த 1968.04.28ஆம் திகதிய 674ஆம் இலக்க வரைபடத்திலும் உரிமம் பெற்ற நில அளவையாளர் W.J.M.G. டயஸ் தயாரித்த 1984.07.20ஆம் திகதிய 509/84 என்ற இலக்கத்தையுடைய வரைபடத்திலும் கீழ்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

509/84 என்ற இலக்கத்தையுடைய வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள இல. 104, என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட காணித்துண்டு மேற்குறிப்பிடப்பட்டவாறு முகத்துவாரம் எல்லீ ஹவுஸ் வீதியில் அமைந்துள்ளது. வடகிழக்கில் ஒழுங்கையையும் தென்கிழக்கில் G 102/1, எல்லீ ஹவுஸ் வீதி என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட நிலமனையையும் தென்மேற்கில் 3 அடிகள் அகலங்கொண்ட ஒற்றையடிப் பாதையையும் வடமேற்கில் எல்லீ ஹவுஸ் வீதியையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி குறித்த 509/84 என்ற இலக்கத்தையுடைய வரைபடத்தின்படி பதினாறு தசம் நாற்பது பேர்ச்சுகள் (A0. R0.P16.40) பரப்பளவையும் அதில் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ளது.

குறித்த காணியானது உரிமம் பெற்ற நில அளவையாளர் H. அனில் பீரிஸ் தயாரித்த 1984.10.31ஆம் திகதிய 3450ஆம் இலக்க மீளளவை வரைபடத்தில் கீழ்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

3450 என்ற இலக்கத்தையுடைய வரைபடத்தில் காணித்துண்டு 3A என விபரிக்கப்பட்டுள்ள இல. 104 என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்டுள்ள காணி மேற்குறித்தவாறு முகத்துவாரம் எல்லீ ஹவுஸ் வீதியில் அமைந்துள்ளது. வடக்கில் எல்லீ ஹவுஸ் வீதியையும் கிழக்கில் ஒற்றையடிப் பாதையையும் தெற்கில் காணித்துண்டு 3Bஐயும் மேற்கில் ஒற்றையடிப் பாதையையும் (3443ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 2) எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி குறித்த 3450 ஆம் இலக்க வரைபடத்தின்படி பதினாறு தசம் நாற்பது பேர்ச்சுகள் (AO.RO.P16.40) பரப்பளவையும் அதில் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ளது.

307/2004ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு A என விபரிக்கப்பட்டுள்ள இல. 104 என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்டுள்ள காணி மேற்குறித்தவாறு முகத்துவாரம் எல்லீ ஹவுஸ் வீதியில் அமைந்துள்ளது. வடக்கில் எல்லீ ஹவுஸ் வீதி, ஒழுங்கை என்பவற்றையும் கிழக்கில் G 102, எல்லீ ஹவுஸ் வீதி என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட நிலமனை, ஒழுங்கை என்பவற்றையும் தெற்கில் ஒற்றையடிப் பாதை, G 102, எல்லீ ஹவுஸ் வீதி என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட நிலமனை என்பவற்றையும் மேற்கில் ஒற்றையடிப் பாதை, எல்லீ ஹவுஸ் வீதி என்பவற்றையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி குறித்த 3450ஆம் இலக்க வரைபடத்தின்படி பதினாறு தசம் நாற்பது பேர்ச்சுகள் (AO.RO.P16.40) பரப்பளவையும் அதில் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ளது.

பணம் செலுத்தும் முறை : ஏலத்தில் வெற்றிபெறுபவர் ஏலம்கூறி முடிந்ததும் பின்வரும் தொகையைப் பணமாகச் செலுத்த வேண்டும்

1. கொள்வனவு விலையிலிருந்து 10% (பத்து வீதம்)
2. VAT கட்டணங்கள் (பொருத்தமாயின்)
3. விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு 1% (ஒரு வீதம்)
4. ஏலதாரருக்கான தரகுப் பணமாக 2.5% (இரண்டு தசம் ஐந்து வீதம்)
5. விற்பனைச் செலவு உட்பட இதர செலவுகள் ஏதும் இருப்பின்
6. பிற கட்டணங்களும் அறவீடுகளும்

ஏலம் நடைபெற்றதிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையிலிருந்து இன்னொரு 10% (பத்து வீதத்தை) செலுத்த வேண்டும் என்பதோடு விற்பனைத் திகதியிலிருந்து 3 மாதங்களுக்குள் கொள்வனவு விலையின் மீதி 80% (எண்பது வீதத்தை) செலுத்த வேண்டும். மேலும், விற்பனைச் சான்றிதழை அத்தாட்சிப்படுத்துவதற்கான முத்திரைத் தீர்வை மற்றும் நொத்தாரிசுக் கட்டணம் என்பவற்றையும் கொள்வனவாளர் செலுத்த வேண்டும்.

மேலே கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு கொள்வனவாளர் இணங்காதவிடத்து ஏல நாளன்று செலுத்தப்பட்ட அனைத்து பணங்களையும் செல்லுபடியற்றதாக அறிவித்து ஆதனத்தை மீண்டும் விற்பனை செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

**ஆதனத்தைச் சென்றடையும் வழி :** ஆதனமானது ஐந்தாம் வட்டாரம், முகத்துவாரப் பகுதியில் எல்லீ ஹவுஸ் வீதியில் அமைந்துள்ளது. புறக்கோட்டையிலுள்ள கான் மணிக்கூட்டுக் கோபுர சுற்றுவட்டத்திலிருந்து என்.எச்.எம். அப்துல் காதர் வீதி, கடற்கரை வீதி, புனித அந்தோனி மாவத்தை, ஸ்ரீமத் இராமநாதன் மாவத்தை என்பவற்றினூடாக 2.35 கிலோமீற்றர்கள் பயணித்து அளுத் மாவத்தையை அடைந்து அங்கிருந்து இடதுபுறமாக கீழ் புனித அண்ட்ரூ பிரதேசத்திற்கு திரும்பி 300 மீற்றர்கள் பயணித்து டொக்லண்ட் சந்தியை அடைந்து பின்னர் வலது புறமாக எல்லீ ஹவுஸ் வீதியில் திரும்பி 350 மீற்றர்கள் பயணித்தால் வடமேற்கு எல்லைகள் வீதியை நோக்கியவாறு வீதியின் வலதுபுறத்தே அமைந்துள்ள ஆதனம் இருக்குமிடத்தை அடையமுடியும்.

"ஏலவிலைகூறுபவர்கள் மேற்குறித்த ஆதனங்கள் தொடர்பான உரித்துறுதியையும் ஏனைய தொடர்புபட்ட ஆவணங்களையும் புறக்கோட்டைக் கிளையின் சிரேஷ்ட முகாமையாளரைத் தொடர்புகொள்வதன் மூலம் பார்வையிட முடியும். தொலைபேசி இலக்கம் 0112452059 / 0112434478"

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி,

**R.M.D. ரத்நாயக்க**
**சிரேஷ்ட முகாமையாளர் (அறவிடல்)**

**இலங்கை வங்கி**
**புறக்கோட்டைக் கிளை**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

The Housewives' companion
Classifieds on
Daily News

## afc தங்கக் கடன் சேவை
## தங்க நகை ஏல விற்பனை

அலையன்ஸ் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் பின்வரும் கிளைகளில், அடமானம் வைக்கப்பட்டுள்ள 31.10.2023 அன்று முதிர்ச்சியடைந்த இதுவரை மீட்கப்படாத தங்கப் பொருட்கள், பின்வரும் தேதிகளில் காலை 09:30 முதல் கீழ்க்கண்ட இடங்களில் பொது ஏலம் மூலம் விற்கப்படும்.

### தங்கக் கடன் சேவை நிலையங்கள்

| தேதி | கிளை | இடம் |
|---|---|---|
| 23-01-2024 | சங்கானை, சாவகச்சேரி, சுன்னாகம், யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் நகரக் கிளை, மன்னார், பருத்தித்துறை, திருநெல்வேலி, குருமன்காடு, முழங்காவில்,வவுனியா,அக்குரஸ்ஸ, அளுத்கம, அம்பலாங்கொட,அம்பலாந்தோட்டை, அம்பாறை, அனுராதபுரம்,அதுருகிரிய, அவிசாவளை, பதுளை மட்டக்களப்பு, சிலாபம், தம்புள்ளை தெஹியத்தகண்டிய, தெனியாய, எம்பிலிபிட்டிய கலேவெல, கல்கமுவ, காலி, கம்பஹா கம்பளை, கனேமுல்ல, ஹட்டன் ஹிங்குராக்கொட, ஹோமாகம, ஜா-எல கடவத்தை, கதுருவெல, கல்பிட்டிய களுத்துறை, களுவாஞ்சிக்குடி, கேகாலை களனி, கிளிநொச்சி, கிரிபத்கொட கொஹுவல, குளியாப்பிட்டிய குருநாகல், மஹரகம மஹியங்கனை, மாலபே, மாத்தறை மதவாச்சி, மொனராகலை, நீர்கொழும்பு, நிக்கவெரட்டிய, நிட்டம்புவ நுவரெலியா, பாணந்துறை, பராக்கிரமபுர பசறை, பிலியந்தலை, பூகொட புதுக்குடியிருப்பு, புத்தளம், ராகலை இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட தலவாக்கலை, திருகோணமலை, திருகோணமலை-2 உடப்புவ, வார்டு இடம் வெலிமடை, வெல்லவாய, வென்னப்புவ, கிரிந்திவெல,மாத்தளை,நாவலப்பிட்டி,பலாங்கொடை பொரளை சூப்பர் கிளை,ஹொரணை கடுவெல | 722, கோட்டே வீதி, ராஜகிரிய. |

ஏலத்தில் பங்கேற்கும் அனைவரும் தங்களின் தேசிய அடையாள அட்டையை கொண்டு வர வேண்டும் மற்றும் நிறுவனத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும் எலாயன்ஸ் ஃபினான்ஸ் கோ. பி.எல்.சி க்கு எந்தவித அறிவிப்பும் இல்லாமல் ஏலங்களை ரத்து செய்ய, ஒத்திவைக்க அல்லது ஒன்றினைக்க உரிமை உள்ளது.

65 1956 இல் இருந்து
**எலாயன்ஸ் பினான்ஸ்**
கம்பனி பி.எல்.சி
செளபாக்கியத்திற்கோர் நம்பிக்கையான அடித்தளம்

அடகுச் சேவைத் தலைவர்
எலாயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ
722, கோட்டை வீதி இராஜகிரிய
தொலை : 0115 573600

## இலங்கை வங்கி

ஏல விற்பனை அறிவித்தல்

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் 2000ஆம் ஆண்டு 54ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.**

கடன் வசதி தொடர்பு இல. 83753433

மித்தெனிய, வெலிபிட்டிய, வலஸ்முல்ல றோட், பினிந்து சுபர் சேர்விஸ் எனும் முகவரியைச் சேர்ந்த திரு.வீரகுட்டிகே வசந்த குமார ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர் சபை மேற்கொண்ட தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2023.12.15 ஆம் திகதி 2363 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023 டிசெம்பர் 13 ஆம் திகதி திங்கட்கிழமை தினகரன், தினமின, மற்றும் டேய்லிநியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கு அமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ எனும் முகவரியைச் சேர்ந்த M/S T&H ஒக்ஷன் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. முதுகமுவே ஹேவாவசம் துசித் கருணாரத்ன அவர்கள் 2024 பெப்ரவரி 08ஆம் திகதி மு.ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட அட்டவணை

1. தென் மாகாணம் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் கிருவபற்று வடக்கில் கட்டுவன பிரதேச சபை எல்லைகளுள் கட்டுவன பிரதேச செயலாளர் பிரிவில் வெலிபிட்டிய 506 ஆம் இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவில் வெலிபிட்டியவில் அமைந்த "ஒவிலான கெதர" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜீ. வர்ணகுலசூரிய தயாரித்த 1990 ஜனவரி 26 திகதியிட்ட வரைபடம் இல. 1093 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 02 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு அதாவது காணித்துண்டு 02, வடக்கில் உலஹிடிய்யாவே கெதர ருப்பயும் கிழக்கில் இக் காணியின் காணித்துண்டு 01 உம் தெற்கில் கட்டுவனயிலிருந்து மித்தெனிய வரை பிரதான பாதையும், மேற்கில் இக்காணியின் காணித்துண்டு 1 உம் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் இருபத்தைந்து பேர்ச்சுகள் (ஏ.0), றூட். 1, பே. 25) விஸ்தீரணமுடையதுடன் அங்கு காணப்படும் மண், மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி வலஸ்முள்ள, மாவட்ட காணிப் பதிவகத்தில் K 70/132இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

   மேற்குறிப்பிட்ட காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச்.எம்.ஏ.யூ. நவரத்ன தயாரித்த 2011.07.07 திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல. 0321இன் பிரகாரம் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

   மேற்கூறிய வெலிபிட்டியவில் அமைந்த "ஒவிலான கெதர" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச்.எம்.ஏ.யூ. நவரத்ன தயாரித்த 2011 ஜூலை 7 திகதியிட்ட வரைபடம் இல. 0321 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 02 இன் காணித்துண்டு A என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு அதாவது காணித்துண்டு 02, வடக்கில் உலஹிடிய்யாவே கெதர ருப்பயும் கிழக்கில் வரைபடம் இல. 1093 இல் காணித்துண்டு 03 உம் தெற்கில் பிரதான பாதையும், மேற்கில் வரைபடம் இல. 1093 இல் காணித்துண்டு 1 உம் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் இருபத்தைந்து பேர்ச்சுகள் (ஏ.0, றூ.1, பே.25) விஸ்தீரணமுடையதுடன் அங்கு காணப்படும் மண் மரங்கள் பயிர்கள் கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும்.

"மேற்குறிப்பிட்ட ஆதனங்கள் சம்பந்தமான உரித்துரிமை உறுதிகளையும் சம்பந்தப்பட்ட ஏனைய ஆவணங்களையும் விலை கூறுவோர் சுதந்திரமாக பரீட்சிப்பதற்கு தொ.பே. இல. 0472247280 ஊடாக மித்தெனிய கிளை முகாமையாளருடன் தொடர்பு கொண்டு பரீட்சிக்கலாம்"

மேற்குறிப்பிட்ட அட்டவணை.

1.1 பணம் செலுத்தும் முறை.

1.2 ஏல விலை கூறல் வெற்றியடைந்ததும் விலைக்கு வாங்குபவர் பணத்தை பின்வருமாறு செலுத்த வேண்டும்.
- 1.1 வாங்குபவர் கொள்வனவு விலையில் 10% (பத்து சதவீதம்) உடனே செலுத்த வேண்டும்.
- 1.2 வற் (VAT) கட்டணம். (ஏற்புடையதாயின்)
- 1.3 விற்பனை வரி விதிப்பனவாக உள்ளூராட்சி அதிகார சபைக்கு 1% (ஒரு சதவீதம்) செலுத்த வேண்டும்.
- 1.4 ஏலதார தரகுக் கட்டணம் மற்றும் ஏனைய செலவுகளாக 2.5% (2.5 சதவீதம்) செலுத்த வேண்டும்.
- 1.5 ஏற்புடையதாயின் விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய செலவுகள்.
- 1.6 ஏனைய கட்டணங்கள் மற்றும் செலவுகள்.

மேலும் கொள்வனவு விலையில் 10% ஐ ஏல விற்பனைத் திகதி தொடக்கம் 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். அத்துடன் விற்பனைத் தினத்திலிருந்து மூன்று மாதங்களுக்குள் கொள்வனவு விலையில் மீதி 80% ஐ செலுத்த வேண்டும். இவற்றுக்கு மேலதிகமாக முத்திரைக்கட்டணம் மற்றும் நொத்தாரிஸ் கட்டணம், விற்பனை நிபந்தனைகள் மற்றும் விற்பனைச் சான்றிதழ் அத்தாட்சிப்படுத்தல் கட்டணம் ஆகியவற்றை செலுத்த வேண்டும். மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு கொள்வனவாளர் இணங்க மறுப்பின் ஏல விலை கூறிய தினத்தில் கொள்வனவாளர் செலுத்திய சகல பணங்களையும் பறிமுதல் செய்யும் அதிகாரமும் ஆதனத்தை மீண்டும் ஏலத்தில் விடும் அதிகாரமும் வங்கிக்கு உண்டு.

2. ஆதனத்துக்குச் செல்லும் வழி.
மித்தெனிய நகர மத்தியிலிருந்து வலஸ்முல்ல பாதையில் சுமார் 2.5 கி.மீ.தூரம் பயணிக்கவும். வெலிப்பிட்டிய சந்திக்கும் 22/1 ஆவது கால்வாயுக்கும் இடையில் பாதையின் வலப்பக்கமாக ஆதனம் அமைந்துள்ளது.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

**இலங்கை வங்கி,**
**மித்தெனியக் கிளை**

**திருமதி பி.டீ.எல். ஆரச்சி**
**முகாமையாளர்.**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

**2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 9 (1) இன் கீழ் கூட்டிணைக்கப்படல் தொடர்பான பகிரங்க அறிவித்தல்**

1) கம்பனியின் பெயர்: கோப் இன்டர்நஸனல் பவுண்டேஷன்
2) கூட்டிணைக்கப்பட்ட திகதி: **31/08/2023**
3) பதிவிலக்கம்: **G/A 00283531**
4) பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி: **இல.35/5/1,** பொஸ்வெல் வீதி. வெள்ளவத்தை. கொழும்பு **-06**

**கம்பனிச் செயலாளர் - திருமதி.சந்திரவதனி வாசவன் இல.49B,33 ம். ஒழுங்கை வெள்ளவத்தை. கொழும்பு-06**

## மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்

**1998 ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம் பிரிவு 55**

கொழும்பு மாவட்டத்தின் இரத்மலானை பிரதேச செயலாளர் பிரிவில் கட்டுகுருந்துவத்த எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 521005 கண்ட இல. 13 பத்திர இல. 01 துண்டு இல. 61ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த இல. 19/1வி, ஹுனுதாகொட லேன், டெம்பிள் வீதி, கல்கிசை எனும் விலாசத்தைக் கொண்ட சிரில் ரமேஷ் விக்ரமசிங்ஹ எனும் ஆள் 2021.04.18ல் மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் இல. 5/3, 3ம் ஒழுங்கை இரத்மலானை என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்துக்கு அறிவித்தல் பிரசுரமான தினம் முதல் எதிர்வரும் ஒரு மாதம் செல்லும் காலம் 05.02.2024 ஆந் திகதிக்கு முன்னர் சமுகம்தரவும்.

**ஆணையாளர் நாயகம்,**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

**விற்பனைச் செய்வதற்காக விலைமனுக் கோரல்**

N 03

**பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் மற்றும் பொலித்தினை விற்பனை செய்தல்**

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தில் அச்சிடல் தேவைப்பாட்டிற்காக கொள்வனவு செய்யப்பட்ட காகித வகைகள் மற்றும் ஏனைய மூலப் பொருட்களுக்கு பொதியிடுவதற்காக பயன்படுத்தப்பட்டு தற்போது வளவினுள் ஒன்றுசேர்ந்துள்ள பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் மற்றும் பொலித்தின் தொகைகளை 06 மாத கால எல்லையினுள் விற்பனை செய்யும் பொருட்டு மத்திய சுற்றாடல் அதிகார சபையில் பதிவு செய்துள்ள மேல் மாகாணத்தினுள் அமைந்துள்ள பிளாஸ்டிக் மற்றும் பொலித்தின்களை சேகரிக்கும் மற்றும் மீள்சுழற்சி செய்யும் நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளல்

மீளளிக்கப்படாத 250.00 ரூபா தொகையைச் செலுத்தி திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தின் இரண்டாம் தளத்தில் அமைந்துள்ள ''ஏனைய வழங்கல்'' பிரிவில் இதற்கான விண்ணப்பப் படிவங்களை 2024-01-09ஆம் திகதி முதல் 2024-01-29ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

மேற்கூறிய விடயம் தொடர்பான மேலதிக விபரங்களை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 4.15 மணி வரை 011 2673311 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**அரசாங்க அச்சகத் திணைக்களம்,**
**இல. 118, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு-08.**
**2024-01-05.**

| | | |
|---|---|---|
| **தொலைபேசி** | - | **011 2673311** |
| **தொலைநகல்** | - | **011 2671922** |
| **இணையதளம்** | - | **www.documents.gov.lk** |
| **மின்னஞ்சல் முகவரி** | - | **othersupplydgp@Gmail.com** |

## சிறு விளம்பரம்

வேலைவாய்ப்பு

319

**வெற்றிடங்கள்**
**வீட்டு வேலையாளர்கள்**

கேகாலை மாவட்டத்தில் ஓர் குழந்தையைப் பராமரிக்க மற்றும் வீட்டு வேலைகளுக்கு பணிப் பெண் (வயது 30-45) ஐ தேடுகிறார். தமிழ் பேசுபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அத்துடன் வீட்டில் தங்கியிருந்து வேலை செய்தல் வேண்டும். (தங்குமிடம் மற்றும் உணவு இலவசம்) தொ.பே. +94713522116. 002200

Repeat Your Ad For Better Offers

## கேள்வி அறிவித்தல்

## இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்

**கேள்வி இல.: 08/31.01.2024**

**SUPPLY, INSTALLATION AND COMMISSIONING OF 02 Nos. OF 60,000 Btu/h CEILING MOUNTED SPLIT TYPE AIR CONDITIONING UNITS AND 02 Nos. OF 60,000 Btu/h FLOOR STANDING SPLIT TYPE AIR CONDITIONING UNITS FOR KOKAVIL TRANSMITTING STATION**

கொக்காவில் ஒலிபரப்பு நிலையத்திற்கு **02 Nos. OF 60,000 Btu/h CEILING MOUNTED SPLIT TYPE AIR CONDITIONING UNITS AND 02 Nos. OF 60,000 Btu/h FLOOR STANDING SPLIT TYPE AIR CONDITIONING UNITS** ஆகியவற்றை வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்பட வைத்தல் ஆகியவற்றிற்காக இலங்கை, கொழும்பு-07, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இந்த அழைப்பில் உயர்தர ஒலிபரப்பு உபகரணங்களின் உற்பத்தியாளர்கள், தரஅங்கீகாரம் பெற்ற முகவர்கள், சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற விநியோகஸ்தர்கள் மற்றும் விற்பனையாளர்கள் ஆகியோர் பங்குபற்றலாம். ஆர்வமுள்ளவர்கள் கேள்வி ஆவணங்களின் தொகுதியொன்றை இலங்கை, கொழும்பு-07, சுதந்திர சதுக்கம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பெறுகைக்கான உதவிப் பணிப்பாளரிடமிருந்து 2024.01.30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். மேலேயுள்ள கேள்வி ஆவணங்களை வழங்குவதற்காக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் 5,000 ரூபாவை (ஐந்தாயிரம் ரூபாவை) மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக கூட்டுத்தாபனத்தின் பிரதான கணக்காளருக்கு செலுத்தப்படல் வேண்டும். 2024.01.30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் அலுவலக நாட்களில் (வர்த்தக விடுமுறைகள் நீங்கலாக திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரையும்) இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திலிருந்து கேள்வி ஆவணங்கள் கையேற்கப்படலாம். கேள்வி ஆவணங்கள் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பெறுகைக்கான உதவிப் பணிப்பாளரின் அலுவலகத்தில் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.

அனைத்து கேள்விகளும் கேள்வி ஆவணத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு விலைமனுப் பிணையொன்றுடன் (வங்கி உத்தரவாதம்) இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

முகவர்கள், சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற விநியோகஸ்தர்கள் மற்றும் விற்பனையாளர்கள் உற்பத்தியாளர்களின் சார்பாக இந்தக் கேள்வியில் பங்குபற்றுவதற்காக அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்ட தரஅங்கீகாரக் கடிதம்/ அற்றோணித் தத்துவமொன்றை சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுகின்றனர்.

முகவர் தரகுப் பணம் ஏதுமிருந்து கப்பல் தளம் வரையுமான விலையில் சேர்க்கப்பட்டிருந்தால்,தனியாக குறித்துரைக்கப்படல் வேண்டும்.

2024.01.31 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு இலங்கை, கொழும்பு-07, சுதந்திர சதுக்கம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பெறுகைக் குழுத் தலைவரின் அலுவலகத்தில் கேள்விகள் மூடப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.

மேலதிக விபரங்கள் மற்றும் தளவிஜயங்கள் ஆகியவற்றிற்காக இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பொறியியலுக்கான பிரதி பணிப்பாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் (தொலைபேசி: +94 112 580 136/ தொலைநகல்: +94 112 500373)

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்,**
**சுதந்திர சதுக்கம்,**
**கொழும்பு-07,**
**இலங்கை. (SLRC Web Site – http://www.rupavahini.lk)**

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு

Sri Lanka

# சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு
# இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம்

## பொருட்கள், சேவைகள் மற்றும் பணிகளை வழங்குவதற்கான வழங்குனர்களை பதிவு செய்தல் -2024

2024 ஆம் ஆண்டிற்கான கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள், சேவைகள் மற்றும் பணிகளை வழங்குவதற்காக இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தில் தங்களை பதிவு செய்ய விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குனர்கள் / ஒப்பந்ததாரர்கள் / உற்பத்தியாளர்கள் / விநியோகஸ்தர்கள் / நிறுவனங்கள் / உள்ளூர் முகவர்கள் / ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. பொருட்கள்**

**உருப்படி இல.** **வகை**

**1.1. எழுதுபொருள்** - அனைத்து வகையான எழுதுபொருட்கள்
(போட்டோகொப்பி காகிதங்கள், டுப்ளிகேட்டிங் காகிதங்கள், அனைத்து வகையான புத்தக பைண்டிங் பொருட்கள், எழுதும் கருவி போன்றவை)
- 1.1.1. அச்சுப்பொறி தொடர்பான பொருட்கள் டோனர் கார்ட்ரிட்ஜ் மற்றும் ரிப்பன்

**1.2. வெளியீடுகள்** -
(புத்தகங்கள், செய்தித்தாள்கள், நாழிதழ்கள்)

**1.3. தளபாடங்கள் - மேசை, கதிரைகள், அலுமாரி மற்றும் பல**
(மரப்பலகை, பிளாஸ்டிக், ஃபைபர் கண்ணாடி, மெலமைன், இரும்பு)

**1.4. நெளிவுகளையுடைய பெட்டி**

**1.5. அலுவலக உபகரணங்கள்**
- 1.5.1. கணினிகள், கணினி பிரிண்டர்கள், ஸ்கேனர்கள், UPSகள் மற்றும் பிற பாகங்கள் போன்றவை.
- 1.5.2. போட்டோகொப்பி இயந்திரம், பைண்டிங் இயந்திரம், தொலைநகல் மற்றும் பிற தொடர்புடைய உபகரணங்கள்
- 1.5.3. தொலைக்காட்சி மற்றும் பிற தொடர்புடைய பொருட்கள்
- 1.5.4. சமையலறை பொருட்கள் - மின் மற்றும் மின் சாதனங்கள்
(குளிர்சாதனப் பெட்டி, கேத்தல்கள், கொதிகலன்கள், நீர்ச் சூடேற்றி, கண்ணாடி பொருட்கள், பீங்கான் பொருட்கள் போன்றவை)
- 1.5.5 தொலைபேசி அமைப்பு
- 1.5.6 கெமரா, லென்ஸ்கள் மற்றும் ட்ரோன்
- 1.5.7 வாயு சீராக்கி

**1.6. வாகன உதிரிப் பாகங்கள்** - டயர்கள் மற்றும் குழாய்கள், மின்கலம், முதலியன (வழங்கல் மற்றும் நிறுவல்)

**1.7. ஆடை தயாரிப்புகள்**
- 1.7.1 சீருடைகள் மற்றும் கழுத்து பட்டிகள்
- 1.7.2 படுக்கை விரிப்புகள், தலையணைகள், கொசு வலைகள், மெத்தைகள் மற்றும் தலையணை உறைகள்
- 1.7.3 காலணிகள்
- 1.7.4 பெயர் அட்டைகள்
- 1.7.5 திரைச்சீலைகள்

**1.8. பரிசு பொருட்கள்**
கைவினைப் பொருட்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் - (கீ டேக்ஸ், பிராண்டட் கெப்ஸ், டி-ஷர்ட், குவளைகள், லேன்யார்ட்ஸ், பென் டிரைவ்கள், கை பட்டிகள், பேனைகள், மெட்டில் கி டேக்ஸ் மற்றும் ஏனையவைகள்)

**1.9. DVD's, CD's, டொக்கெட்டுகளுடன் கூடிய பட DVD கள்**

**2. சேவைகள்**

**2.1 பழுது மற்றும் பராமரிப்பு சேவைகள்**

**2.1.1 அலுவலக உபகரணங்கள்**
(கணினி நெட்வொர்க்கிங், மேசை கணினிகள், மடிக் கணினிகள், ஃபெக்ஸ் இயந்திரங்கள் மின் மற்றும் மின் உபகரணங்கள், போட்டோகொப்பி மற்றும் டுப்லோ இயந்திரம், பிரிண்டர்கள், UPSகள், கெமரா, லென்ஸ்கள் மற்றும் ட்ரோன், காற்றுப் பதனாக்கிகள் பழுது மற்றும் பராமரித்தல், தகவல் தொடர்பு சாதனங்கள் டெலிபோன் அமைப்புகள், தளபாடங்களை புதுப்பித்தல் மற்றும் பழுதுபார்த்தல்)

**2.1.2 கணினி / போர்ட்டபிள் ஹார்ட் டிரைவ் மீட்பு மற்றும் ஆம்ப் தரவு மீட்பு தொழில்நுட்ப உதவி**

**2.1.3 வாகனம் பழுதுபார்த்தல்**
(வாகன குஷனிங், டிங்கரிங் மற்றும் பெயிண்டிங், இன்டீரியர் க்ளீனிங், எக்ஸ்டீரியர் கிளீனிங், என்ஜின் மற்றும் பிற பழுது மற்றும் பிற சேவைகள்)

**2.1.4 கட்டிட பராமரிப்பு**

**2.1.4.1. மின் பணிகள்**
(வயரிங் மற்றும் லைட்டிங் பொருத்துதல்கள் மற்றும் நுகர்பொருட்கள் போன்றவை)

**2.1.4.2. பொது அலுவலக பராமரிப்பு**

**2.1.4.3. சிறிய பராமரிப்பு வேலைகள்**

**2.2. தோட்ட பராமரிப்பு**
(தொட்டியில் வைக்கப்பட்ட தாவரம் வழங்கல் மற்றும் நில வடிவமைப்பு போன்றவை.)

**2.3. சர்வதேச படப்பிடிப்பிற்கான திரைப்பட தயாரிப்பு நிறுவனங்கள்**
(சர்வதேச திரைப்படக் குழுக்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சியாளர்களுக்கான தொழில்முறை திட்டம் மற்றும் தொழில்நுட்ப ஏற்பாடுகள்)

**2.4. நிகழ்வுகளுக்கான பொருட்கள்**
- 2.4.1. (டிஜிட்டல் டிஸ்ப்ளே போர்டுகள், ஹோர்டிங்குகள், ஒளிரும் பிரச்சார பலகைகள், பெயர் பலகைகள், நியோன் அடையாளங்கள், சிக்னேஜ் போன்றவை.)
புல்-அப்ஸ், அடுக்குகள், A பலகைகள், காற்று சொக்கெட்டுகள், GI குழாய்கள் மற்றும் கொன்கிரீட் அடிப்படையிலான கொடிக்கம்பம், மார்கியூஸ், டோம்ஸ், தோரணம், கேண்ட்ரீஸ், மின்பிறபாக்கி வழங்குநர்கள், ஸ்டால்கள், மேடை, தள ஒளி மற்றும் ஒலி அமைப்புகள்.
- 2.4.2. டி ஷர்ட்கள் மற்றும் தொடர்பான பொருட்களை அச்சிடுதல் மற்றும் தயாரித்தல்
- 2.4.3. பாதுகாப்பு மற்றும் ஊழியர்களுக்கான நிகழ்வுகள்

**2.5. அச்சிடுதல்**
- 2.5.1 ஓப்செட் அச்சிடுதல், புத்தகங்கள், பைண்டிங், (சிற்றேடுகள்/புத்தகங்கள்/விசிட்டிங் கார்டுகள், நாளேடுகள் மற்றும் நாட்காட்டிகள், ஆண்டு அறிக்கை மற்றும் இதழ்கள், கடிதத் தலைப்பு உறைகள் போன்றவை.
- 2.5.2 டிஜிட்டல் ஆ.ஃப்செட் அச்சிடுதல் - புத்தகங்கள் / பிரசுரங்கள் / கையேடு அச்சிடுதல், பைண்டிங், விசிட்டிங் கார்டுகள், டைரிகள், காலெண்டர்கள், வருடாந்திர அறிக்கை, இதழ்கள், லெட்டர்ஹெட்ஸ், உறைகள் போன்றவை.
- 2.5.3 டிஜிட்டல் பிரிண்டிங் - பேனர்கள், ஸ்டிக்கர்கள், பின்னணிகள், புல்அப்கள் போன்றவை.
- 2.5.4 டிஜிட்டல் புகைப்பட அச்சிடுதல் - புகைப்பட அச்சிடுதல், ஃப்ரேமிங் போன்றவை.
- 2.5.5 திரை, பிளக்சோ, சப்ளிமேஷன் அச்சிடுதல் மற்றும் பிற அச்சிடும் தொழில்நுட்பங்கள்.

**2.6. வாகனங்களை வாடகைக்கு எடுத்தல் மற்றும் பொருட்களுக்கான போக்குவரத்து**
- 2.6.1 அலுவலக போக்குவரத்து, சொகுசு வாகனங்கள் - SUVகள், கார்கள் மற்றும் பேருந்துகள்
- 2.6.2 பொருட்களுக்கான போக்குவரத்து - லாரிகள்

**2.7. உபகரணங்கள் மற்றும் ஏனையவைகள் வாடகைக்கு**
- 2.7.1 கெமரா, லென்ஸ்கள் மற்றும் ட்ரோன்கள்
- 2.7.2 ஃபோட்டோகாப்பி மெஷின், பைண்டிங் மெஷின் போன்றவை

**2.8. பொதிச்சேவை - (உள்ளூர் மற்றும் சர்வதேச)**

**2.9. பொருட்கள் அனுப்புதல் மற்றும் சுங்க தீர்வு**

**2.10. குடிநீர் விநியோகம்**

**2.11. மொழிபெயர்ப்பாளர்கள்**
- 2.11.1 ஆங்கிலம், தமிழ் மற்றும் சிங்கள மொழிகளுக்கு மொழிபெயர்ப்பாளர்
- 2.11.2 பிற மொழிகள் (ஜெர்மன், சீனம், கொரியன், பிரஞ்சு, துருக்கியம், ஜப்பானியம், டச்சு, ஹிந்தி, மலாய், ரஷ்யன், இத்தாலி, கெமர், (கம்போடியா) தாய்)
- 2.11.3 உரையாசியர்கள் (ஜெர்மன், சீனம், கொரியன், பிரஞ்சு, இந்தி, கெமர், தாய், ஜப்பானியம், ரஷ்யன்)

**2.12. விளம்பரம் சேவைகள்**
- 2.12.1 விளம்பர முகவர் நிறுவனம்
- 2.12.2 கலை நிகழ்ச்சிகள் (டான்ஸ் ட்ரூப் போன்றவை)
- 2.12.3 நிகழ்வுகள் முகாமைத்துவ நிறுவனங்கள்
- 2.12.4 இலக்கு முகாமைத்துவ நிறுவனங்கள் (இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தில் (SLTDA) பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்)
- 2.12.5 நிகழ்வுகள் முகாமைத்துவ நிறுவனங்கள்
- 2.12.6 PR நிறுவனம் (உள்ளூர்)
- 2.12.7 பயண செல்வாக்கு செலுத்தும் சந்தைப்படுத்தல் முகவர்

**2.13. மல்டிமீடியா தொடர்பான சேவைகள்**
- 2.13.1 கிரா.ஃபிக் டிசைனர்கள்
- 2.13.2 இணையதள வடிவமைப்பாளர்கள்
- 2.13.3 வெப் டெவலப்பர்கள்
- 2.13.4 சமூக ஊடக முகாமைத்துவ நிறுவனங்கள்
- 2.13.5 கூகுள் ஸ்ட்ரீட் வியூ டெவலப்பர்கள் / கிரியேட்டர்கள்
- 2.13.6 புகைப்படக் கலைஞர்கள்,
- 2.13.7 வீடியோகிராபர்கள் மற்றும் வீடியோ எடிட்டர்கள்
- 2.13.8 கிரியேட்டிவ் ஏஜென்சிகள் (மல்டிமீடியா)

**2.14. உள்ளடக்க எழுத்தாளர்கள்**
- 2.14.1 (எழுதுதல், விளம்பரம் மற்றும் கட்டுரைகளுக்கான உள்ளடக்க எழுத்தாளர்கள் - ஆங்கிலம், தமிழ் மற்றும் பிற மொழிகள்)
- 2.14.2 இணைய வழியிலான எழுத்தளர்கள்

**2.15. பாதுகாப்பு சேவை**

**2.16. துப்புரவு சேவைகள்**

**2.17. குறுகிய அறிவிப்பில் சிற்றுண்டி விநியோகம் (2-3 மணி நேரத்திற்குள் SLTPB க்கு விநியோகித்தல்)**

- கேட்டரிங் சேவைகள்

**2.18. மளிகை பொருட்கள்**

**2.19. கட்டிடக் கலைஞர்கள் / வடிவமைப்பாளர்கள்**
- 2.19.1 பட்டியலிடப்பட்ட கட்டிடக் கலைஞர்கள்
- 2.19.2 வரைவாளர்
- 2.19.3 உட்புற வடிவமைப்பாளர்கள் / கட்டிடக் கலைஞர்கள்
- 2.19.4 இயற்கை வடிவமைப்பாளர்கள் / கட்டிடக் கலைஞர்கள்

**2.20 மென்பொருள் அபிவிருத்தியாளர்கள் / மறு விற்பனையாளர்கள்**

**2.21 அளவையார்கள்**

**3. பணி நடவடிக்கைகள்**

**3.1. கட்டிட கட்டுமானம்**
(ICTAD,CIDA பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்)
(கட்டிட கட்டுமானம் / மேம்பாடுகள் / பிளம்பிங் / வயரிங் / தச்சு / மேசன்கள் / பகுதிவேலைகள் / தரைவிரிப்பு அலுமினிய வேலைகள் மற்றும் உறைப்பூச்சு)

**3.2. உட்புற வடிவமைப்பு வேலைகள்**

**3.3. விளம்பர நிகழ்வுகளுக்கான அலங்காரங்கள்**

இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் காசாளரிடம் அல்லது இலங்கை வங்கியின் கூட்டுத்தாபனக் கிளையிலுள்ள **7119985** என்ற கணக்கு இலக்கத்திற்கு இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் சார்பாக ஒவ்வொரு வழங்கல் அல்லது சேவைகளுக்கான மீளச்செலுத்தப்படாத **ரூ.1000.00** பதிவு கட்டணத்தை பணமாக செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் விண்ணப்பங்கள் கீழே உள்ள மாதிரி படிவத்தின்படி அனுப்பப்பட வேண்டும்.

பதிவுக் கட்டணத்தை எந்தவொரு வேலை நாட்களிலும இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் காசாளரிடம் செலுத்த முடியும். **எந்தவொரு அஞ்சல் மூலமாக அனுப்பப்படும் பணம் அல்லது காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது** என்பதை நினைவில் கொள்ளவும். வைப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து **3 வாரங்களுக்குள்** வங்கிச் சீட்டின் அசல் நகல் (வாடிக்கையாளர் நகல்) பெற்ற பின்னரே நேரடி வைப்புத் தொகைகள் ஏற்றுக்கொள்ளப்படும். **தகுதியற்ற விண்ணப்பதாரர்களின் பதிவுக் கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது.**

விண்ணப்பத்தினை பதிவுத் தபால் மூலமாக **"பிரதிப் பணிப்பாளர்", கொள்முதல் பிரிவு, இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம், இல-80, காலி வீதி, கொழும்பு 03** என்ற முகவரிக்கு **2024.01.29** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அனுப்புதல் வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட முகவரி மற்றும் கடித உறையின் மேல் இடது மூலையில் **"வழங்குனர்களின் பதிவு - 2024"** மற்றும் உருப்படி எண்/கள் ஆகியவை எழுதப்பட்டிருத்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பொருள் வழங்கல் அல்லது சேவைக் குறியீடுகளுக்குப் பதிவு கோரப்பட்டால், **ரூ.1000.00** பணமாக ரசீது அல்லது சான்றளிக்கப்பட்ட/அசல் வங்கி ரசீதுடன் தனித்தனி விண்ணப்பங்கள் ஒரு அட்டையில் இடப்பட்டு அனுப்பப்பட வேண்டும்.

விலைமனுக்கோரல்களை சமர்ப்பிக்கத் தவறிய வழங்குனர்கள் அல்லது பொருட்களை வழங்கத் தவறியவர்கள் அல்லது சரியான நேரத்தில் சேவைகளை வழங்கத் தவறினால் அல்லது நிர்ணயிக்கப்பட்ட விவரக்குறிப்புகளுக்கு இணங்காதவர்கள் முன் அறிவிப்பு இன்றி பதிவேட்டில் இருந்து நீக்கப்படுவார்கள்.

வழக்கமாக பதிவு செய்யப்பட்ட வழங்குனர்கள்/ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுக்கோரலுக்கு அழைக்கப்படும் என்றாலும், ஏனைய வழங்குனர்கள/ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் விலைமனுக்கோரல்களுக்கு அழைக்கும் உரிமையை SLTPB கொண்டுள்ளது.

பொதுவாக, 2006 இன் கொள்முதல் வழிகாட்டுதல் 3.4 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஷாப்பிங் நடைமுறையின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படும். மேலதிக விபரங்களுக்கு பிரதிப் பணிப்பாளர் - கொள்முதல், இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம், இல 80, காலி வீதி, கொழும்பு 03. **தொ.பே. 011-2426800 தொடர் -117, 116, 373**

பின்வரும் நகல்பிரதிகளை சமர்ப்பிக்கத் தவறினால் உங்கள் பதிவு நிராகரிக்கப்படும். 3

01. நிறுவனத்தின் நோக்கத்தினை நிரூபிப்பதற்கான கணக்காய்வாளர் ஒப்புதல் / மன்றத்தின் கட்டுரை / மன்றத்தின் பதிவுக்குறிப்புடன் வணிகப் பதிவு நகல்
02. VAT பதிவு (தேவைப்படின்)
03. ICTAD பதிவு (தேவைப்படின்)
04. வங்கி வைப்புச் சீட்டின் அசல்
05. சமீபத்திய ஆண்டிற்கான முகவர் அங்கீகாரம் (தேவைப்படின்)
06. SLTDA பதிவு தேவைப்படின்)

---

## வழங்குனர்களை பதிவு செய்யும் படிவம் - 2024
## நிறுவனத்தின் பொதுவான விபரங்கள்

01. நிறுவனத்தின் பெயர் (சட்டபூர்வ பெயர்): ................................................
02. நிறுவனத்தின் முகவரி : ................................................
03. உரிமையாளரின் பெயர் : ................................................
தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி
04. தொடர்பு கொள்ளும் நபரின் பெயர் : ................................................
தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி
05. தொலைநகல் இலக்கம் : ................................................
06. இணைய முகவரி : ................................................
07. வணிகத்தின் தன்மை : ................................................
(பொருளின் உட்பிரிவைக் குறிப்பிடவும்)
08. வணிக பதிவு இலக்கம் : ................................................
09. VAT பதிவு இலக்கம் : ................................................
10. ICTAD பதிவு இலக்கம் : ................................................
(தேவைப்படின்)

இத்துடன் நகல் இணைக்கப்பட்டுள்ளதா

| | ஆம் | இல்லை |
|---|---|---|
| 11. மன்றத்தின் கட்டுரை / மன்றத்தின் பதிவுக்குறிப்பு | | |
| 12. இரசீது இலக்கம் | | |
| 13. வங்கி வைப்புச் சீட்டின் அசல் | | |
| 14. பண வைப்புச் சீட்டு அல்லது சான்றளிக்கப்பட்ட/அசல் வங்கி வைப்பு சீட்டின் நகல் | | |
| 15. ஏதேனும் தரகர்கள் அல்லது முகவர்கள் குறிப்பிடப்பட வேண்டும் (சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்) | | |
| 16. முகவர் அங்கீகாரத்தை புதுப்பித்தல் | | |
| 17. வணிகத்தின் பதிவு | | |
| 18. கடந்த 03 வருட அனுபவம் | | |

**3.0 வழங்கப்படும் பொருட்களின் பட்டியல் / சேவைகள் / சிவில் பணிகளின்**
வகைபடுத்தல் எண்கள் (கீழே உள்ள தொடர்புடைய பெட்டியில் புள்ளிடவும்)

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1.1 | 1.1.1 | 1.2 | 1.3 | 1.4 | 1.5.1 | 1.5.2 | 1.5.3 | 1.5.4 | 1.5.5 | 1.5.6 | 1.5.7 |
| 1.6 | 1.7.1 | 1.7.2 | 1.7.3 | 1.7.4 | 1.7.5 | 1.8 | 1.9 | 2.1.1 | 2.1.2 | 2.1.3 | 2.1.4 |
| 2.1.4.1 | 2.1.4.2 | 2.1.4.3 | 2.2 | 2.3 | 2.4.1 | 2.4.2 | 2.4.3 | 2.5.1 | 2.5.2 | 2.5.3 | 2.5.4 |
| 2.5.5 | 2.6.1 | 2.6.2 | 2.7.1 | 2.7.2 | 2.8 | 2.9 | 2.10 | 2.11.1 | 2.11.2 | 2.11.3 | 2.12.1 |
| 2.12.2 | 2.12.3 | 2.12.4 | 2.12.5 | 2.12.6 | 2.12.7 | 2.13.1 | 2.13.2 | 2.13.3 | 2.13.4 | 2.13.5 | 2.13.6 |
| 2.13.7 | 2.13.8 | 2.14.1 | 2.14.2 | 2.15 | 2.16 | 2.17 | 2.18 | 2.19.1 | 2.19.2 | 2.19.3 | 2.19.4 |
| 2.20 | 2.21 | 3.1 | 3.2 | 3.3 | | | | | | | |

பெயர் (நிறுவனம் / தனிநபர்) : ................................................
அங்கீகரிக்கப்பட்ட கையெழுத்து : ................................................
நிறுவன முத்திரை : ................................................
திகதி : ................................................

தலைவர்,
**இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம்,**
இல-80, காலி வீதி,
கொழும்பு 03.

SELADINE

# INVITATION FOR BIDS (IFB)

**THUNUKKAI PRADESHIYA SABHA, MULLAITIVU DISTRICT**

**LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT (LDSP) - LOAN NUMBER: P163305**

1) The Democratic Socialist Republic of Sri Lanka has received a loan from the World Bank (WB) towards the cost of Local Development Support Project (LDSP), and intends to apply part of the proceeds of this loan to payments under the Contract for **Continuation of Balance Work of Improvement Works for Iyangankulam Library at Iyangankulam (Completion of LDSP Works)**

2) The Chairman,Local Authority Procurement Committee (LAPC) on behalf of the Thunukkai Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for **Continuation of Balance Work of Improvement Works for Iyangankulam Library at Iyangankulam (Completion of LDSP Works)** as described below.

| No | Contract No | Contract Name | Tentative Est. Cost (Rs.Mn) | Required Min. CIDA Grade & Specialty | Contract Period (Days) | Bid Security Amount (Rs) | Bid Validity Period | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/MU/TNKPS/2024/PT-III-03 | Continuation of Balance Work of Improvement Works for Iyangankulam Library at Iyangankulam (Completion of LDSP Works) | 3.1 | C8 or above Building Construction | 84 | 40,000.00 | 07.04.2024 | 05.05.2024 |

3) Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** procedure.

4) To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty mentioned in Schedule for grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA).

5) Qualification requirements are indicated in Section 5 (Bidding Data and Contract Data) of the Bidding document.

6) Interested bidders may obtain further information from **Secretary, Thunukkai Pradeshiya Sabha,Thunukkai, Mullaitivu.**(T.P No: 0212284532, Fax No: 0212283478) and inspect the bidding documents at the address given below from **09th January 2024** until **4th February 2024** during **09:00**Hrs to **15:00**Hrs on normal working days.

7) A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Thunukkai Pradeshiya Sabha, Thunukkai, Mullaitivu.** from **09th January 2024** until **4th February 2024** during **09:00**Hrs to **15:00**Hrs on normal working days upon payment of a non-refundable fee of **Three Thousand Rupees (Rs.3,000.00)**. The method of payment will be by cash.

8) Bids shall be delivered in duplicate to the address below at **Chairman, Local Authority Procurement Committee, Thunukkai Pradeshiya Sabha, Thunukkai, Mullaitivu.** on or before**14.00** Hrs on **5th February 2024** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

9) A pre-bid meeting will be held on **23rd January 2024** at 11.00 Hrs in **Thunukkai Pradeshiya Sabha,Thunukkai, Mullaitivu.**

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC)**
**Thunukkai Pradeshiya Sabha,**
**Thunukkai, Mullaitivu.**
**09.01.2024**

# ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை

பொறியியல் திணைக்களம்

## விலைமனு அழைப்பு (IFB)

1. ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபையின் நகர ஆணையாளரினால் பின்வரும் தொழில்களுக்குரிய தகுதிவாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை வைக்கப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

2. I. தேசிய போட்டி மனு கோரல் திட்டத்திற்கமைய மனு கோரப்படுவதுடன் இக் கொள்முதலின் கீழ் உள்ள தொழில் மதிப்பீட்டு பெறுமதி வட் பெறுமதி (வட் மற்றும் ஏனைய வரி தவிர்ந்த) 50 மி.ரூபாய்க்கு குறைவதனால், அரச நிதி சுற்றுநிருப இலக்கம் 04/2016(iii) அமைய பிரதேச விருப்பம் மற்றும் CIDA தர விருப்புரிமை பொருந்தும்.

   II. இவ் கொள்முதலுக்கு அரச நிதி சுற்றுநிருபம் 03/2020 (i) க்குரியதுடன் "அரசாங்கத்திற்குரிய வியாபாரங்கள் இவ் தொழில்களுக்கு மனு முன்வைப்பதாயின், நூற்றுக்கு 05 விருப்பு வாக்கு வழங்கப்படும்."

3. இந்த ஒப்பந்தத்தைப் பெறுவதற்குத் தகுதிபெற, விலை மனுதாரர் தடுப்புப்பட்டியலில் சேர்க்கப்படக்கூடாது மேலும் கீழே உள்ள அட்டவணையிலும் விலைமனு ஆவணத்திலும் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

| தொடர் இலக்கம் (1) | வேலை விவரம் (2) | ஊஜனுயு பதிவு (3) | மீளச் செலுத்தா விலை மனுக் கட்டணம் (ரூ.) (4) | ஏல பாதுகாப்பு / பண வைப்பு (5) | விலை மனு ஆவணங்கள் மற்றும் தொலைபேசி எண் வழங்கப்பட்ட இடம் மற்றும் விநியோகம் (6) |
|---|---|---|---|---|---|
| 1 | நாவல மயானத்தில் இறுதிச் சடங்கு மண்டபத்தினை (பாளர்) நிர்மாணித்தல் (3ம் கட்டம்) – 1 பிரிவு இறுதிச்சடங்கு மண்டப கட்டிட நிர்மாணம் | C6 | 5,000.00 | 125,000.00/ 62,500.00 | நகர ஆணையாளர், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை, த.பெ. 06, ஸ்ரீ ஜயவர்தனபுர. தொலைபேசி இலக்கம் - 011- 2862173 மின்னஞ்சல் - 011-2874703 |
| 2 | நாவல மயானத்தில் இறுதிச் சடங்கு மண்டபத்தினை (பாளர்) நிர்மாணித்தல் (3ம் கட்டம்) - 2 பிரிவு இன்டர்லொக் செய்தல் மற்றும் பாதுகாப்பு வேலி நிர்மாணித்தல். | C6 | 5,000.00 | 70,000.00/ 35,000.00 | |
| 3 | உடஹமுல்ல மயானத்தில் இறுதிச் சடங்கு மண்டபத்தினை (பாளர்) நிர்மாணித்தல் (3ம் கட்டம்) - 1 பிரிவு இறுதிச்சடங்கு மண்டப கட்டிட நிர்மாணம் | C6 | 5,000.00 | 140,000.00/ 70,000.00 | |
| 4 | உடஹமுல்ல மயானத்தில் இறுதிச் சடங்கு மண்டபத்தினை (பாளர்) நிர்மாணித்தல் (3ம் கட்டம்)- 2 இறுதிச்சடங்கு மண்டப வளாகத்தினை அருகில் இன்டர்லொக் பிடித்தல், முன்பக்கம் எல்லை மதில் கட்டுதல், பாதுகாப்பு வேலி கட்டுதல், கேட் பொருத்துதல் மற்றும் நீர் வடிந்தோடும் வடிகால் அமைத்தல் | C6 | 5,000.00 | 100,000.00/ 50,000.00 | |

4. ஆர்வமுள்ள விலை மனுதாரர்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையின் பொறியியல் திணைக்களத்தின் கூடுதல் விவரங்களைப் பெறலாம் மற்றும் விலை மனு ஆவணங்களை அலுவலக நேரத்தில் இலவசமாகப் பார்க்கலாம்.

5. ஆர்வமுள்ள விலை மனுதாரர்களுக்கு அல்லது அவர்களின் முகவர்களுக்கு **2024.01.10ம்** திகதி முதல் **2024.01.30ம்** திகதி வரை யாதாயினும் ஒரு வேளை நாளில் **மு.ப.9.00** முதல் **பி.ப.3.00** வரை காலத்தில் ஒரு தொழிலுக்கு **ரூ.5000.00** விலை மனு கட்டணம் (அட்டவணையில் 04ம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) கட்டணம் செலுத்தி நிறுவனத்தின் கடிதத்தாளில் எழுத்துமூல விண்ணப்பம் செய்த பின்னர் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையின் பொறியியல் திணைக்களத்தின் விலை மனு ஆவண தொகுதியினை கொள்வனவு செய்ய முடியும்.

6. முத்திரையிடப்பட்ட விலை மனுக்களை வெவ்வேறாக கடித உறைகளில் இடப்பட்டு (முதல் பிரதி மற்றும் அதன் நகல் பிரதி) திட்டத்தின் பெயர் உறையின் மேல் இடது மூலையில் குறிப்பிட்டு **2024.01.31 பி.ப. 2.30**க்கு முன்னல் நகர ஆணையாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியில் இடவும். தாமதமாக கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலை மனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவு பெற்றவுடன் விலைமனுக்கள் உடனடியாக திறக்கப்படுவதுடன் அச் சந்தர்ப்பத்தில் விலை மனு முன்வைத்த நிறுவனங்களின் முகவர்களுக்கு பங்கேற்க முடியும்.

7. அனைத்து விலைமனுக்களும், விலைமனு பாதுகாப்பு அல்லது குறித்த பண வைப்புடன் (அட்டவணையின் 05ம் நிரலில் குறிப்பிடப்பட்டவாறு) முன்வைக்கப்பட வேண்டும்.

8. விலைமனுதாரர்கள் 1987 இலக்கம் 03 பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டியதுடன் பதிவுச்சான்றிதழின் பிரதியும் முன்வைக்க வேண்டும்

**நகர ஆணையாளர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை.**

SELACINE

## பெறுகை அறிவித்தல்

# நாவலப்பிட்டி நகர சபை

நாவலப்பிட்டி நகர சபைக்குச் சொந்தமான கீழே விபரம் தரப்பட்டுள்ள வாகனங்களுக்கு பெறுமதி மதிப்பீடு செய்து காப்புறுதி காப்பீடு பெற்றுக்கொள்வதற்கு குறித்த தகைமையுள்ள காப்புறுதி கம்பனிகளிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | வாகன இலக்கம் | வாகன வகை | தற்போது காணப்படும் காப்புறுதி காப்பீடு முடிவுறும் திகதி |
|---|---|---|---|
| 01 | RA-9604 | டிரக்டர் | 2024.01.27 |
| 02 | 37-9065 | டிரக்டர் | 2024.01.27 |
| 03 | 49-6272 | டிரக்டர் | 2024.01.27 |
| 04 | RB-5589 | டிரக்டர் | 2024.01.27 |
| 05 | RD-1599 | டிரக்டர் | 2024.02.10 |
| 06 | RD-6350 | டிரக்டர் | 2024.07.17 |
| 07 | RV-5741 | டிரக்டர் டிரெயிலர் | 2024.01.27 |
| 08 | RV-5740 | டிரக்டர் டிரெயிலர் | 2024.01.27 |
| 09 | RW-8874 | டிரக்டர் டிரெயிலர் | 2024.10.25 |
| 10 | RW-7157 | டிரக்டர் டிரெயிலர் | 2024.01.27 |
| 11 | RV-9088 | டிரக்டர் டிரெயிலர் | 2024.01.27 |
| 12 | RX-4564 | டிரக்டர் டிரெயிலர் | 2024.10.25 |
| 13 | RX-4573 | டிரக்டர் டிரெயிலர் | 2024.10.25 |
| 14 | RX-0103 | கலி பவுசர் டிரெயிலர் | 2024.07.17 |
| 15 | LL-7359 | நீர் பவுசர் | 2024.02.08 |
| 16 | 47-8812 | லொறி | 2024.01.27 |
| 17 | LL-6466 | டம்ப் டிரக் | 2024.01.28 |
| 18 | LE-7468 | கெப் வண்டி | 2024.01.27 |
| 19 | PF-5506 | கெப் வண்டி | 2023.05.10 |
| 20 | 52-6572 | கெப் வண்டி | 2024.05.27 |
| 21 | RS-1687 | மொப் கெட் | |
| 22 | ABQ-6184 | முச்சக்கரவண்டி | 2024.01.18 |
| 23 | ZB-0388 | கம்பெக்டர் | 2024.01.15 |
| 24 | ZB-0486 | கலி பவுசர் | 2024.02.25 |
| 25 | E 55 | எஸ்க்கா பெட்டரி | 2024.07.16 |

2024.01.18 முதல் 2024.01.23 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை அலுவலக நேரங்களில் நகர சபை அலுவலகத்தில், கேள்விப் பத்திரங்கள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய ஆவணங்களை ரூ. 2,000.00 (ரூபா இரண்டாயிரம்) கேள்விப்படிவக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்..

அதன் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்ட உங்களது கேள்விப் பத்திரங்களை 02 பிரதிகளுடன் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதிகளை வேறு வேறு உறைகளில் இட்டு, நகல்பிரதியென குறிப்பிட்டு இரு உறைகளையும் ஒரு உறையில் இட்டு 2024.01.24 மு.ப. 10.00 இற்கு முன்பு கிடைக்குமாறு செயலாளர், நாவலப்பிட்டி நகர சபை, நாவலப்பிட்டி என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உள்ளிடலாம். மேலும் கேள்வியுடன் உங்களது நிறுவனத்திற்கு குறித்த பதிவுச் சான்றிதழின் பிரதிகள் மற்றும் அதற்குச் சமமான காப்புறுதி காப்பீடுகளுடன் சம்பந்தப்பட்ட அரச மற்றும் தனியார் நிறுவனங்களுடன் காணப்படும் தொடர்புகளுடன் சம்பந்தப்பட்ட விபரங்களை வழங்குதல் வேண்டும்.

அன்றே மு.ப. 10.30 இற்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**டி.எம்.டி.பீ.பீ. திஸாநாயக்க,**
**செயலாளர்,**
**நாவலப்பிட்டி நகரசபை.**
**2024.01.05**

## பெறுகை அறிவித்தல்
## விலைமனுக்களுக்கான அழைத்தல்

# விவசாயம் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

### வ/ப இலங்கை உரக் கம்பனி

### வ/ப இலங்கை உரக் கம்பனிக்காக 2024/2025 ஆம் ஆண்டுகளுக்கு தோட்ட வேலை சேவை வழங்கலுக்காக விலைமனுக்களை அழைத்தல்

Bid No.: 2024/25/CFC/HPT/GS/01

1. வத்தளை, ஹுணுப்பிட்டிய, சுவர்ண ஜயந்தி மாவத்தை, 'லக்பொஹொர' வ/ப இலங்கை உரக் கம்பனிக்காக ஒரு வருட கால எல்லைக்காக தோட்டவேலை வழங்கலுக்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை வ/ப இலங்கை உரக் கம்பனியின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

2. மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் கட்டணமாக இரண்டாயிரம் ரூபாவை (2000 ரூபா) ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், வ/ப இலங்கை உரக் கம்பனியின் பதில் கடமையாற்றும் முகாமையாளரிடமிருந்து விலைமனுப் படிவம், தேவைப்படுத்தல் அட்டவணை, பொதுவான நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் ஒப்பந்தப் படிவம் ஆகியவற்றை அடக்கியுள்ள ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். 2024.01.09 ஆம் திகதியிலிருந்து 2024.01.29 ஆம் திகதியன்று வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3.30 மணிக்குமிடையில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படும்.

3. முத்திரையிடப்பட்ட விலைமனுவை அடக்கியுள்ள தபாலுறையானது 2024/25/CFC/HPT/GS/01 என அடையாளமிடப்பட்டு, தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, வ/ப இலங்கை உரக் கம்பனி, "லக்பொஹொர", சுவர்ண ஜயந்தி மாவத்தை, ஹுணுப்பிட்டிய, வத்தளை என முகவரியிடப்பட்டு பின்வரும் முகவரியில் இந்நோக்கத்திற்காக பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைமனுக்கோரல் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் கீழே திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள மூடும் திகதி மற்றும் நேரம் ஆகியவற்றிற்கு முன்னராக கிடைக்கும் பாங்கில் அனுப்பப்படல் வேண்டும்.

4. 2024.01.30 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு விலைமனுக்கள் மூடப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் திறத்தலின் போது சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

5. அனைத்து விலைமனுக்களும் ஐம்பத்து நான்காயிரம் ரூபா மாத்திரம் (54,000 ரூபா) பெறுமதியுள்ள விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இந்த நோக்கத்திற்காக வ/ப இலங்கை உரக் கம்பனியின் காசாளருக்கு செலுத்தப்பட்ட விலைமனுப்பிணை அல்லது பெற்றுக் கொண்ட பணப்பற்றுச்சீட்டானது விலைமனுவுடன் இணைக்கப்படல் வேண்டும்.

6. மேலதிக தகவலுக்கு/விபரங்களுக்கு வத்தளை, ஹுணுப்பிட்டிய, சுவர்ண ஜயந்தி மாவத்தை, 'லக்பொஹொர' வ/ப இலங்கை உரக் கம்பனியின் பெறுகை மற்றும் இறக்குமதிகளுக்கான பதில் கடமையாற்றும் முகாமையாளருடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும் (தொலைபேசி இல.: 011-2947765 / அலைபேசி: 077-2069981. தொலைநகல்: 011-2930423).

7. 2024.01.09 ஆம் திகதியிலிருந்து 2024.01.29 ஆம் திகதியன்று வரையும் எந்த வேலை நாளிலும் வேலை நேரங்களான மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3.30 மணிக்குமிடையில் வ/ப இலங்கை உரக் கம்பனியின் நிருவாகம் மற்றும் மனிதவளங்களுக்கான பதில் கடமையாற்றும் முகாமையாளரின் (077 2931244) மேற்பார்வையின் கீழ் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் பரீட்சிக்கப்படக்கூடிய வேலையாற்றும் இடப்பரப்பை பரீட்சித்து விலைமனுவிற்காக விலைமனுக்கோரலை சமர்ப்பிக்குமாறு அனைத்து விலைமனுதாரர்களும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

8. வத்தளை, ஹுணுப்பிட்டிய, சுவர்ண ஜயந்தி மாவத்தை, 'லக்பொஹொர' வ/ப இலங்கை உரக் கம்பனியின் பெறுகைப் பிரிவில் 2024 சனவரி 22 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும். அனைத்து விலைமனுதாரர்களும் விலைமனு முன்னோடிக் கூட்டத்தில் பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**வ/ப இலங்கை உரக் கம்பனி,**
**பெறுகைப் பிரிவு,**
**லக்பொஹொர, சுவர்ண ஜயந்தி மாவத்தை,**
**ஹுணுப்பிட்டிய, வத்தளை.**
**திகதி: 2024 சனவரி 09.**

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

## பனை அபிவிருத்திச் சபை

## வெற்றிடங்கள்

**பனை அபிவிருத்தி சபையின் பின்வரும் பதவிக்கு இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

### 01. முகாமையாளர்- (நிதி) MM 1-1 (1 வெற்றிடம்)

**தகைமைகள்**

**வெளியக விண்ணப்பதாரர்கள் (1 அல்லது 2 அல்லது 3)**

1. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து வணிகம்/நிதி/வியாபார நிர்வாகத் துறையில் சிறப்பு இளமாணி பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறைக் கணக்கியல் அமைப்பில் இடைநிலைத் தகுதி. அல்லது சமமான தகுதி.
2. அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை கணக்கியல் அமைப்புகளில் (ICASL/CIMA U.K/ ACCA மற்றும் CMA அல்லது அதற்கு சமமான) இணை உறுப்பினர் பதவி.
3. இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி அல்லது இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் இருந்து உயர் தேசிய டிப்ளோமாவுடன் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை கணக்கியல் அமைப்பில் இடைநிலைத் தகுதி அல்லது சமமான தகுதி.

**உடன் (with)**

4. ஒரு கூட்டுத்தாபனம் / சட்டரீதியான வாரியம் / புகழ்பெற்ற வணிக நிறுவனத்தில் நிர்வாக முகாமைத்துவ மட்டத்தில் கணக்கியல் / கணக்காய்வுத்துறையில் மூன்று (3) ஆண்டுகளுக்கு குறையாதத் தொழில்முறை அனுபவங்கள்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள் (கீழே 1 அல்லது 2)**

1. மேலே உள்ள வெளியக விண்ணப்பதாரர்களுக்கு தேவையான தகுதிகளைப் பெற்றிருத்தல்.
2. கனிஷ்ட முகாமையாளர் பதவியில் பதவியுடன் தொடர்புடைய பிரிவில் குறைந்தபட்சம் ஐந்து (5) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை வழங்கியிருந்தல்

**வயது:**

விண்ணப்பதாரர்கள் 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு அதிகமாகாமல் இருக்க வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு வயது எல்லை கிடையாது.

**சம்பள அளவு, வினைத்திறன் தடைதாண்டல் மற்றும் வேலைவாய்ப்பு கட்டமைப்பு**

சம்பளக் குறியீடு மற்றும் பணியாளர் வகையின் மாத சம்பள அளவு

MM 1-1-2016 [ரூ. 53,175-10 x 1,375-15 x 1,910 - 95,575]

**பொது:**

- இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் நல்ல உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை கொண்டிருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர் தனது வேலைத்தளமாக தலைமைக்காரியாலமான யாழ்ப்பாணத்தில் கடமையாற்றவேண்டும்.

விண்ணப்பதாரர்கள் கையொப்பமிடப்பட்ட விண்ணப்பத்துடன் தமது பிறப்பு சான்றிதழ், கல்விச்சான்றிதழ்கள் மற்றும் தொடர்புடைய பிற சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் கிராமசேவகரின் உறுதிப்படுத்தல் சான்றிதழுடன் இரு உறவினர் அல்லாதோரின் பெயர் தொலைபேசி இலக்கத்துடன் விண்ணப்பங்களை பதிவுத்தபாலின் மூலம் **தலைவர், பனை அபிவிருத்தி சபை, இல 498, காலி வீதி கொழும்பு 06** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

நேரம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்களுக்கான முடிவுத் திகதி **2024.01.23.**

அரசு துறைகள் நிறுவனங்கள்/ அரச கூட்டுத்தாபனங்கள்/ அரச சபைகள் உள்ள அதிகாரிகளிடமிருந்து விண்ணப்பங்களை அந்தந்த தலைவர்கள் மூலம் அனுப்ப வேண்டும். ஒரு பிரதியை நேரடியாக அனுப்பலாம்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி வெற்றிடத்தை குறிப்பிடல் வேண்டும். தொடர்பாடம் சான்றிதழ்களின் நகல்கள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை நிலையில் கொள்க.

பதவியை பெற்றுக்கொள்வதற்கு பிற அழுத்தத்தை பிரயோகிப்பது தகுதி நீக்கத்திற்கான காரணமாக அமையும்.

**தலைவர்,**
**பனை அபிவிருத்தி சபை,**
**இல. 498, காலி வீதி,**
**கொழும்பு 06.**

# இலங்கை வங்கி

## ஏலவிலை கூறலுக்கான அழைப்பு (IFB)

## பல்பொருள் விற்பனை நிலையத்தை வாடகைக்கு விடல்

### கேள்வி இல. BOC/PROP/P/2023/342

**இலங்கை வங்கி தலைமையகத்தின் பல்பொருள் விற்பனை நிலையத்தை மூன்று ஆண்டு காலத்திற்கு நடத்த தகுதிவாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.**

**உத்தேச பல்போருள் விற்பனை நிலையத்திற்கு பின்வரும் வசதிகள் வழங்கப்படும்.**

i. கீழ்த் தளத்தில் சுமார் 317 சதுர அடிகளைக் கொண்ட கடையும், களஞ்சிய அறையும்

ii. கடைக்கும் களஞ்சிய அறைக்குமான மின்சாரம், நீர் மற்றும் வளிச்சீராக்கி வசதிகள்

**ஏலவிலைகூறத் தகுதி பெறுவதற்கு ஏலவிலை கூறுபவர் கீழ்க்காணும் தகைமைகளை உடையவராகக் காணப்பட வேண்டும்.**

i. உரிய வர்த்தகத்திற்காக அத்தாட்சிப்படுத்தப்பட்ட வர்த்தகப் பதிவுச் செல்லுபடியான சான்றிதழைக் கொண்டிருக்க வேண்டும்.

ii. தற்போதைய நிதிநிலை மற்றும் காணப்படும் வசதிகள் குறித்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கியிடமிருந்து வழங்கப்பட்ட கடிதம் இருக்க வேண்டும்.

பூரணமான ஏலவிலை கூறல் ஆவணங்களைக் கொள்வனவு செய்ய விரும்பும் ஏல விலை கூறுவோர் திருப்பிச் செலுத்தாக் கட்டணமாக வரியுடன் **2,420.51** ரூபாவை பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும். ஏலவிலை கூறல் ஆவணங்களை **2024.01.29** ஆம் திகதி வரை வேலை நாட்களில் **0900** மணி முதல் **1500** மணியினுள் கீழ்க்காணும் முகவரியில் விண்ணப்பக் கடிதம் ஒன்றைக் கையளிப்பதன் பேரில் பெற்றுக்கொள்ள முடியும்.

ஏலவிலைகூற ஆர்வமுடையவர்கள் வேலை நாட்களில் **2024 ஜனவரி 16ஆம், 17ஆம், 18ஆம்** திகதிகளில் **0900** முதல் **1500** மணி வரை சொத்துக்களும் சேகரிப்பும் பிரிவின் பிரதான முகாமையாளரின் முன் அனுமதியினைப் பெற்றதன் பிற்பாடு இடத்தினைப் பார்வையிடலாம்.

பூரணப்படுத்தப்பட்ட ஏலவிலை கூறல்களை இலங்கை வங்கி தவிர்ந்த இலங்கையில் செயற்படும் மற்றொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியிடமிருந்து சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி, பிரதான முகாமையாளரின் பெயரில் பெற்ற ரூபா **20,000/-** பெறுமதியானதும், **2024.05.28** வரை செல்லுபடியானதுமான பிணை உத்தரவாதத்தை இணைத்து அனுப்ப வேண்டும். பண வைப்பு (மீளப் பெறக்கூடிய) மற்றும் வங்கி உண்டியல்கள் போன்றவையும் பிணைமுறிக்குப் பதிலாக ஏற்றுக்கொள்ளப்படும்.

விலைகூறல் **2024.01.30** ஆம் திகதி **1000** மணிக்கு மூடப்பட்ட மாத்திரத்திலேயே, திறக்கப்படும்.

தெரிவு செய்யப்படுபவர்கள் பிணை வைப்பாக ரூபா **500,000/-** இனை பணமாக வைப்பிலிட வேண்டும். (இப்பணமானது, ஒப்பந்த காலம் முடிவடைந்ததும் மீளளிக்கப்படும்).

**பிரதான முகாமையாளர்**
சொத்துகளும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கி
"BOC சதுக்கம்" இல.01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி: 0112 204 260, 0112 544 310, 0112 434 786
தொலைநகல்: 0112 449 629
மின்னஞ்சல்: procurement@boc.lk

1975 BOC www.boc.lk
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## கேள்விக்கான அழைப்பு (IFB)

# இலங்கை பொலிஸ்

01. இலங்கை பொலிஸ் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் (DPC) தலைவரால் கீழ்க்காணும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான தகுதியும் தகைமையும் கொண்ட கேள்விதாரர்களிடமிருந்து, முத்திரையிடப்பட்ட கேள்விகள் இப்போது கோரப்படுகின்றன.

**பொருட்களின் அட்டவணை**

| தொ. இல. | பொருட்கள் | அளவு | பெறுகை இலக்கம் | கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் மற்றும் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி | கேள்விப் பிணை முறி இல. ரூபா | கேள்விப் படிவக் கட்டணம் | | பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்ய வேண்டுமா? (ஆம்/இல்லை) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் (பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு) இல. ரூபா | பதிவு செய்யப் படாத வழங்குநர்கள் இல. ரூபா | |
| 01 | நாராஹென்பிட்டி பொலிஸ் வைத்தியசாலை கட்டிடத் தொகுதியின் சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு (ஒரு வருடத்திற்கு) | - | LA/S1/PMS/01/2024 | 30.01.2024 | 562,400.00 | 3,500.00 | 4,000.00 | ஆம் |
| 02 | குண்டசாலை பொலிஸ் வைத்தியசாலை கட்டிடத் தொகுதியின் சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு (ஒரு வருடத்திற்கு) | - | LA/S1/PMS/02/2024 | 30.01.2024 | 85,550.00 | 1,000.00 | 1,500.00 | ஆம் |
| 03 | நாராஹென்பிட்டி பொலிஸ் வைத்தியசாலைக்கு கெலவல்ல பாரை | 5832 கி.கிராம் 1080 கி.கிராம் | LA/S1/PMS/03/2024 | 30.01.2024 | 219,500.00 | 3,500.00 | 4,000.00 | ஆம் |
| **சீருடைப் பொருட்கள்** | | | | | | | | |
| 04 | Button (Large) with Ring | 10,0000 எண்ணிக்கை | LA/S1/61/2024 | 30.01.2024 | 130,500.00 | 1,000.00 | 1,500.00 | ஆம் |
| 05 | Button (Small) with Ring | 140,000 எண்ணிக்கை | LA/S1/62/2024 | 30.01.2024 | 165,900.00 | 3,500.00 | 4,000.00 | ஆம் |
| 06 | Cap Badges (PSS / PCC/WPSS/WPCC) | 15,000 எண்ணிக்கை | LA/S1/63/2024 | 30.01.2024 | 86,650.00 | 1,000.00 | 1,500.00 | ஆம் |
| 07 | Khaki Uniform Material (SGO) | 8,000 மீ | LA/S1/64/2024 | 30.01.2024 | 379,200.00 | 3,500.00 | 4,000.00 | ஆம் |
| 08 | Leather Belt (WPS/ WPC) | 5,000 எண்ணிக்கை | LA/S1/65/2024 | 30.01.2024 | 326,650.00 | 3,500.00 | 4,000.00 | ஆம் |
| 09 | Peak Cap SSP/SP (With Braiding) | 500 எண்ணிக்கை | LA/S1/66/2024 | 30.01.2024 | 94,020.00 | 1,000.00 | 1,500.00 | ஆம் |
| 10 | Women Peak caps (WCI/WIP/WSI/WPS/ WPC) | 11,000 எண்ணிக்கை | LA/S1/67/2024 | 30.01.2024 | 402,050.00 | 3,500.00 | 4,000.00 | ஆம் |
| 11 | Riding Boots | 10,000 சோடிகள் | LA/S1/68/2024 | 30.01.2024 | 2,110,500.00 | 20,000.00 | 21,000.00 | ஆம் |
| 12 | Shoulder Flashes | 270,000 சோடிகள் | LA/S1/69/2024 | 30.01.2024 | 534,600.00 | 3,500.00 | 4,000.00 | ஆம் |
| 13 | Sam Brown Belt | 5000 எண்ணிக்கை | LA/S1/70/2024 | 31.01.2024 | 868,900.00 | 12,500.00 | 13,500.00 | ஆம் |
| 14 | Khaki Socks | 370,000 சோடிகள் | LA/S1/71/2024 | 31.01.2024 | 1,665,000.00 | 20,000.00 | 21,000.00 | ஆம் |
| **தொலைத்தொடர்பாடல் பிரிவு** | | | | | | | | |
| 15 | 12V-70Ah Battery | 100 எண்ணிக்கை | LA/S1/COM/01/2024 | 31.01.2024 | 49,800.00 | 1,000.00 | 1,500.00 | இல்லை |
| 16 | Analog / Digital VHF Repeater Base for operate hybrid model (Drop link) | 01 எண்ணிக்கை | LA/S1/COM/02/2024 | 31.01.2024 | 153,200.00 | 3,500.00 | 4,000.00 | ஆம் |
| **குற்றவியல் பதிவுப் பிரிவு** | | | | | | | | |
| 17 | SOCO Equipment | பட்டியலின் பிரகாரம் | LA/S1/CRD/01/2024 | 31.01.2024 | 540,400.00 | 3,500.00 | 4,000.00 | ஆம் |
| 18 | Fingerprint Equipment | பட்டியலின் பிரகாரம் | LA/S1/CRD/02/2024 | 31.01.2024 | 138,800.00 | 1,000.00 | 1,500.00 | ஆம் |
| **போக்குவரத்துப் பிரிவு** | | | | | | | | |
| 19 | Motor Spare Parts For Toyota Corolla Altis Car | பட்டியலின் பிரகாரம் | LA/S1/TPT/01/2024 | 31.01.2024 | 92,300.00 | 1,000.00 | 1,500.00 | ஆம் |
| 20 | Motor Spare Parts For Mitsubishi Lancer JT 41 Car | பட்டியலின் பிரகாரம் | LA/S1/TPT/02/2024 | 31.01.2024 | 187,000.00 | 3,500.00 | 4,000.00 | ஆம் |
| 21 | Motor Spare Parts For Tata LPT 1109 Truck | பட்டியலின் பிரகாரம் | LA/S1/TPT/03/2024 | 31.01.2024 | 79,620.00 | 1,000.00 | 1,500.00 | ஆம் |
| 22 | Tyres for jeeps (750 x 16) (8 PR) | 500 எண்ணிக்கை | LA/S1/TPT/04/2024 | 31.01.2024 | 344,850.00 | 3,500.00 | 4,000.00 | ஆம் |
| 23 | Tyres for Three Wheelers (400 x8) | 2000 எண்ணிக்கை | LA/S1/TPT/05/2024 | 31.01.2024 | 204,600.00 | 3,500.00 | 4,000.00 | ஆம் |
| 24 | Tyres for jeeps (700 x 16) (8 PR) | 750 எண்ணிக்கை | LA/S1/TPT/06/2024 | 31.01.2024 | 444,300.00 | 3,500.00 | 4,000.00 | ஆம் |
| 25 | Motor Spare Parts For Nissan N-16 Car | பட்டியலின் பிரகாரம் | LA/S1/TPT/07/2024 | 31.01.2024 | 443,000.00 | 3,500.00 | 4,000.00 | ஆம் |

02. 2006 பெறுகை வழிகாட்டியின் 3.2 இன் கீழ் தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் நடைமுறையின் கீழ் கேள்விகள் கோரப்படும்.

03. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்தியதன் பின் கீழே தரப்பட்டுள்ள முகவரியில் அரச விடுமுறை நாட்கள் தவிர்ந்த வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை "வழங்கல் பணிப்பாளர்" அவர்களிடமிருந்து நிலையான கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

04. பூர்த்தி செய்யப்பட்ட பிணை முறிகளுடனான கேள்விப் படிவங்களை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் பி.ப. 02.00 மணி அல்லது அதற்கு முன் கொழும்பு-01, பொலிஸ் தலைமையகம், 2ஆம் மாடி, கணக்காளர் - வழங்கல் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவருக்கு கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கலந்து கொள்வதற்கு இடமளிக்கப்படும்.

05. மாதிரிப் பொருட்களை (Samples) கேள்விகள் திறப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட தினத்தில் பி.ப. 1.00 மணி அல்லது அதற்கு முன் கொழும்பு-01, பொலிஸ் தலைமையகத்தின் வழங்கல் பிரிவின் தலைமை இலிகிதருக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் தாமதமாகக் கொண்டு வரப்படும் மாதிரிப் பொருட்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

06. மாதிரிகளை ஒப்படைக்கும் போது மொடல்களின் பெயர்களைக் குறிப்பிடுதல் கூடாது.

07. சகல வழங்குநர்களும் அட்டவணையின் இறுதி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள 5 மில்லியன் ரூபாவிற்கும் மேற்பட்ட பொருட்களுக்காக 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் eroc.dre.gov.lk எனும் இணையதளத்தைப் பயன்படுத்தி முழுமையான நிகழ்நிலை (online) முறையில் பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

08. ஒரு கேள்விதாரருக்கு ஒரு கேள்விப் படிவம் மாத்திரமே வழங்கப்படும்.

09. பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விக்கு முன்னராக கூட்டங்கள் இயைபுடைய பெறுகைகள் தொடர்பில் நடாத்தப்படும்.

| இல. | பொருட்கள் | கோவை இலக்கம் | திகதி மற்றும் நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| i | 100,000 Nos. Button (Large) with Ring | LA/S1/61/2024 | 17.01.2024 - மு.ப. 10.00 | பொலிஸ் தலைமையகம் - தரை தள மாநாட்டு மண்டபம் |
| ii | 140,000 Nos. Button (Small) with Ring | LA/S1/62/2024 | 17.01.2024 - மு.ப. 10.20 | |
| iii | 15,000 Nos. Cap Badges ( PSS /PCC/WPSS/WPCC) | LA/S1/63/2024 | 17.01.2024 - மு.ப. 10.40 | |
| iv | 8,000 m , Khaki Uniform Material (SGO) | LA/S1/64/2024 | 17.01.2024 - மு.ப. 11.00 | |
| v | 5,000 Nos. Leather Belt (WPS/WPC) | LA/S1/65/2024 | 17.01.2024 - மு.ப. 11.20 | |
| vi | 500 Nos. Peak Cap SSP/SP ( With Braiding) | LA/S1/66/2024 | 17.01.2024 - மு.ப. 11.40 | |
| vii | 11,000 Nos. Women Peak caps (WCI/WIP/WSI/WPS/WPC) | LA/S1/67/2024 | 17.01.2024 - ந.ப. 12.00 | |
| viii | 10,000 Prs. Riding Boots | LA/S1/68/2024 | 17.01.2024 - பி.ப. 12.20 | |
| ix | 270,000 Prs. Shoulder Flashes | LA/S1/69/2024 | 17.01.2024 - பி.ப. 12.40 | |
| x | 5,000 Nos. Sam Brown Belt | LA/S1/70/2024 | 17.01.2024 - பி.ப. 13.00 | |
| xi | 370,000 Prs. Khaki Socks | LA/S1/71/2024 | 17.01.2024 - பி.ப. 13.20 | |
| xii | Motor Spare Parts For Toyota Corolla Altis Car (As per list) | LA/S1/TPT/01/2024 | 18.01.2024 - மு.ப. 10.00 | பொலிஸ் தலைமையகம் - தரை தள மாநாட்டு மண்டபம் |
| xiii | Motor Spare Parts For Mitsubishi Lancer JT 41 Car (As per list) | LA/S1/TPT/02/2024 | 18.01.2024 - மு.ப. 10.20 | |
| xiv | Motor Spare Parts For Tata LPT 1109 Truck (As per list) | LA/S1/TPT/03/2024 | 18.01.2024 - மு.ப. 10.40 | |
| xv | 500 Nos Tyres for jeeps (750 x 16) (8 PR) | LA/S1/TPT/04/2024 | 18.01.2024 - மு.ப. 11.00 | |
| xvi | 2000 Nos Tyres for Three Wheelers (400 x8) | LA/S1/TPT/05/2024 | 18.01.2024 - மு.ப. 11.20 | |
| xvii | 750 Nos Tyres for jeeps (700 x 16) (8 PR) | LA/S1/TPT/06/2024 | 18.01.2024 - மு.ப. 11.40 | |
| xviii | Motor Spare Parts For Nissan N-16 Car (As per list) | LA/S1/TPT/07/2024 | 18.01.2024 - ந.ப. 12.00 | |
| xix | 100 Nos. 12V-70Ah Battery | LA/S1/COM/01/2024 | 18.01.2024 - பி.ப. 12.20 | |
| xx | 01 Nos Analog / Digital VHF Repeater Base for operate hybrid model (Drop link) | LA/S1/COM/02/2024 | 18.01.2024 - பி.ப. 12.40 | |
| xxi | Cleaning & Maintenance of Narahenpita Police Hospital Complex (One year) | LA/S1/PMS/01/2024 | 18.01.2024 - பி.ப. 13.00 | |
| xxii | Cleaning & Maintenance of Kundasale Police Hospital Complex (One year) | LA/S1/PMS/02/2024 | 18.01.2024 - பி.ப. 13.20 | |

10. ஆர்வம் காட்டும் தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் பின்வரும் முகவரி அல்லது தொலைபேசி இலக்கங்களில் மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**பணிப்பாளர்,**
**வழங்கல்கள் பிரிவு,**
**2ம் மாடி, பொலிஸ் தலைமையகம்,**
**கொழும்பு – 01.**

| | | |
|---|---|---|
| கேள்விப் பிரிவு | - | 0112-013116/3117 |
| உ.பொ.அ. / வழங்கல்கள் | - | 011-2324915/ 0718592072 |
| மாதிரிகள் (Samples) பிரிவு | - | 0112013124/0718595740 |
| தொலைநகல் | - | 0112-320729 |
| மின்னஞ்சல் | - | dir.supplies@police.gov.lk |
| இணையதளம் | - | www.police.lk |
| கம்பனி பதிவாளர் திணைக்களம் | - | 011 2689215 |

**பொலிஸ் மா அதிபர்**

## சம்பியனானது கிரீன் எவஞ்சர்ஸ்



அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் 1997ஆம் ஆண்டு கல்வி பயின்ற மாணவர்களுக்கிடையில் நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கிரீன் எவஞ்சர்ஸ் அணி வெற்றி பெற்று சம்பியனாக தெரிவானது. அணிக்கு 08 பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஆலங்குளம் றகுமானியா பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை (06) இடம்பெற்றது.

சம்பியனான கிரீன் எவஞ்சர்ஸ் அணிக்கு வெற்றிக் கிண்ணமும், 30 ஆயிரம் ரூபா பணப்பரிசும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.எம் முனாஸ்தீன் வழங்கிவைத்தார்.

## தென்னாபிரிக்க டி20இல் நுவன் துஷார இணைவு



இலங்கை வேகப்பந்து வீச்சாளர் நுவன் துஷார எதிர்வரும் தென்னாபிரிக்க டி20 லீக் தொடரான எஸ்.ஏ20 இல் மும்பை இந்தியன்ஸ் கேப் டவுன் அணியில் இணைந்துள்ளார். இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஜப்ரா ஆர்சருக்கு பதிலாகவே அவர் அந்த அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

2024 இந்திய பிரீமியர் லீக் ஏலத்தில் நுவன் துஷாரவை ஏற்கனவே மும்பை இந்தியன்ஸ் அணி வாங்கிய நிலையில் அவர் அந்த அணிக் குடும்பத்தில் இடம்பெற்றுள்ளார்.

கொழும்பில், மென்பந்து கிரிக்கெட் மூலம் தனது கிரிக்கெட் வாழ்வை ஆரம்பித்த 29 வயதான துஷார கடினப் பந்து கிரிக்கெட்டுக்கு மாறி திறமையை வெளிப்படுத்தினார். மாலிங்க பாணியில் பந்து வீசும் அவர் இதுவரை இலங்கை அணிக்காக ஐந்து டி20 சர்வதேச போட்டிகளில் ஆடியுள்ளார்.

இதேநேரம் இலங்கை அணியின் மற்றுமொரு வீரரான லசித் குரூஸ்புள்ளே பங்களாதேஷில் நடைபெறவுள்ள பி.பீ.எல். தொடருக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இவர் டர்டெண்டோ டாக்கா அணிக்காக ஒப்பந்தமாகியுள்ளார். இவர் இலங்கை தேசிய அணிக்காக விளையாடாத போதும் இறுதியாக ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்ற அபு தாபி டி10 தொடரில் விளையாடியதோடு, தற்போது பி.பீ.எல். தொடருக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

## புதிய சர்ச்சையில் எம்.பியான ஷகீப்



பங்களாதேஷ் பொதுத் தேர்தலில் அந்நாட்டு கிரிக்கெட் அணித் தலைவர் ஷகீப் அல் ஹசன் வெற்றி பெற்றுள்ளார்.

பிரதான எதிர்க்கட்சி புறக்கணித்த இந்தத் தேர்தலில் ஆளும் அவாமி கட்சி சார்பில் மகுரா தொகுதியில் போட்டியிட்ட 36 வயதான ஷகீப் அமோக வெற்றியீட்டியுள்ளார். எனினும் மற்றொரு சர்ச்சையில் சிக்கி இருக்கும் அவர் ரசிகர் ஒருவர் மீது கன்னத்தில் அறையும் வீடியோ ஒன்று பிரபலம் அடைந்துள்ளது. ஷகீப் அல் ஹசனை கூட்டம் சூழ்ந்துகொண்ட நிலையில் திடீரென்று பின்னால் திரும்பிய அவர் பின்னால் இருந்து ஒருவர் மீது கண்ணத்தில் அறைவது அந்த வீடியோவில் பதிவாகியுள்ளது.

அவரது செயலுக்குக் காரணம் என்னவென்று உறுதி செய்யப்படாதபோதும் கூட்டத்தினரின் நடத்தை அவரது கோபத்தை தூண்டி இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. சகலதுறை வீரரான ஷகீப் அல் ஹசன் பொதுவெளியிலும் மைதானத்திலும் மோசமான நடத்தையை வெளிப்படுத்தி பல சந்தர்ப்பங்களில் சர்ச்சையில் சிக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தாய்வான் மக்களின் முடிவை மதிக்க சீனாவுக்கு வலியுறுத்து



சீனாவுடனான உறவுகள் மக்களின் விருப்பத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டும் என்று தாய்வான் ஜனாதிபதி சாய் இங் வென் தெரிவித்துள்ளார்.

தாய்வான் சீனாவுடன் ஒன்றிணைவது தவிர்க்க முடியாதது என்று சீனத் தலைவர் தெரிவித்துள்ள பின்புலத்தில் தாய்வான் ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தாய்வானில் ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல் இவ்வார இறுதியில் நடைபெறவிருக்கும் சூழலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், "நாங்கள் ஒரு ஜனநாயக நாடு. சீனாவுடனான உறவுகளைப் பேண ஜனநாயகக் கொள்கை மிக முக்கியமானது. அதனால் எமது மக்கள் கூட்டாக ஒரு முடிவை எடுப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்றுள்ளது. சீனா தாய்வானின் தேர்தல் முடிவுகளை மதிக்க வேண்டும். எமது நீரிணை பகுதியில் அமைதியையும் ஸ்தீரத்தன்மையையும் பேணும் பொறுப்பு இரு தரப்புக்கும் உள்ளது. எமது மக்களுக்கு அமைதி வேண்டும். ஆனால் எங்களுக்கு அமைதியுடன் கண்ணியமும் வேண்டும். எமது நிறுவனங்கள் உலகளாவிய மற்றும் பல்வகைமை கொண்ட நிறுவனங்களாக நோக்கப்பட வேண்டும்" என்றார்.

தாய்வானின் பாதுகாப்பை நவீனப்படுத்தி மேம்படுத்துவற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. அவற்றில் உள்நாட்டு நீர்மூழ்கி கப்பல் திட்டமும் அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## சர்வதேச செய்திகள்

## எதிர்க்கட்சி இன்றி ஹசீனா 5ஆவது தவணைக்கு வெற்றி

குறைந்த வாக்குப் பதிவு மற்றும் பிரதான எதிர்க்கட்சி புறக்கணித்த பங்களாதேஷ் பொதுத் தேர்தலில் பிரதமர் ஷெய்க் ஹசீனா அறுதிப் பெரும்பான்மையுடன் தொடர்ந்து நான்காவது தவணைக்கு வெற்றியீட்டியுள்ளார்.

பொதுத் தேர்தலை மத்தியஸ்த குழுவினால் நடத்தும் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதை அடுத்து பிரதான எதிர்க்கட்சியான பங்களாதேஷ் தேசிய கட்சி கடந்த ஞாயிற்றுக்கிழமை (07) நடந்த தேர்தலை புறக்கணித்திருந்தது. 76 வயதாக ஹசீனா 1996 ஆம் ஆண்டு முதல் முறை பிரதமராக தேர்வு செய்யப்பட்ட நிலையில் அவர் அந்தப் பதவிக்கு தேர்வாகி இருப்பது இது ஐந்தாவது முறையாக உள்ளது.

எனினும் இந்தத் தேர்தலில் சுமார் 40 வீத வாக்குப் பதிவே இடம்பெற்றிருப்பதோடு அதுவே 2018 இல் 80 வீதமானவர்கள் தமது வாக்குகளை பதிவு செய்திருந்தனர். ஹசீனாவின் ஆளும் அவாமி லீக் கட்சி இந்தத் தேர்தலில் 300 ஆசனங்களில் 222 இடங்களை வென்றிருப்பதாக ஆரம்ப தேர்தல் முடிவுகளில் தெரியவருகிறது. தேர்தலில் எதிர்கட்சியாக போட்டியிட்ட ஜாடியா கட்சி 11 இடங்களையே வெல்ல முடிந்துள்ளது.

ஏற்கனவே எதிர்கட்சிகள் கடுமையாக ஒடுக்கப்பட்டு வரும் நிலையில் அவாமி லீக்கின் இந்த வெற்றி நாட்டில் ஒரு கட்சி ஆட்சிக்கு இட்டுச்செல்லும் என்ற அச்சம் அதிகரித்துள்ளது.



காசாவில் கடும் தாக்குதல்களுக்கு மத்தியில்

# பிராந்தியத்தில் போர் பரவுவதை தடுப்பதற்கு பிளிங்கன் மும்முரமாக பேச்சு: போரைத் தொடர இஸ்ரேல் உறுதி



காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடரும் நிலையில் ஒருங்கிணைந்த அமைதி முயற்சி இல்லாத பட்சத்தில் இந்தப் போர் பிராந்தியம் எங்கும் பரவக் கூடும் என்று அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் எச்சரித்துள்ளார்.

பிராந்தியத்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் பிளிங்கன், நேற்று (08) ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் சவூதி அரேபியாவில் பேச்சுவார்த்தை நடத்திய பின் இஸ்ரேலுக்கு விரைந்துள்ளார். பிராந்தியத்தில் போர் பரவும் அச்சுறுத்தலை தவிர்க்கும் முயற்சியாகவே பிளிங்கன் ஐந்து நாள் விஜயமாக பிராந்தியத்திற்கு பயணித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜோர்தான் மற்றும் கட்டார் நாடுகளுக்குச் சென்ற அவர் இந்த வாரத்தில் மேற்குக் கரை மற்றும் எகிப்துக்கும் பயணிக்கவுள்ளார்.

"பிராந்தியத்தில் பெரும் பதற்றமான தருணம் ஒன்றாக இது உள்ளது. அதிக பாதுகாப்பற்ற மற்றும் வேதனைகளுக்குக் காரணமான எளிதாகப் பரவக்கூடிய மோதல் ஒன்றாக இது உள்ளது" என்று அபூதாபி செல்வதற்கு முன் டோஹாவில் செய்தியாளர்களை சந்தித்த பிளிங்கன் கூறினார்.

டோஹாவில் பேசிய அவர் மேலும் கூறும்போது, தற்போது நான்கு மாதங்களை தொட்டிருக்கும் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போரில் இடம்பெயர்ந்துள்ள பலஸ்தீனர்கள் தமது வீடுகளுக்கு திரும்ப அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இஸ்ரேல்–ஹமாஸ் போர் வெடித்தது தொடக்கம் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை மற்றும் இஸ்ரேலின் லெபனானுடனான வடக்கு எல்லையில் கொந்தளிப்பு நீடிப்பதோடு யெமனின் ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் செங்கடல் மற்றும் இஸ்ரேலை இலக்கு வைத்து 100க்கும் அதிகமான ஏவுகணை மற்றும் ஆளில்லா விமானத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

காசா போர் வெடித்தது தொடக்கம் நான்காவது முறையாக பிராந்தியத்திற்கு சென்றிருக்கும் பிளிங்கடன் இன்று இஸ்ரேலிய தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இஸ்ரேலுக்கு பல பில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்களை வழங்கும் அதன் நெருங்கிய கூட்டாளியாக அமெரிக்கா இருந்தபோதும், இந்தப் போரினால் உயர்ந்து வரும் உயிரிழப்பு எண்ணிக்கை கவலையை அதிகரித்திருப்பதோடு சர்வதேச அழுத்தத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மதிக்கும்படியும் காசாவில் அவசர நடவடிக்கையாக உதவிகளை அதிகரிக்கும்படியும் பிளிங்கன் இஸ்ரேலை கேட்கவிருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

### மேலும் 73 பேர் பலி

எனினும் காசா மீதான இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதல்களில் கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 73 பேர் கொல்லப்பட்டு 99 பேர் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு நேற்று தெரிவித்தது. மத்திய காசாவில் டெயிர் அல் பலாஹ்வுக்கு அருகில் இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதல் ஒன்றில் எட்டுப் பேர் கொல்லப்பட்டனர்.

"நான் படுக்கையில் இருந்து விழிக்கும்போது இது ஒரு பயங்கரக் கனவு என்று நினைத்துக் கொண்டே விழிக்கிறேன். என்றாலும் இது உண்மையானது" என்று காசா குடியிருப்பாளரான 51 வயது நபீல் பாத்தி கூறுகிறார். "எமது வீடு மற்றும் எனது மகனின் வீடு தகர்க்கப்பட்டிருப்பதோடு எமது குடும்பத்தில் 20 பேர் உயிர்த் தியாகம் செய்துள்ளனர். நான் உயிருடன் இருந்தால் எங்கு போவது என்று எனக்குத் தெரியவில்லை" என்றும் அவர் குறிப்பிட்டார்.

எகிப்துடனான எல்லையை ஒட்டிய தெற்கு காசாவின் ரபாவில் கடந்த ஞாயிறன்று கட்டாரைத் தளமாகக் கொண்ட அல் ஜசீரா தொலைக்காட்சி நிறுவனத்தின் இரு ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர். அவர்கள் சென்று கொண்டிருந்த கார் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஏ.எப்.பி மற்றும் ஏனைய ஊடக நிறுவனங்களுக்காகவும் பணியாற்றி வரும் முஸ்தபா துரியா மற்றும் அல் ஜஸீராவின் காசா அலுவலகத் தலைவரின் மகன் ஹம்ஸா வயீல் தஹ்து ஆகியோரே கொல்லப்பட்டுள்ளனர். இஸ்ரேலிய வான் தாக்குதல்களில் அல் ஜஸீராவின் காசா அலுவலகத் தலைவர் ஏற்கனவே தனது மனைவி மற்றும் மேலும் இரு குழந்தைகளை இழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

போர் ஆரம்பித்தது தொடக்கம் அதிகப் பெரும்பான்மையான பலஸ்தீனர்களான குறைந்தது 79 ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்கள் கொல்லப்பட்டிருப்பதாக ஊடகவியலாளர்களின் பாதுகாப்புக்கான அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு வாரங்களாக மத்திய காசாவை இலக்கு வைத்து இஸ்ரேலின் தாக்குதல்கள் தீவிரம் அடைந்திருப்பதோடு பீரங்கி குண்டுகள் இரவு வானை ஒளியூட்டி வருவதாக அங்கிருக்கும் குடியிருப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் காசாவில் கொல்லப்பட்டவர்கள் எண்ணிக்கை 22,835 ஆக அதிகரித்துள்ளது. இதில் பெரும்பாலானவர்கள் சிறுவர்கள் மற்றும் பெண்களாவர். மேலும் 58,416 பேர் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை மத்திய காசாவில் உள்ள அல் அக்ஸா தியாகிகள் மருத்துவமனையின் நூற்றுக்கணக்கான நோயாளர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்கள் காணாமல்போயுள்ளனர். பொரும்பாலான மருத்துவப் பணியாளர்கள் மற்றும் சுமார் 600 நோயாளர்கள் அந்த மருத்துவ வளாகத்தில் இருந்து அறியப்படாத இடம் ஒன்றுக்கு வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்ட நிலையில் அவர்கள் எங்கே உள்ளனர் என்பது தெரியவில்லை என உலக சுகாதார அமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளன.



### ஹமாஸ் அதிருப்தி

அமெரிக்காவின் செல்வாக்கை பயன்படுத்தி அவசர போர் நிறுத்தம் ஒன்றுக்கு இஸ்ரேலுக்கு அழுத்தம் கொடுக்குமாறு ஜோர்தான் மன்னர் அப்துல்லாஹ், பிளிங்கனை வலியுறுத்தி இருப்பதோடு, இஸ்ரேல் இராணுவ நடவடிக்கையை தொடர்வது பேரழிவு விளைவுகளை ஏற்படுத்தும் என்று எச்சரித்துள்ளார்.

எனினும் தொடர்ந்து போரிடப் போவதாக இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உறுதியாகக் குறிப்பிட்டுள்ளார்.

"ஹமாஸை ஒழிப்பது, அனைத்து பணயக்கைதிகளும் திரும்புவது மற்றும் இஸ்ரேலுக்கு காசா தொடர்ந்தும் அச்சுறுத்தலாக இல்லை என்பதை உறுதி செய்வது ஆகிய அனைத்து இலக்குகளையும் நாம் அடையும் வரை போர் நிறுத்தப்படாது" என்று ஞாயிறன்று இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தை ஆரம்பித்து பேசும்போது நெதன்யாகு வலியுறுத்தினார். "இதனை நாம் எமது நண்பர்கள் மற்றும் எதிரிகள் ஆகிய இருவருக்கும் கூறிக் கொள்கிறோம்" என்றார்.

எனினும் காசாவில் ஏற்பட்டுள்ள அழிவுகள் சர்வதேச அளவில் போர் நிறுத்தத்திற்கான அழைப்பை வலுக்கச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேல் மீது சர்வதேச நீதிமன்றத்தில் இனப்படுகொலை வழக்குத் தொடுத்திருக்கும் தென்னாபிரிக்காவுக்கு அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகள் இன்னும் ஆதரவு வழங்காதது தொடர்பில் ஹமாஸ் அதிகாரியான சமி அபூ சுஹரி, எக்ஸ் சமூகதளத்தில் அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

"இதற்கு தீர்வு கிடைக்கும் என்று நம்புகிறோம், இல்லையெனில் இந்த உத்தியோகபூர்வ மௌனம் காசாவில் எஞ்சியிருப்போரையும் ஒழிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஓர் ஆணையாக அமையும்" என்று அவர் கூறினார்.

தென்னாபிரிக்கா தொடுத்திருக்கும் இந்த வழக்கு எதிர்வரும் ஜனவரி 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் ஹேகிலுள்ள சர்வதேச நீதிமன்றத்தில் பகிரங்க விசாரணைக்கு வரவுள்ளது. இதற்கு துருக்கி, மலேசியாவுடன் தற்போது பொலிவிய நாடும் தென்னாபிரிக்காவுக்கு ஆதரவை வெளியிட்டுள்ளன.

### மேற்குக் கரை கொந்தளிப்பு

காசாவுக்கு வெளியில் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் வன்முறை அதிகரித்திருப்பதோடு கடந்த சில வாரங்களில் இஸ்ரேலிய துருப்புகள் மற்றும் குடியேறிகளுடனான மோதல்களில் நூற்றுக்கணக்கான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஜெனின் நகரில் துருப்புகள் மீது தாக்குதல் நடத்திய பலஸ்தீன போராளிகளுக்கு எதிராக வான் தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் கூறியது. இதில் ஏழு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக பலஸ்தீன அதிகாரிகள் கூறியுள்ளனர்.

ஜெனின் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது இஸ்ரேலிய எல்லை பொலிஸ் அதிகாரி ஒருவரின் வாகனம் வெடிகுண்டு தாக்குதலுக்கு இலக்கான நிலையில் அவர் கொல்லப்பட்டதாக இஸ்ரேலிய அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

மறுபுறம் மேற்குக் கரையில் மோதுவதற்கு வந்ததாக சந்தேகிக்கப்படும் வாகனம் ஒன்றின் மீது இஸ்ரேலிய படையினர் சூடு நடத்தியபோது மற்றொரு காரில் இருந்த பலஸ்தீன சிறுமி ஒருவர் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் அவசர சேவை பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜனவரி மாதம் 9ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.